Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 13/50

දිනමුරසු වාරමලර් ஆக.26-செப்.01, 2001

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 422

## ஆழம்பார்க்கும் முயற்சிக்கு புலிகள் வைத்த ஆப்பு!



## டயானா மகனுக்கு எழுதிய கடைசிக் கடிதம்

## தாதாக்கள் பிடியில் தமிழ்த் திரையுலகம்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# ஆன்மீகம்

## மூன்று குற்றங்கள்

வியாசர் தான் செய்த மூன்று குற்றங்களுக்காகத் தன்னை மன்னிக்கும்படி இறைவனிடம் பிரார்த்தனை செய்கிறார். அவ்வ என்ன? அவர் வேண்டுகிறார். "இறைவனே! நீங்கள் உருவம் இல்லாதவர். ஆனால் எனது தியானத்தில் நான் உங்களை உருவம் கொண்டவராகப் பாவித்து தியானம் செய்திருக்கிறேன்.

நீங்கள் வாக்குக்கும் மனதுக்கும் எட்டாதவர். ஆனால் நானோ! உங்கள்மீது தோத்திரங்கள் பாடியிருக்கிறேன். நீங்கள் எங்கும் வியாபித்திருப்பவர். ஆனால் நானோ பல திருத்தலங்களுக்கு யாத்திரை செய்து உங்களை வழிபட்டு வணங்கியிருக்கிறேன்.

அதனால் இறைவா! என்மீது கருணை கூர்ந்து என்னுடைய இந்த மூன்று குற்றங்களையும் மன்னித்து எனக்கு அருள் புரியும்படி பிரார்த்திக்கின்றேன்."

ரீ.குணவர்த்தன- களுவாஞ்சிக்குடி.



## ஆகுமாக்கப்பட்டவற்றையே உண்ணுங்கள்!

விசுவாசிகளே! தானாகச் செத்ததும், இரத்தமும், பன்றியின் இறைச்சியும் அல்லாஹ் அல்லாதவருக்காக (அறுப்புப் பிராணிகளில்) எதற்குப் பெயர் கூறப்பட்டதோ, அதுவும் கழுத்து நெரிபட்டுச் செத்ததும், அடிபட்டுச் செத்ததும், மேலிருந்து கீழே விழுந்து செத்ததும், கொம்பால் குத்திக்கொண்டு செத்ததும், (சிங்கம், புலி, சிறுத்தை போன்ற) வன விலங்குகள் தின்றவையும் உங்களுக்கு விலக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், பசியின் கொடுமையினால் நிர்ப்பந்திக்கப்பட்டு மேலே கூறப்பட்ட விலக்கப்பட்டவைகளை புசித்துவிட்டால் அது குற்றமாகாது. ஏனென்றால், நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவன் ஆவான்.

(நபியே! உண்ணுவதற்கு) தங்களுக்கு ஆகுமாக்கப்பட்டவை எவை, என்று உம்மிடம் கேட்கின்றனர்; அதற்கு நீர் கூறுவீராக: (சுத்தமான) நல்ல பொருட்கள் உங்களுக்கு ஆகுமாக்கப்பட்டுள்ளன. அல்லாஹ்வின் பெயரைக் கொண்டு அறுக்கப்பட்ட ஆடு,மாடு, கோழி, ஒட்டகம் போன்றவை மிகவும் விரும்பக் கூடியன. (அல் குர்ஆன் 5:120)

வை.எம்.தாஹிர்கரீம், கல்முனை-06.

## மன்னிப்பு

"நீங்கள் நின்று ஜெபம் பண்ணும்போது, ஒருவன் பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள். நீங்கள் மன்னியாதிருப்பீர்களானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவும் உங்கள் தப்பிதங்களை மன்னியாதிருப்பார்." இன்று உங்கள் காரியத்தை சிந்தித்துப் பாருங்கள். "எனக்கு யார் மீதும் வருத்தமோ, கசப்போ, வெறுப்போ, பகையோ இல்லை என்று உங்களால் சொல்ல முடியுமா? யாவரோடும் கை குலுக்கி உங்களால் வாழ்த்துதல் சொல்ல முடியுமா?

இல்லாவிட்டால் நீங்கள் மனந்திரும்ப வேண்டும். "நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையை செலுத்த வந்து, உன் பேரில் உன் சகோதரனுக்கு குறை உண்டென்றால், அங்கே தானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்து விட்டுப் போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து." (மத்தேயு 5:23,24)

உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்; உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களை பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்."

கர்த்தருடைய கிருபை உங்களோடிருப்பதாக. ஆமென்

சகோ: டி.யேசுராஜா-ஹட்டன்.

## கவிதைப் போட்டி இல.422



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 01.09.2001

கவிதைப் போட்டி இல.422
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.419

### பரிசுக்குரிய கவிதை

### பைசா

பைசாவை
விட்டுவிடுங்கள்!
இங்கே
பைசா இல்லாது சரியும்
மக்களை கொஞ்சம்
நிமிர்த்தி விடுங்கள்!

பி.சி.அன்ரன்-மட்/கூளாவடி

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### நிமிர்த்துவார் எங்கே...?

கோபுரம் சாய்ந்த தென்று
வேடிக்கைக்காக..
நிமிர்த்துகிறவர்கள் இங்கே!-ஆனால்
நித்தம்.. நித்தம்...
கண்ணீரும் செந்நீரும் சிந்துவதை
வாடிக்கையாகக் கொண்ட
ஈழதேசத்தை நிமிர்த்துவார் எங்கே..?

ச.மகேந்திரன்-சிலாபம்.

### வாலிபம் திரும்பியது

சாய்ந்தும் விழாத
கோபுரத்தைக் கண்டதும்
முதுமைக்கும் வந்ததோ வாலிபம்!

சுரேந்திரவடிவேல் பவித்திரா-
சங்கமான் கண்டி.

### எட்டாவது அதிசயம்!


பலர் கூடி அமைத்திட்ட
'பைசா' கோபுரத்தை
முட்டாக நின்று நீங்கள்-
நிமிர்த்தி விட்டால்
எட்டாவது அதிசயம்தான்
போங்கள்!

வி.இராகுலன்-ஆரையம்பதி-01.

### வாழ்வு

சாய்ந்து போன கோபுரங்கள்
சரிந்து போகும் மனித மனங்கள்
தாங்கிக் கொள்ளும் கரமிருந்தால்
தரணியில் மடிந்து போகும்
மர்மங்கள் இல்லை.

தெ.லோஜனா, கொழும்பு-06.



### பங்கு

சாய்ந்து வரும் கோபுரத்தை
நிமிர்த்திடலாம் என்றெண்ணி
கைகள் பல ஊன்றி நின்று
காரியமுமாற்றுகின்றாய்
தமிழ் மானம் நிலை நிற்க
தமிழினமும், நிமிர்ந்துயர
உன் பங்கு எதுவாகும்?
அதை உரைத்தல் கடனாகும்!

லீலாவதி சிவலிங்கம்-
திருகோணமலை.

### எச்சரிக்கை

ஏய்.. ஆடவனே!
நீ சாய்ந்த கோபுரத்தை
நிமிர்த்தப் பார்க்கின்றாய்,
கவனம்..
பின்னால் ஒரு பெண்
உன்னை தள்ளிவிடப்
பார்க்கிறாள்.

ஏ.ஜி.எம்.நிவாஸ்-
வாழைச்சேனை.

### விழுந்திடாதே நீ

அதிசயமே!
நீ அசந்து போகாதே
உன்னை அரவணைக்க
அத்திவாரமாய்
நாமிருப்போம்.!

செல்வி.க.பரமேஸ்வரி-
தலவாக்கலை.

### சமாதானம்

எங்கிருந்தோ பார்வையிட வந்த
பார்வையாளனோ பைசா
கோபுரத்தை நிமிர்த்த முயல்கின்றான்
இங்கே சாய்ந்திருக்கும்
சமாதானத்தை நிமிர்த்த
யாரும் இல்லை இப்போது!

சு.கிஷோக்குமார்-கோளாவில்-03.

### வெல்வது கடினம்

நிஜமான பலதை இழந்து
நிழலை நம்பி-அதை
காக்க முற்பட்டால்
மிஞ்சப் போவது
பூமியில் எதுவுமில்லை..,
வேண்டாம் விட்டிடுங்கள்
சக்தி அதிகம் மிஞ்சியதை
வெல்வது கடினம்...!

இ.மஞ்சு-வவுனியா.

### பைசா

நீங்கள் புன்னகையுடன்,
பைசா கோபுரத்தை
நிமிர்த்துகிறீர்கள்!
நாம்..
சரிந்திருக்கும் 'பைசா' வையே
நிமிர்த்தவியலாமல்
தவிக்கிறோம்!

த.ஹரிஹரன்-கண்டி.

### மனிதா!

சரியும் கோபுரத்தை ஏந்துவதில்
ஏனன சிரிப்பா உனக்கு,
என்றோ ஒரு நாள்
நீயும் சரியத்தான் போகிறாய்
என்பதை மனதில் வைத்துக் கொள்.

தீபா-சிவனொளிபாதம்.

# வாசக[ர்] சாலை

### எப்படி சொல்வேன்

வியாழன் எப்போது
விடியும் என்று?
விரைவாகச் சென்று..!
முரசைப் பார்த்தவுடன் தான்
எனக்கு விடியும்-அதில்
வாசகர்களின் ஆக்கங்கள்
நாட்டு நடப்புக்கள்!
எத்தனை அம்சங்கள்-எப்படி
சொல்வேன் சொல்லால் உன்
பெருமையை.
வழிமேல் விழி வைத்து
காத்திருக்கும் எனைபோல்
வாசகர்களுக்கு -நீ
சுமந்து வரும் ஆக்கங்கள்
பல்லாயிரம் ஆண்டு வாழ,
வாசகர் சார்பில் வாழ்த்து
கிறேன்.

என்.சுகுமாரன் சுபா-பெயாவெல்.

### ஈழத்தமிழர் அவமதிப்பு

முரசு 416 வாசக(ர்) சாலைப் பகுதியில் மேற்கூறிய தலைப்பில் ஒரு காலத்தில் ஓமான் நாட்டில் ஈழத்தமிழர் அவமதிக்கப்பட்டதாக நான் எழுதியதைப் பிரசுரித்தீர்கள்.

வாசகர்களின் உணர்ச்சியை வெளிப்படுத்திப் பிரசுரித்தமைக்கு முரசுக்கு நன்றி.

தற்செயலாக பாராளுமன்ற அங்கத்தவரின் பாதுகாவலரை நேற்று சந்தித்தேன். முன் பாதிக்கப்பட்ட அவருக்கு இப்பிரசுரத்தைக் கூறினேன்.

அவர் சொன்னார் "நான் எழுதிய யாவும் உண்மை. ஆனால் 'ஓமான்' நாடல்ல. 'குவைத்' நாடு" என்று.

எனது வயது முதிர்ச்சிகாரணமாக மறதியில் எழுதியதற்கு முரசிடமும், வாசகர்களிடமும் மன்னிப்புக் கேட்கிறேன். விசேடமாக முன் ஓமான் நாட்டின் தூதரத்தில் பணிபுரிந்தவர்களிடமும் மன்னிப்புக்கேட்கிறேன்.


வாசகர்கள் 'ஓமான்' நாட்டுத் தூதரகத்துக்குப் பதிலாக 'குவைத்' நாட்டுத் தூதரகம் என்று திருத்தி வாசிக்கவும். நன்றி!

இரா.கனகசபாபதி-தெஹிவளை.

திதித்திரு(மு)க்கும் முரசில்,
தலைப்புச் செய்தி முதல்
கடைசி மலைப்புச் செய்திவரை
படு சூடாகவே உள்ளது.
பலர் இரசித்துப் படிப்பது 'தேன்கிண்ணம்'
நான் ரசித்துக்குடிப்பதோ 'தேன்கிண்ணம்',

'இலக்கிய நயத்'தின் புது நயம். எஸ்.டி.சிவநாயகத்தின் 'ஈழத்தின் இணையற்ற எழுத்துச் சிற்பி' தொடர் அரசியலை ஓர் அலசு அலசுகிறது. மற்றும் 'சிறுகதை' தொடர்கதை 'சிந்தியா பதில்' அனைத்தும் சுப்பர். முரசு புதுநயம் பல படைக்க என் வாழ்த்துக்கள்.

பி.விக்னேஸ்வரன்-ஹட்டன்.



எம்.பி.எம் பர்ஸானின் கட்டுரையில் வன்முறையின் ஊடாக வன்முறை வளரும் என்னும் கூற்று கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்த வன்முறைகள் ஏன் இடம் பெற்றுள்ளன என சிந்திக்கவைத்தது. உதாரணமாக, அன்று காலிமுகத்திடலில் அகிம்சை முறையிலான சத்தியா கிரகத்தை குண்டர்கள் படை கொண்டு தாக்கியமையும், 83 ஆடி கலவரத்தையும் குறிப்பிடலாம். இவ்வாறான வன்முறைகள் இடம்பெற வித்திட்டவர்களே இன்று அதை அனுபவித்து வருகின்றனர்.

பி.ரெங்கநாதன் அசோக்குமார்-டிக்கோயா.

'அனிதாவின் காதல்'கள், 'உங்கள் பக்கம்' என்பன முரசிற்கு மேலும் அழகைச் சேர்க்கின்றன. மேலும் ஒரு புதிய பகுதியை ஆரம்பித்தால் சிறப்பாக இருக்கும். மற்றும் 'ஆன்மீகம்' பகுதியில் தொடர்ந்து சிலருடைய துணுக்குகளே வருகின்றன.

இதனைத்தவிர்த்து ஏனையோரினது கருத்துக்களையும் பிரசுரிக்க வேண்டும். இது நிச்சயம் முரசு வாசகர்களின் எண்ணிக்கையை இன்னும் பல மடங்காய் அதிகரிக்கும்.

ஏ.எல்.முஹம்மட் றஸ்மி-அட்டாளைச்சேனை-02.

### வரவேற்கத்தக்கது

முரசு இதழ் 416 பார்த்தேன். உண்மையில் எல்லையில்லா மகிழ்ச்சியடைந்தேன். காரணம்:- முரசில் சில மாற்றங்களை அவதானிக்க முடிந்தது..

அதில்... வாசக நெஞ்சங்களுக்காக 'உங்கள் பக்கம்' என்ற அம்சமும், முரசின் மாற்றமும் வரவேற்கத்தக்கது. பாராட்டுக்கள்.

அதுபோல் முரசு இதழ் 417 சுமந்துவந்த அனைத்து அம்சங்களும் அருமையாக இருந்தன. 'எக்ஸ்ரே ரிப்போர்ட்', 'புதிய அரசியல் யாப்பு' தலைப்பிலான அலசுவது 'இராஜதந்திரி', 'சிறுகதை'களான.. 'பந்து', பூவரசு', 'நினைப்பதெல்லாம்' போன்றவைகள் பிரமாதமாக இருந்தன. பாராட்டுக்கள்.

உன் புதிய மாற்றத்துக்கும் உன் தரமான சேவைக்கும் என்றென்றும் வாழ்த்தும் அன்பு வாசகன்.

புதிய காத்தான்குடி-முஸம்மில்-குவைத்.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# உங்கள் பக்கம்

## தொடரும் பேரினவாதம்

வெள்ளையனிடமிருந்து நம் நாட்டிற்கு சுதந்திரத்தினை பெற அன்று சிங்களத் தலைமைகளுடன் சிறுபான்மையின தமிழ், முஸ்லிம் தலைவர்களும் பங்கு கொண்டனர். பின் 1948ம் ஆண்டு நம்தேசம் சுதந்திர நாடான நாள் முதல் மாறி மாறி அரசமைத்த குழு பேரினவாத ஆட்சிகளும் சிறுபான்மையினரான தமிழ், முஸ்லிம்களை அச்சுறுத்தியும், பல வழிகளிலும் அழுத்தம் கொடுத்தும் பேரினவாத போக்கிலேயே நடந்து கொண்டனர்.

தனிச் சிங்கள சட்டத்தினை கொண்டு வந்தது, தமிழரின் பிரஜாவுரிமை பறித்தது, நாடு கடத்தியது முதல் சிறுபான்மை இனங்களுக்குச் சொந்தமான உடமைகளை பறிமுதல் செய்து விரட்டியடித்தது. சிறுபான்மையினரின் பொருளாதாரத்தில் கைவைத்தது. இன்னும் இனங்களுக்கிடையே இனவாதத் தீயை மூட்டி விட்டு அதில் பேரினவாதிகள் குளிர் காய்ந்தது என இரு மிதவாத கட்சிகளும் இன்றைய நாள் வரை அடக்கு முறையை தொடர்ந்த வண்ணமே உள்ளன.

இதற்கு உதாரணமாக அண்மைய பிந்துனுவெவ, மாவனல்லை சம்பவங்களைச் சொல்லலாம். இப்படி பின்னணி நோக்கின் பல உண்மைகள் புலப்படும். இவ்வாறு சிறுபான்மையரை அடக்கி ஆள முற்பட்டு அது இன்று பாரிய யுத்தமாக பரிணமித்து நாடு அதல பாதாளத்தில் விழுந்திருக்கும் இத்தருணத்திலும் பேரினவாத கழுகுகள் இன்னும் கண் திறக்கவில்லை. இன்னும் நச்சுக் கருத்துக்களை கக்கிய வண்ணமுள்ளன. இதில் மகா சங்கத்தினர் (மதத் தலைவர்கள்) எனக்கூறிக் கொள்ளும் காவிகளின் பங்கு மிக கூடுதலாகவே உள்ளது.

இன்று இத் தேசத்தில் எல்லா இன மக்களும் ஒரு தாய் மக்களாக, சமவுரிமையோடு சமனாக நோக்கப்படுகின்றனரோ. அன்றே உண்மையான சுதந்திரம், சுபீட்சம், விடிவு பிறக்கும் என்பதை பேரினவாதிகள் உணர வேண்டும்.

இல்லையெனின் இந் நாட்டின் எதிர்காலம் வெறும் சூனியமே.

ஜே.எம்.பாரீஸ்-தெல்தெனிய.

## மௌனமாகவே இருக்கும் மன்னார் RLL தொலைபேசிகள்

மன்னார் தீவுப் பகுதியில் Sri Lanka Telecom யினால் வழங்கப்பட்டுள்ள கம்பியற்ற தொலைத் தொடர்பு சேவையில் (RLL) பெரிதும் சிக்கல் நிலவுகின்றது. RLL மூலம் 8 தொலைபேசியே ஒரே தடவை தொடர்பில் இருக்கும் வசதியை கொண்டு 50க்கும் மேற்பட்ட தொலைபேசிகளுக்கு இணைப்பு வழங்கியுள்ளனர். இவ்விணைப்பு வழங்கப்பட்ட இடங்கள் (தீவுப்பகுதியில்) தாராபுரம் தொடக்கம் தலைமன்னார் வரை. இங்குள்ள Communicationகளின் பாவனை அதிகமாக இருப்பதால், ஏனைய தொலைபேசிகள் Dial Tone அற்ற நிலையில் 16க்கு மேற்பட்ட மணிநேரம் (நாள் ஒன்றுக்கு) உள்ளது. 26500/- செலுத்தி இணைப்பை பெற்றுக் கொண்டவர்கள் எந்தவித பலனும் அற்றவர்களாக உள்ளனர். இதற்குரிய முழு காரணமும் Sri Lanka Telecom தான் பலமுறை முறைப்பாடுகள் செய்தும் இதற்கு ஒரு தீர்வு இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. இதனால் இம்மக்கள் விசனமடைந்து உள்ளனர். இத் தொலைபேசி இணைவின் கீழ் வைத்திய சாலைகள், மீனவ சங்கம், தேவாலயம், பதில் நீதவான் இல்லம் (பேசாலை) என்பன அமைந்துள்ளது.

Dial Tone அற்ற நிலையில் அழைப்புக்கள் உள்வரவோ அல்லது வெளிச்செல்லவோ முடியாது.

ஒரு தொலைபேசி வாடிக்கையாளர்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):- 074-513266

# சென்றல் கேம்ப் தாக்குதலில் உயிரிழந்த புலி உறுப்பினர்களுக்கு

# பழுகாமத்தில் அஞ்சலி! கைப்பற்றிய பொருட்களும் காட்சிக்கு வைப்பு!

அம்பாறை சென்றல் கேம்ப் விசேட அதிரடிப்படை முகாம் திங்கட்கிழமை இரவு புலிகளின் தாக்குதலுக்குள்ளானதில் கொல்லப்பட்ட படைவீரர்களின் எண்ணிக்கை 25வரை அதிகரித்துள்ளது.

திங்களன்று இரவு 11 மணியளவில் புலிகளின் தாக்குதல் அணிகளினால் தாக்கியழிக்கப்பட்ட சென்றல் கேம்ப் முகாமிலிருந்த ஆயுதங்களையும், மின்சார உபகரணங்களையும் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள பழுகாமத்தில் காட்சிக்கு வைத்துள்ளனர்.

இந்த தாக்குதலின்போது கொல்லப்பட்ட தமது இயக்க உறுப்பினர்கள் இருவரது சடலங்களையும் புலிகள் அங்கு அஞ்சலிக்காக வைத்துள்ளனர். முகாம் தாக்குதலுக்குள்ளானபோது அதில் 100க்கு மேற்பட்ட படையினர் இருந்துள்ளனர். இவர்களுள் விசேட அதிரடிப்படையினர், பொலிஸார், ஊர்காவற்படையினர் ஆகியோர் அடங்குகின்றனர்.

இந்த தாக்குதலின்போது இடையில் அகப்பட்ட இரண்டு பொதுமக்களும் உயிரிழந்தனர். காயங்களுக்குள்ளான சுமார் 30 படையினர் அம்பாறை, கண்டி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மூவர் உயிரிழந்ததுடன் மேலும் பலர் ஆபத்தான நிலைமையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் நடைபெற்று புலிகளின் அணிகள் திரும்பிச் செல்லும்வரை சமீபமாக உள்ள முகாம்களிலிருந்து மேலதிகப் படையினர் உதவிக்கு வந்து சேரவில்லை என்றும் முகாமிலிருந்தவர்களும் புலிகளின் மீது எதிர்த்தாக்குதல் நடத்துவதைவிட பின்வாங்கிச்சென்று உயிர் காப்பதிலேயே கவனம் செலுத்தியுள்ளனர்.

சென்றல் கேம்ப் முகாமை முற்றாக அழித்து தீ வைத்த புலிகள் அங்கிருந்த சிறிய ரக ஆயுதங்களையும் ஏனைய தளபாடங்களையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

புலிகளால் கொண்டு செல்லப்பட்ட படையினரின் 5 சடலங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக செவ்வாய்க்கிழமை பிற்பகல் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்தப் பகுதியை சுற்றிவளைத்து படையினர் பாரிய தேடுதல் நடவடிக்கையொன்றை மேற்கொண்டுள்ளனர்.

இதனையடுத்து அருகிலுள்ள சிறிய கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் சிலர் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்குமுன்னரும் இந்த சென்றல் கேம்ப் முகாம் தாக்குதலுக்குள்ளாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## கட்டுநாயக்க தாக்குதல் தொடர்பாக மேலும் 9 பேர் கைது

கட்டுநாயக்க விமானப் படைத்தளம் மற்றும் விமான நிலையம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஒரு முஸ்லிம் இளைஞன் உட்பட 9 பேரை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைது செய்து விசாரணைகளுக்காகத் தடுத்து வைத்துள்ளனர்.

நீர்கொழும்பு கிராண்ட் வீதி யூட் நெல்சன், நீர்கொழும்பு சென். ஜோசப் வீதி சண்முகதேவர் கிருஷ்ணமேனன், நீர்கொழும்பு சென்.ஜோசப் வீதி டபிள்யூ.சதீஸ்குமார், வவுனியா மில் வீதி முஹம்மத் ஹரீம் ரயிஸ், வவுனியா சூசைப்பிள்ளையார் குளம் என்.நாகேந்திரன், கொழும்பு ஸ்ரீ கதிரேசன் வீதி எம்.ராமநாத், பண்டாரவளை நாயகே தோட்டம் ஜே.வின்சன், கொட்டகலை லொக்கி டிவிசன் ஐயாசாமி சிவகுமார், மஸ்கெலியா எம்.சிங்கராஜா ராஜா ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் அனைவரும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் விசாரணைகளுக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

## விமான நிலையத்தில் தங்கநகைகளை அடகுவைக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட சென்னைப் பயணிகள்

இலங்கையிலிருந்து சென்னை செல்வதற்காக கடந்த திங்கட்கிழமை கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்திற்கு வந்த பயணிகள் பலர் தமது காப்புறுதி கட்டணத்தை செலுத்துவதற்காக தங்க நகைகளை விமானநிலைய வங்கிகளில் அடகு வைப்பதைக் காணக் கூடியதாக இருந்தது.

கட்டுநாயக்க தாக்குதலின் பின்னர் பலமடங்கு அதிகரிக்கப்பட்டிருக்கும் விமானப் பயணிகளுக்கான புதிய காப்புறுதிக் கட்டணத்தின்கீழ் எண்பது டொலராக இருந்த சென்னை விமானக்கட்டணத்திற்கு மேலதிகமான காப்புறுதிக் கட்டணம் ஒன்றையும் பயணிகள் செலுத்தவேண்டியுள்ளது.

இந்தக் கட்டண அதிகரிப்பு கடந்த இருவாரங்களுக்கு முன்னரே அறிவிக்கப்பட்டிருந்தபோதும், திங்கட்கிழமையிலிருந்தே நடைமுறைக்கு வந்தது.

மூன்று வாரங்களுக்கு முன்னர் சென்னைக்கான விமான டிக்கெட்டுக்களை கொள்வனவு செய்திருந்த பயணி ஒருவர் சுமார் 7000 ரூபாவரை தற்போது மேலதிகமாக செலுத்தவேண்டும். இதனையறியாது விமானநிலையத்திற்கு வந்த பலரே தமது தங்க நகைகளை அடைவு வைத்துவிட்டு பயணம் செய்யவேண்டி ஏற்பட்டது.

இதற்கிடையில் இந்தியாவுக்கு யாத்திரை மேற்கொண்ட பக்தர்கள் பலர் அங்கிருந்து நாடு திரும்புவதற்கு போதிய பணமின்றி தவிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க தாக்குதலுக்கு முன்னதாக இந்தியா சென்ற இவர்கள் திரும்பி வரவேண்டுமாயின் மேலதிக காப்புறுதி கட்டணத்தைச் செலுத்தியே டிக்கெட் பெறவேண்டியுள்ளது. இதனால் பலர் சங்கடத்துக்குள்ளாகி இருக்கின்றனர்.

## தென் கிழக்கு பல்கலைக்கழக பகுதிநேர விரிவுரையாளர் தெரிவு குறித்து புகார்

இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் விரிவாக்கற் கற்கைநெறி பிரிவினால் நடாத்த உத்தேசிக்கப்பட்டிருக்கும் தொடர்பு சாதனத்துறை டிப்ளோமா பாடநெறிக்கான பகுதிநேர விரிவுரையாளர் தெரிவு தொடர்பாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கற்கை நெறியை ஆரம்பிக்கும் முன்னோடி நடவடிக்கையாக அண்மையில் தேசியப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்து விண்ணப்பம் கோரியதன்மூலம் பகுதிநேர விரிவுரையாளர் தெரிவுக்கான நேர்முக பரீட்சை அட்டாளைச்சேனையிலுள்ள விரிவாக்கல் கற்கை நெறி பிரிவில் நடைபெற்றது.

குறிப்பிட்ட பதவிக்கான பத்திரிகை விண்ணபத்தில் கல்வித் தகைமை குறித்தோ அனுபவம் குறித்தோ முறையான கேள்விகள் எதுவும் எழுப்பப்பட்டிருக்கவில்லை. வெறுமனே 'தகைமையும் அனுபவமும் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்' என்றே குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளித்திருந்த பலர் பத்திரிகைத் துறையுடன் எந்தவகையிலும் தொடர்பில்லாதவர்கள் என்றும் அரசியல்வாதிகளின் செல்வாக்குள்ளவர்கள் என்றும் இத்தகையவர்களால் எவ்வாறு தொடர்பு சாதனத்துறையை மாணவர்களுக்கு கற்பிக்க முடியும் எனவும் வினா எழுப்பப்பட்டுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் நடத்தப்படும் தமிழ் மொழிமூலம் பத்திரிகைத் துறை டிப்ளோமா பாடநெறியின் தரம் குறித்து மூத்தசெய்தியாளர்கள் மத்தியில் திருப்தியின்மை காணப்படும் சூழ்நிலையில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பாடநெறியும் அவ்வாறு அமைந்திருக்கக்கூடாதென்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## ரயில் விபத்தில் உயிரிழந்தோரில் அடையாளம் காணப்படாத 6 சடலங்கள் மருத்துவமனையில்!

உடரட்டமெனிக்கே ரயில் விபத்தில் கொல்லப்பட்டவர்களின் ஆறு சடலங்கள் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை. அடையாளம் காணப்பட்ட ஒன்பது சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

சந்திரசேன (கம்பளை), மொஹமட் ரசாக் (நாவலப்பிட்டிய), வீரையா சண்முகநாதன் (அக்கரபத்தனை), உத்தமபுத்திரன் (வெலிஓயா), மஹிந்த (வெள்ளவத்தை), பெருமாள் ரவீந்திரன் (கினிகத்தேனை), பிரசன்ன (கினித்தேனை), பெசில் பெர்னாண்டோ (மெட்டிக்கந்த), துவான் அஸ்மிர் (கெகிராவ), ஆகிய சடலங்களே அடையாளம் காணப்பட்டுள் என. எஞ்சிய சடலங்கள் குருணாகல் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் இருவர் சிகிச்சை பெற்று வருகின்றனர். ரங்கன், சேதப்பா, சோளமுத்து, றோகினி, தரங்கனீ லங்கா ஆகியோர் குருணாகல் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றனர்.

அடையாளம் காணமுடியாத சடலங்களை அடையாளம் காணும் பொருட்டு பொலிஸார் பொது மக்களின் உதவியைக் கோரியுள்ளனர்.

பதுளையிலிருந்து கொழும்பு நோக்கி வந்து கொண்டிருந்த உடரட்ட மெனிக்கே ரயில் அளவ்வை புத்கம என்ற இடத்தில் தடம்புரண்டது. இவ்விபத்தில் 19 பேர் கொல்லப்பட்டு 90க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இவ்விபத்து தொடர்பாக விசாரணை நடாத்துவதற்கு விசேட விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

கடும் வேகமும், அதிகளவு பயணிகள் சென்றதாலேயே ரயில் தடம்புரண்டிருப்பதாக ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரிய வந்திருப்பதாக இவ்விபத்து குறித்து விசாரணை மேற்கொண்டுவரும் வடமேல் மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் மெதிவக தெரிவித்துள்ளார்.

## வாக்குவாதம் வலுத்ததில் யாழ். மேயருக்கு கல்வீச்சு

கோயிலில் கடலை வியாபாரம் செய்யும் பெண்ணுடனான வாக்குவாதம் மேயருக்கு கல்வீச்சு நடத்தும் அளவுக்கு விபரீதமாக முடிந்த சம்பவம் யாழ்ப்பாணத்தில் நடை பெற்றுள்ளது.

நல்லூர் கந்தன் திருவிழாவின்போது அனுமதிக்கப்படாத இடத்தில் கடலை வியாபாரம் செய்து கொண்டிருந்த பெண் ஒருவருடன் யாழ். மாநகர சபை அதிகாரிகள் வாக்குவாதத்தில் ஈடுபட்டு அவரது கடலை சுருள்களை தூக்கி எறிந்துள்ளனர். இதனையடுத்து அந்த பெண்ணுக்கு ஆதரவாகப் பேசிய பொது மக்கள் சிலருக்கும் மாநகரசபை அதிகாரிகளுக்கும் இடையில் வாக்குவாதம் வலுப்பெற்றபோது, ஆத்திரமடைந்த சிலரால் அருகில் இருந்த மதில் ஒன்றும் இடித்து வீழ்த்தப்பட்டுள்ளது. இதனை அறிந்து அந்த இடத்துக்கு வந்த மேயர் ரவிராஜ் மீதும் ஏனைய மாநகரசபை அதிகாரிகள் மீதும் பொதுமக்கள் கற்களைவீசி தாக்கியுள்ளனர்.

இதனால் இருவர் சிறுகாயங்களுக்கு உள்ளான போதும் ரவிராஜுக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை.

## ராசிக்குழு உறுப்பினருக்கு புலிகள் மரணதண்டனை!

மட்டக்களப்பு-கிரான்பகுதியில் இளைஞர் ஒருவரைப்புலிகள் சுட்டுக் கொன்றனர். கடந்த ஞாயிறன்று வீட்டிலிருந்து புலிகள் இவ்வாலிபரை அழைத்துச் சென்று சுட்டுவிட்டு சடலத்தையும் மரண தண்டனைக்கான காரணத்தை விளக்கும் அட்டையையும் வீதியோரம் போட்டு விட்டுச் சென்றுள்ளனர்.

வேலாயுதம் நாகேஸ்வரன் (26) என்பவரே புலிகளால் மரண தண்டனை வழங்கப்பட்ட நபராகும். றாசிக் குழுவினருடன் செயற்பட்ட இவர் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டவர் என்று புலிகள் இவரின் கொலைக்குக் காரணம் கூறியுள்ளனர்.

## மலையக தமிழ் யுவதி மடுவில் கடத்தல்!

நீர்கொழும்பு கட்டானை பிரதேசத்தில் இருந்து மடு தேவாலயத்துக்கு யாத்திரை மேற்கொண்ட 15 வயது தமிழ் யுவதி ஒருவர் ஆயுதம் தாங்கிய குழுவொன்றினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

கட்டானை பெர்னாண்டோ என்பவரது குடும்பத்தினருடன் வசித்து வந்த நானுஓயா பிரதேசத்தை பிறப்பிடமாகக் கொண்ட சுப்ரமணியம் என்பவரது மகளான இந்த யுவதி, கடந்த 12ம் திகதியன்று மடு சென்றபோது தேவாலயத்துக்கு அருகில் உள்ள தண்ணீர்த்தாங்கி ஒன்றுக்கு பக்கத்தில் வைத்து கடத்தப்பட்டிருக்கிறார்.

இந்தக் கடத்தல் சம்பவம் குறித்து பெர்னாண்டோ தம்பதியினர் மடு தேவாலயத்தின் பிலிப் தந்தையாருக்கும், மன்னார் மறை மாவட்ட ஆயருக்கும் அறிவித்துள்ளனர். அவர்கள் மூலமாக புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனுக்கும் தமிழ்ச்செல்வனுக்கும் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், இதுவரையில் எந்தப்பதிலும் கிடைக்கவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் திருமதி பெர்னாண்டோ தொடர்ந்து மடுவிலேயே தங்கியிருந்து குறிப்பிட்ட யுவதியை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாக தெரியவருகிறது.

## தலைமுடிக்குள் கைக்குண்டு சலூன்காரர் கைது!

மட்டக்களப்பு-வாழைச்சேனை-முஸ்லிம் பகுதிக்குள் உள்ள சலூன் கடையிலிருந்து பிஸ்டல் துப்பாக்கியும் கைக்குண்டுகளும் மீட்கப்பட்டன.

பொதுமக்கள் கொடுத்த தகவல் ஒன்றையடுத்து வாழைச்சேனையில் உள்ள சலூன் ஒன்றைத் திடீரென முற்றுகையிட்ட பாதுகாப்புத் தரப்பினர், அங்கு கத்தரிக்கப்பட்ட முடிகள் போடப்பட்டிருந்த கோணிப்பையொன்றிலிருந்து ஒரு பிஸ்டல் மற்றும் கைக்குண்டுகள் இரண்டையும் கைப்பற்றினர். சலூன் கடைக்காரரான தமிழ் வாலிபர் கைது செய்யப்பட்டார்.

நகர்ப் பகுதிகளுக்குள் ஊடுருவி பாதுகாப்புப் படையினர் மீதும் பொலிஸார் மீதும் சமயோசிதமாக பிஸ்டல் தாக்குதலை நடத்திவிட்டு சந்தேகிக்க முடியாத இவ்வாறான இடங்களிலேயே தமது ஆயுதங்களை புலிகள் மறைத்துவைக்கின்றனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## யாழ். நகரில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணத்தில் செப்டம்பர் எட்டாம் திகதி இடம் பெயர் சேவையொன்றை நடாத்தப் போவதாக சமூக சேவைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

அன்றைய தினம் யாழ்ப்பாணத்திலுள்ள 65 வயதிற்கு மேற்பட்ட முதியோருக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படுவதோடு மூக்குக் கண்ணாடி தேவைப்படுவோருக்கு அவை விநியோகிக்கப்படும். செவிப்புலனற்றோருக்குரிய நலன்புரி அலுவல்களும் நடைபெறும்.

மேலும் விதவைகளுக்குத் தையல் இயந்திரங்களும், ஊனமுற்றோருக்கு முச்சக்கர வண்டிகளும், மீனவர்களுக்கான உதவிகளும் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## எலும்புக்கூட்டின் கையில் துப்பாக்கி

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களின் எல்லையிலுள்ள புளுகுணாவ மங்களகம காட்டுப் பகுதியில் விசேட அதிரடிப் படைவீரர் ஒருவரின் எலும்புக்கூடு ஒன்று துப்பாக்கியுடன் மீட்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதி காடுகளில் விறகுத் தேடிச் சென்ற பொதுமக்கள் விசேட அதிரடிப்படையினரின் சீருடை தரித்த எலும்புக் கூட்டைக் கண்டு, அதுபற்றிப் படையினருக்கு அறிவித்துள்ளனர்.

படையினர் அந்த இடத்திற்குச் சென்று, எலும்புக் கூட்டையும் துப்பாக்கியையும் மீட்டெடுத்தனர். எனினும் இன்னமும் எலும்புக்கூடு யாருடையது என அடையாளம் காணப்படவில்லை.

## பெயர் விவரங்கள் புலிகளால் அறிவிப்பு

திருக்கோணமலையில் கடற்படையினருடன் ஏற்பட்ட மோதலில் தமது மேஜர் தரத்திலான ஒருவரும், லெப்டினன்ற்கள் 5பேரும் வீரச்சாவடைந்ததாக புலிகளின் குரல் வானொலி அறிவித்தது.

மேஜர் அ.மதன் (செல்வமுருகன் - யாழ்ப்பாணம்), லெப்டினன்ற்களான ம.தர்ஷினி (பவித்திரா-திருக்கோணமலை), க.சந்திரவதனி (காந்தரூபி-திருமலை) க.நாகமலர் (கலைச் செல்வி-திருமலை), பா.விஜயகுமார் (இசைச் செல்வன்-திருமலை) மற்றும் யோ.ராஜேஸ் (கார்த்திக்-திருமலை) ஆகியோர் வீரச்சாவடைந்ததாகப் புலிகள் அறிவித்துள்ளனர். இந்தச் சம்பவத்தின் போது தாம் கடற்படையினரின் ஏ.கே. எல்.எம்.ஜி ரகச் சுடு கலன் ஒன்றைக் கைப்பற்றியதோடு, மூன்று கடற்படையினரைச் சுட்டுக் கொன்றதாகவும் தெரிவித்துள்ளனர்.

## சிங்கள மீனவர்களின் இயந்திரங்கள் அபகரிப்பு

மட்டக்களப்பு ஆழ் கடல் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சிங்கள மீனவர்களின் படகு இயந்திரங்கள் நான்கு புலிகளால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன.

கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த சமயம் அங்கு வந்த புலிகள் இயக்கத்தினர் அந்த மீன் பிடிப் படகுகளில் பூட்டப்பட்டிருந்த வெளியிணை இயந்திரங்களை மாத்திரம் கழற்றி எடுத்துச் சென்றிருக்கின்றனர்.

தென்பகுதியைச் சேர்ந்த மீனவர்களால் தமது பிரதேசத்திலுள்ள கடல் வளங்கள் அளவுக்கதிகமான முறையில் பயன்படுத்தப்படுவதாக மட்டக்களப்பு மீனவர்கள் முறையிட்டுவந்துள்ளனர். தென் பகுதி மீனவர்களின் அத்துமீறலைத் தடுத்து நிறுத்துமாறு கோரி மட்டக்களப்பு மீனவர்கள் சமீப சில நாட்களுக்கு முன்னர் ஆர்ப்பாட்டமொன்றையும் நடத்தியிருந்தனர்.

இந்நிலையிலேயே சிங்கள மீனவர்களின் படகு இயந்திரங்கள் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன.

## கைது

மட்டக்களப்பு-குடும்பிமலைக் கோட்டப் பகுதியிலுள்ள விளாவெட்டுவானில் புலிகளின் ட்ரக் வண்டி மோதியதில் ச.மிதுரன் (4) எனும் சிறுவன் நசுங்குண்டு கொல்லப்பட்டான்.

ட்ரக் வாகனத்தைச் செலுத்திச் சென்ற சாரதியான புலி உறுப்பினர் புலிகளால் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

## முஸ்லிம்கள் அணியும் தொப்பியுடன் தமிழ் இளைஞர்கள் கைது

மட்டக்களப்பு-ஓட்டமாவடியில் முஸ்லிம்கள் தொழுகைக்காக அணியும் தொப்பியுடன் காணப்பட்ட இரு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

திடீரென இராணுவத்தினர் இவர்களைச் சோதனையிட்டபோது, அவர்களிடம் முஸ்லிம்கள் அணியும் தொப்பி காணப்பட்டுள்ளது.

தொடர்ந்து அவர்களை விசாரணை செய்ததில் அவர்களுக்கு முஸ்லிம்கள் அணியும் தொப்பிகளைக் கொள்வனவு செய்து கொடுத்திருந்த ஓட்டமாவடி முஸ்லிம் இளைஞர் ஒருவருக்கும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து முஸ்லிம்களின் தொப்பியை அணிந்து நடமாடும் சந்தேகத்துக்குரியவர்கள் குறித்து எச்சரிக்கையாய் இருக்குமாறு பாதுகாப்புத்தரப்பினர் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளனர். இச்சம்பவம் கடந்த 16ம் திகதி இடம் பெற்றது.

# முரசம்

## இயற்கையும் சோதிக்கிறது

***அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.***

நாட்டின் தென் பகுதியில் ஏழு மாவட்டங்களில் தொடரும் கடும் வரட்சியினால் சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சமூக சேவைகள் அமைச்சின் தகவல்களின்படி அம்பாந்தோட்டை மொனராகலை, பதுளை, அம்பாறை, புத்தளம், குருணாகலை, இரத்தினபுரி, ஆகிய மாவட்டங்களில் நிலைமை மிக மோசமாக இருக்கிறது.

இதற்கிடையில் வட பகுதியில் வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலும் வரட்சி காரணமாக மக்களின் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு அன்றாட வாழ்வில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக இந்த பிரதேச விவசாய சங்கங்களால் அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

நாட்டில் எத்தனை வகையான பிரச்சனைகள் காணப்பட்டாலும் இவ்வாறான இயற்கை அநர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் தாமதம் காட்டக் கூடாது.

நாடு மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது ஏற்றுமதி வருமானம் பாதிக்கப்பட்டிருக்கிறது.

போர் செலவீனம் அதிகரித்துள்ளது விலைவாசிகள் உயர்ந்துள்ளன சுற்றுலாத்துறை வீழ்ச்சி கண்டுள்ளது.

ஆனால் இவற்றை காரணம் காட்டி வரட்சியினால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கான நிவாரண உதவிகளை வழங்குவதில் தயக்கம் காட்டக் கூடாது!

சுதந்திரத்துக்குப் பின்னர் வரட்சிகாரணமாக பாரிய பஞ்சமும் குறிப்பிடத்தக்க அளவு பட்டினிச்சாவுகளும் இந்த நாட்டில் இதுவரை நிகழ்ந்ததில்லை.

தென் பகுதியின் தற்போதைய வரட்சி 50 வருடங்களின் பின்னர் ஏற்பட்ட மோசமான நிலைமை என்றும் நிவாரண உதவிகளை வழங்குமாறும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் கடந்தவாரம் பகிரங்க வேண்டுகோள் விடுத்திருந்தது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் பொறுப்பை அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு ஒப்படைத்து விட்டு அரசாங்கம் அக்கறையின்றி இருக்க முடியாது!

திரைசேரியின் நிலைமை கவலைக்கிடமாக இருந்தாலும், வரட்சியினால் பட்டினியை எதிர்நோக்கியிருக்கும் மக்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்ப அரசாங்கத்துக்கு இருக்கிறது.

இது விடயம் தொடர்பாக சமூகசேவைகள் அமைச்சினால் ஏற்கனவே சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

அவற்றை தாமதமின்றி பாதிக்கப்பட்ட சகல பகுதிகளுக்கும் விஸ்தரிக்க வேண்டும்.

இயற்கையைத் தவிர மற்றைய் அனைத்தாலும் சோதனையை எதிர்கொள்ளும் இந்த நாட்டு மக்களை இப்போது இயற்கையும் சோதிக்கிறது!

■ ■

*மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை*

***என்றென்றும் அன்புடன்,***

---

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# சென்றல் கேம்ப் முகாம் மீது புலிகளின் அதிரடித்தாக்குதல்

கட்டுநாயக்க தாக்குதலால் சேதமாக்கப்பட்ட விமானங்களுக்குப் பதிலாக புதிய விமானங்களை கொள்வனவு செய்யும் நிதி வசதி இலங்கை விமானப் படையிடம் இல்லை என்று கூறப்பட்டு 24 மணி நேரம் கழிவதற்குள்ளேயே கைவசம் இருந்த மற்றொரு விமானமும் விழுந்து நொருங்கியது.

கட்டுநாயக்க சீதுவை பகுதியில் மிக்-27 ரக விமானம் வீழ்ந்து நொருங்கியதில் அதைச்செலுத்திய உக்ரெய்ன் நாட்டு விமானமோட்டி உடல் சிதறிப் பலியானதோடு மேலும் 7 பேர்வரை காயமடைந்தனர். இது இயந்திரக் கோளாறு காரணமாக ஏற்பட்ட விபத்து என்று படைத் தரப்பு கூறிவந்தாலும், இந்த விமானம் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகியிருக்கலாம் என்ற கூற்றை முற்றாக நிராகரிக்க எவரும் தயாரில்லை. சீதுவையில் வைத்து ஒரு விமானத்தை சுட்டுவீழ்த்தும் திறனும் வசதியும் புலிகளுக்கு இல்லை என்று கூறமுடியாது. அதனால் அவ்வாறான சந்தேகத்தை அலட்சியம் செய்ய முடியாதென உயர்மட்ட விமானப்படை அதிகாரிகள் கருதுகின்றனர்.

குறிப்பிட்ட விமானம் விபத்துக்குள்ளானதற்கு முன்னைய தினம் சீதுவையில் விமான எதிர்ப்பு ஏவுகணைகளில் பயன்படுத்தப்படும் உதிரிப்பாகங்கள் சிலவற்றை படையினர் கண்டெடுத்திருந்தனர். கட்டுநாயக்க விமானப் படைத் தள தாக்குதலுக்காக இவற்றை கொண்டு வந்த புலிகள் ஏதேனும் காரணத்தினால் இடையில் விட்டுச் சென்றிருக்கலாம் என படையினர் கருதிய போதும், அது தொடர்பான விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்திலேயே இந்த மிக்-27 ரக விமானம் விபத்துக்குள்ளாகியிருக்கிறது.

விமானத்தின் கறுப்புப் பெட்டி மேலதிக விசாரணைகளுக்காக உக்ரெய்னுக்கு அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது. வடக்கு கிழக்குக்கு வெளியில் விமானங்களை சுட்டு வீழ்த்தும் அளவு புலிகளின் தாக்குதல் திறன் விஸ்தரிக்கப்பட்டால், அது மிகவும் ஆபத்தானதாக அமையும் என்பதை உணர்ந்தே இந்த விமான விபத்து தொடர்பான முழு விவரத்தையும் அறியும் முயற்சியில் படைத்தரப்பு ஆர்வம் காட்டி வருகின்றது.

இதற்கிடையில் இலங்கை அரசாங்கம் சர்வதேச ரீதியில் தடைசெய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களை கொள்வனவு செய்துள்ளதாக பெரும் சர்ச்சை கிளப்பப்பட்டுள்ளது. இந்த ஆயுதக் கொள்வனவில் பெருமளவு ஊழல் நடைபெற்றிருப்பதாக கொழும்பிலிருந்து வெளிவரும் 'சண்டேலீடர்' ஆங்கில பத்திரிகை தகவல் வெளியிட்டிருந்தது. இதனையடுத்தே இரசாயன ஆயுதங்கள் தொடர்பான விபரங்கள் வெளியாக ஆரம்பித்தன.

ஊழல் குற்றச்சாட்டுக்கு மத்தியில் இப்போது சர்ச்சை கிளப்பப்பட்டாலும் கூட இந்த இரசாயன ஆயுதக் கொள்வனவு விவகாரம் ஒரு வருடத்துக்கும் மேல் பழமையானது.

ஆர்.பி.ஏ ஷேர்மல் ரொகட் (R.P.O-A. Shermel Rocket) என்ற இந்த வகை ரொகட் செலுத்தும் கருவியை அரசாங்கம் வாங்கியிருப்பதாக புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். ஆனால் தடை செய்யப்பட்ட இரசாயன ஆயுதங்கள் எதனையும் தாம் இதுவரை கொள்வனவு செய்ததில்லை என்றும் இனிமேலும் அவ்வாறான உத்தேசம் எதுவும் கிடையாதெனவும் அரச தரப்பு திட்டவட்டமாக நிராகரித்துள்ளது.

ஆனால் பத்திரிகைச் செய்திகளின்படி ஒரு வருடத்துக்கு முன்னர் இந்த ரொகட் செலுத்திகளை கொள்வனவு செய்ய படைத்தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து சென்ற நாடுகளில் ஒன்றான பெலாரஸில் இருந்து இவற்றை வாங்க முயற்சி மேற்கொள்ளப்பட்ட போது அது பயனளிக்காத நிலையில் உக்ரெய்னிடம் இருந்து இந்த வகை ஆயிரம் ரொக்கட்டுக்கள் வாங்க முயற்சிக்கப்பட்டிருக்கிறது.

முதலில் பெலாரஸிடம் இருந்து வாங்கி இதனை படையினருக்கு விநியோகிக்க முன்வந்த ஆயுதத்தரகரால் அது சாத்தியப்படாத பட்சத்தில் இவை உக்ரெய்னிடம் இருந்து பெறப்பட்டுள்ளன. இதனால் ஆத்திரமடைந்த முன்னைய ஆயுதத் தரகரே இது தொடர்பான விவரங்களைப் பத்திரிகைக்கு வழங்கியிருப்பதாக கூறப்படுகின்றது.

சாதாரணமாக இதனை 'நெருப்புக் கக்கி' (Flame Thrower) எனவும் அழைப்பர். 1984ல் இந்த ரொக்கட் அபிவிருத்தி செய்யப்பட்டாலும் 1988ல் தான் சேவைக்கென இது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

துப்பாக்கி ரவை அல்லது ஏவுகணையைப் போன்று செயற்படும் இதனை, Advanced Fuel-Air Explosive (உயர் எரிபொருள் வாயு வெடிபொருள்) தொழில்நுட்பத்திற்கேற்ப ரஷ்யர்கள் அமைத்துள்ளனர்.

இந்த ரொக்கட், ஒரு குழாயைக் கொண்டதாயுள்ள போதிலும் பயன்பாட்டுக்கு வசதியாக இரு குழல்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு இவற்றைப் பயன்படுத்த முடியும். ஒரு முறை இவை பயன்படுத்தப்பட்டதும் பின்னர் கை விடப்படும். இந்த ரொக்கட் குழாயின் முன்புறத்தில், இலக்கைத் துல்லியமாகக் கண்டறியும் உருப்பெருக்கிக் கண்ணாடி பொருத்தப்பட்டிருக்கும். இதனை தோளில் வைத்து இயக்க முடியும்.

பொதுவாக இந்த ரொக்கட்டுக்களை, திடீர் தரை மிறக்கக் கமாண்டோக்களும் (Ari Borne), கடல் தாக்குதல் துருப்புக்களும் (Marine Assault Troops), வலு நிலைகளை அழிப்பதற்குப் பயன்படுத்துவர். இவற்றின் மூலம் பதுங்கு குழிகள் மற்றும் இலகு கவச வாகனங்களைத் தகர்க்க முடியும். ஆற்றுப் படுக்கைகளில் பனிப் பாறைகளையும், பனிப்பாறைச் சரிவுகளையும் தாக்கி அழிக்கமுடியும். இதைவிட, மூடிய கட்டடமொன்றைத் தாக்கவும் முடியும்.

ஆயிரம் மீற்றருக்குள் இருந்து தாக்கும் போது இழப்புக்களை ஏற்படுத்தும். எனினும் 600 மீட்டர் தூரமே இதன் முழுப் பயனையும் பெறக்கூடிய தாக்குதல் தூரமாகும். 93 மி.மீ. விட்டம்கொண்ட ரொக்கட்டின் முனைகள் 2.1 கிலோ மிகை எரிதிறன் மிக்க கலவையைக் கொண்டது. இதைவிட, 2.1 கிலோ எரியூட்டும் குண்டும் அல்லது 2.3 கிலோ எரிகுண்டு மற்றும் புகைக் கல வையையும் கொண்டது.

இதன் மூலம் மேற்கொள்ளப்படும் தாக்குதலில் 80 கன சதுர மீற்றரினுள்ளிருக்கும் அனைத்தும் அழிந்து போகும். இதன் தாக்கம் 122 மி.மீ. ஆட்டிலறிக் குண்டின் தாக்குதலின் விளைவுக்குச் சமனானது.

கட்டடம் ஒன்றின்மீது, குறிப்பாக தடித்த சுவர்களைக் கொண்ட அறையொன்றின்மீது இதன் மூலம் மேற் கொள்ளப்படும் தாக்குதலால் அதனுள் இருப்பவர்களின் உடல் பெரிதும் எரியும் நிலையேற்படும். செச்சினிய தீவிரவாதிகளுடனான போரில் பயன்படுத்துவதற் காக ரஷ்யாவினால் அபிவிருத்தி செய்யப்பட்ட இந்த ரொகட் செலுத்திகளை உக்ரெயினில் உற்பத்தி செய்து வருகின்றது.

☆★☆

யாழ்.குடாநாட்டை புலிகள் கைப்பற்றலாம் என்று செய்திகள் வெளியாகி அதை தடுப்பது எப்படியென்று படைத்தரப்பு மந்திராலோசனை நடத்திக் கொண்டிருக்கும் சமயத்தில் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் கிழக்கில் பாரிய தாக்குதல் ஒன்றை புலிகள் நடத்தி முடித்துள்ளனர்.

யாழ் நகரம் விரைவில் கைப்பற்றப்படும் என்று கூறும் துண்டுப்பிரசுரங்கள் புலிகளால் விநியோகிக்கப்பட்டிருப்பதாக கடந்த வாரம் பகிரங்கப்படுத்தப்பட்டது. தங்களுக்கு அவ்வாறான துண்டுப்பிரசுரம் எதுவும் கிடைக்கவில்லை என யாழ்ப்பாண மக்கள் தெரிவித்தபோதும், இலண்டனில் இருந்து செயற்படும் வானொலி சேவை ஒன்றை மேற்கோள் காட்டி இணையச் சேவை ஒன்று புலிகளின் இந்த எச்சரிக்கையை வெளியிட்டிருந்தது. எவ்வாறெனினும் இந்த அறிவுறுத்தலை நிராகரிக்க படைத்தரப்பு தயாரில்லை. அதனாலேயே கடந்த வாரம் உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் குழுவொன்று யாழ்ப்பாணம் சென்று அங்குள்ள பாதுகாப்பு நிலவரங்களை ஆராய்ந்தது. கூட்டுப்படைகளின் தளபதி ஜெனரல் றொஹான் தலுவத்த உட்பட சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் குடாநாட்டில் புலிகள் ஊடுருவலாம் என்று எதிர்பார்க்கப்படும் பகுதிகளுக்குச் சென்று நிலைமையை ஆராய்ந்து ஆலோசனை வழங்கினர்.



ஆனால் வழமை போலவே கவனம் ஓரிடத்தில் இருக்கும் போது, எதிர்பாராத இடத்தில் தாக்கும் தமது உத்தியில் புலிகள் இம்முறையும் வெற்றி பெற்றுள்ளனர்.

சிறிது காலமாக கிழக்கில் புலிகளும் படையினரும் ஆளாளுக்கு துண்டுப் பிரசுரம் விநியோகித்துக் கொண்டிருந்தனர். தாம் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பிக்கப்போவதாகவும் அதனால் புலிகளின் முகாம்களுக்கு அருகில் உள்ள மக்களை விலகியிருக்குமாறும் இரண்டு மாதங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை கையிருப்பில் வைத்திருக்குமாறும் படையினர் துண்டுப் பிரசுரம் வெளியிட்டிருந்தனர். (பின்னர் அதற்கு காரணமாக இருந்த படையதிகாரி கைது செய்யப்பட்டதாக கூறப்படுகின்றது)

எவ்வாறெனினும் நீண்ட இடைவேளைக்குப் பின்னர் அம்பாறை சென்றல் கேம்ப் என்றழைக்கப்படும் மத்தியமுகாம் புலிகளால் தாக்கியழிக்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை நள்ளிரவு ஆரம்பமான தாக்குதல் அதிகாலை வரை நீடித்தது. சமீபமாக உள்ள தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து உழவு இயந்திரங்களில் வந்திறங்கிய புலிகளின் தாக்குதல் அணிகள், முகாம் முழுவதையும் தமது முழுகட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து தாக்கி அழித்து விட்டு குறைந்த சேதங்களுடன் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்த மத்திய முகாம் கல்லோயா குடியேற்றத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பிரதேசம். கல்முனைக்கும் அம்பாறைக்கும் இடையில் உகணைக்கு கிழக்காக அதாவது மட்டக்களப்புக்கு தெற்காக சுமார் 45 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது.

சுற்றிலும் சிறிய குடியேற்ற கிராமங்களுக்கு மத்தியில் 'சென்றல் கேம்ப்' என்ற இடத்தில் அமைந்திருக்கும் பொலிஸ் நிலையமே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

தாக்குதல் நடைபெற்ற சமயம் பொலிஸ் நிலையத்தில் 100 பேர் வரை காணப்பட்டனர். இவர்கள் 70 பேர் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர். ஏனைய 30 பேரும் ஊர் காவல் படையினர்.

இரவு 11 மணியளவில் உழவு இயந்திரங்களில் வந்திறங்கிய புலிகள், எதிர்பாராத விதத்தில் முகாம்மீது அதிரடித்தாக்குதல் தொடுத்துள்ளனர். முகாமில் பெரும்பாலானவர்கள் தூங்கிக் கொண்டிருந்தனர். அதனால் முகாமை நோக்கி முதல் வேட்டோசை தீர்க்கப்பட்டதுமே ஓடித் தப்புவதற்கான வழியைத்தான் அதிகமானவர்கள் தேடியிருக்கிறார்கள். காவல் கடமையில் ஈடுபட்டிருந்த படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் கடும் சண்டை நடைபெற்றிருக்கிறது. படைத் தரப்பில் 20க்கும் மேட்பட்டவர்கள் பலியாகியிருக்கலாம் என்று ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டபோதும், அந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று படைவட்டாரங்கள் தெரிவித்தன.

தாக்குதல் ஆரம்பமானதும் தலைதெறிக்க ஓடிய படையினரில் பலர் விடிந்ததும் மல்வத்தை விசேட அதிரடிப்படைமுகாமில் தஞ்சமடைந்தனர். சண்டை நடைபெற்றுள்ள விதத்தையும் இழப்புக்களின் தன்மையையும் அவதானிக்கும் போது புலிகளை எதிர்த்து தாக்குதல் நடத்துவதிலும் பார்க்க ஓடித்தப்புவதிலேயே முகாமில் இருந்தவர்கள் அதிக நாட்டம் காட்டியிருப்பது தெரிகிறது.

உண்மையில் புலிகளின் அணிகள் மீது பாரிய எதிர்த்தாக்குதல் நடத்தப்பட்டிருந்தால், அதனால் புலிகளுக்கு மட்டுமன்றி முகாமில் இருந்தவர்களின் உயிரிழப்பும் மேலும் அதிகரித்திருக்க வாய்ப்புண்டு. ஏனெனில் இத்தகைய சிறிய முகாம்களில் பாரிய ஆயுதங்கள் கைவசம், இருப்பதில்லை. எதிர் பாராத நேரத்தில் தொடுக்கப்படும் அதிரடித் தாக்குதலால் அருகில் உள்ள முகாம்களில் இருந்து உதவிக்கு வரும்வரை தாக்குப் பிடிக்கக்கூடிய அளவு பலமும் இருப்பதில்லை. அதனாலேயே ஓடித்தப்ப வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

இந்த தாக்குதலுக்கு 200 புலிகள் வரை வந்ததாக படைத்தரப்பு கூறுகின்ற போதும், இதை விட மிகவும் குறைந்தளவு எண்ணிக்கையானவர்களே தாக்குதலில் பங்கு கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 5 மணிநேரம் வரை தாக்குதல் நடத்தி முகாமை முற்றாக தரைமட்டமாக்கிவிட்டு ஆயுதங்களையும் புலிகள் எடுத்துச் சென்றுள்ளனர். முகாமில் இருந்த சிறிய ரக ஆயுதங்கள் பல புலிகளால் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

பொதுவாகவே இந்த பகுதிகளில் உள்ள முகாம்கள் புலிகளின் இலகுவான இலக்குகள் என்றே கூறவேண்டும்.

தாக்குதலுக்கு உள்ளான சென்றல் கேம்புக்கு வடக்காக பல பகுதிகள் புலிகளின் முழுக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள். இரவில் வந்து தாக்கிவிட்டு எந்தவித இடைஞ்சலும் இன்றி தமது பகுதிகளுக்கு வசதியாக திரும்பிச் செல்லலாம்.

இந்த பகுதியை ஓரளவு அண்மித்ததாக இருக்கும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளான தாந்தாமலை, கொக்கட்டிச் சோலை, தரவை போன்ற இடங்களில் இருந்து வந்து இந்த பிரதேசத்துக்குள் புலிகளால் பிரவேசிக்க முடியும். அதே வழியாக தப்பிச் செல்லவும் முடியும்.

### எம்.பி.எம். பர்ஸான்

கருணா தலைமையிலான செயந்தன் படையணி கிழக்கில் நடமாடுவதாக சில மாதங்களாகவே படையினர் கூறிவந்தனர். தரவையில் உள்ள புலிகளின் தளத்தில் ஆயுதங்கள் குவிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தின் தொப்பிகல காட்டுப்பகுதியில் இலங்கை விமானப்படையினர் கடந்த இருவாரங்களாக பலத்த தாக்குதல்களையும் மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையிலேயே சென்றல் கேம்ப் முகாம் மீதான தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. இது மிகவும் சிறிய முகாமல்ல. நடுத்தர அளவிலானது. இவ் வாறான முகாம்கள் அழிக்கப்பட்டு பிரதேசத்தில் உள்ள தடுப்பு நிலைகள் அகற்றப்பட்டதும் பாரிய தாக்குதல் ஒன்றை நடாத்த முடியும். அதற்காக முன்னேற்பாடாக இதை கருதலாம்.

ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையில் முக்கிய பங்காற்றிய செயந்தன் படையணி இம்முறை கிழக்கில். அடுத்த இலக்கு எதுவாக இருக்கும் என்ற அச்சம் படைத்தரப்பை பீடிக்கத் தொடங்கியுள்ளது. ●

# ஆழம்பார்க்கும் முயற்சிக்கு புலிகள் வைத்த ஆப்பு!

இந்த நாட்களில் அரசாங்கத்தை மிகவும் வெறுப்பேற்றக்கூடிய சொல் எது வென்று கேட்டால் 'காப்புறுதி' என்பது தான் சரியான பதிலாக அமையும். இலங்கை துறைமுகங்களுக்கு வரும் வெளிநாட்டு கப்பல்களுக்கான காப்புறுதி கட்டணங்களை சர்வதேச காப்புறுதி நிறுவனங்கள் பல மடங்கு அதிகரித்ததோடு, அரசாங்கம் மோசமான பொருளாதார ஆழுத்தத்துக்கு முகம் கொடுத்திருக்கிறது.

இந்த அதிகரிக்கப்பட்ட மீள் காப்புறுதித் தொகையை அகற்றினால்தான், துறைமுக சேவையை ஓரளவேணும் உயிர்ப்பிக்க முடியும். அதனால் அதற்கான சகல முயற்சிகளையும் அரசாங்கம் செய்து வருகிறது. அமைச்சர் ரொனி டிமல் தலைமையிலான குழுவொன்று இலண்டன் சென்று அங்குள்ள மீள்காப்புறுதி நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. இலங்கை வரும் கப்பல்கள் மீதான அதிகபட்ச காப்புறுதிக் கட்டணத்தை நீக்க வேண்டுமாயின் அதற்காக வேண்டி துறைமுகங்களின், பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தி 5 கோடி டாலர் பெறுமதியான வங்கி உத்தரவாதப்பத்திரம் ஒன்றை வழங்க அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது. ஆனால் இத்தகைய நம்பிக்கையுட்டல்களால் இலங்கையின் பாதுகாப்பு தொடர்பான அபிப்பிராயத்தை முழுமையாக நீக்கி விட முடியாது.

குறிப்பிட்ட ஓர் இலக்கு தாக்கப்பட மாட்டாது என்ற உத்தரவாதத்தை புலிகள் வழங்கினாலே தவிர, அதனை அரசாங்கத்தினால் வழங்குவது சாத்தியமானதல்ல என்பதை நடந்து முடிந்த சம்பவங்கள் நிரூபித்துள்ளன. காப்புறுதிக் கட்டணங்களைக் குறைக்க சட்ட ரீதியிலான சில ஏற்பாடுகளை செய்தாலும்' துறைமுகத்தின் பாதுகாப்பு பல மடங்கு அதிகரிக்கப்பட்டிருப்பதாக விளம்பரம் செய்தாலும், பழைய நிலைமையை மீண்டும் ஏற்படுத்துவது உடனடியாக சாத்தியமாகப் போவதில்லை.

அதனால் சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை மீளமைக்கக்கூடியவாறான ஒரு திட்டத்தின் முதல்கட்டம் கடந்தவாரம் அரங்கேற்றப்பட்டது. ஆனால் அதனை அடுத்த கட்டம் வரை முன்னேற விடாமல் புலிகள் உடனடியாகவே தடுப்பு நடவடிக்கையில் இறங்கி விட்டார்கள்.

கடந்த வாரத்தில் கொழும்பு அரசியல் அரங்கில் மிகவும் சர்ச்சைக்குரிய பாத்திரம் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ பள்ளே தான். கத்தோலிக்கரான இவர் மடுதிருப்பதிக்கான தனது யாத்திரையில் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளுக்குள் சென்று வந்தார். புலிகள் இயக்க எல்லைப்படை வீரர்களின் பாதுகாப்போடு அங்கு சென்று வந்த ஜெயராஜ் தலை நகர் திரும்பியதும் விடுத்த அறிக்கை மறுநாள் அநேகமான பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாக வெளிவந்தது. தனது மடு விஜயத்தின் போது புலிகளின் உள்ளூர் தலைவர்களுடன் கலந்துரையாடியதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கண் சிகிச்சை முகாம் நடத்துவதற்கு வன்னிச் சென்று வரும் ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினரை 'புலி' என்று தாறுமாறாக திட்டும் அரசாங்க ஊடகங்கள், அமைச்சர் ஜெயராஜ் 'தேச துரோக குற்றச்சாட்டு' இழைத்து விட்டதாகக் கூறவில்லை.



மடுத்தேவாலய ஆராதனையில் கலந்துகொண்ட அமைச்சர்

ஆனால் அமைச்சரின் விஜயம் தொடர்பாக உடனடியாகவே புலிகளின் அறிக்கையும் வெளியானது. ஜெயராஜ் பெர்னாண்டோ பள்ளே புலிகளின் உள்ளூர் தலைவர்கள் எவரையும் சந்திக்கவில்லை எனவும் தமது எல்லைப்படை வீரர்களையே அவர் சந்தித்ததாகவும் அன்டன் பாலசிங்கம் இலண்டனில் தெரிவித்திருந்தார். உள்ளூர் தலைவர்களையும் எல்லைப்படையினரையும் பிரித்தறிவதில் அமைச்சர் குழப்பியிருக்கலாம் என்று பாலசிங்கத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

விமான நிலையம் தாக்கப்பட்டு அந்த சூடு ஆறுவதற்குள்ளேயே விமான நிலையத்துக்கு பொறுப்பான அமைச்சர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் போய் வருகிறார் என்ற பரபரப்பான செய்தி சமாதானம் குறித்த எதிர்பார்ப்பை மீண்டும் ஏற்படுத்தியிருப்பதாகவெல்லாம் அரச சார்பு ஊடகங்கள் கதை சொல்ல ஆரம்பித்தன.

உண்மையில் அப்படியொரு எதிர்பார்ப்பை ஏற்படுத்துவதுதான் அரசாங்கத்தின் நோக்கமாக இருந்திருக்க வேண்டும்! ஏனெனில் தற்போதைய நெருக்கடி பலவற்றுக்கும் அவ்வாறானதொரு சமாதான சமிக்ஞையில் அரசுக்கு தீர்வு இருக்கிறது. 'அரசும் புலிகளும் பேசப் போகிறார்கள் முக்கிய அமைச்சர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு சென்று வருகிறார்' என்ற செய்தி வேறு யாருக்கும் இல்லாவிட்டாலும் கப்பல் கம்பனிகாரர்களுக்காவது ஒரு நம்பிக்கையாக இருக்கும்! ஆனால் ஜெயராஜ் மடு சென்று புலிகளின் எல்லைப்படை வீரர்களை சந்தித்து விட்டு வந்ததும் அரசாங்கம் அதை விளம்பரப்படுத்தி இலாபம் சம்பாதிக்க புலிகள் அனுமதிக்கப் போவதில்லை. அதனாலேயே சூட்டோடு சூடாக அன்டன் பாலசிங்கம் அறிக்கைவிட்டு அமைச்சரை 'நக்கலடித்திருக்கிறார்'

ஒருவேலை ஜெயராஜின் விஜயத்தை புலிகளின் தலைமைப் பீடம் வரவேற்று அதை சமாதானத்துக்கான சமிக்ஞையாக சித்தரித்திருக்குமாயின் மேலும் பல படிகளை முன்னோக்கி நகர்த்த அரசாங்கம் முயற்சித்திருக்கக்கூடும். சமாதானம் எப்படிப் போனாலும் துறைமுகங்களை சீரமைக்கவாவது 'சமாதான முயற்சி' ஆரம்பமாகியிருக்கலாம். ஆனால் அந்த ஆழம்பார்க்கும் பிரயத்தனம் முளையிலேயே கிள்ளியெறியப்பட்டு விட்டது.



ஜெயராஜ் பெர்னாண்டோ பள்ளே

ஆனால் இப்படியான ஒரு நோக்கத்துக்காகத்தான் அரசாங்கம் ஜெயராஜை மடுவக்கு அனுப்பியது என்ற சந்தேகம் எவருக்கும் வந்துவிடக்கூடாது என்ற பயமும் அரச உயர்மட்டத்திடம் காணப்பட்டது. இதன் விளைவாகத்தான் அமைச்சரின் மடுப்பயணமும் அறிக்கையும் அவரது சொந்தக் கருத்துக்களேயன்றி அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அறிவித்தலல்ல என்று தகவல் திணைக்கள பணிப்பாளர் உடனடியாகவே அறிக்கைவிட வேண்டியாகிப் போனது. எது எப்படிப் போனாலும் 11 வருடங்களின் பின்னர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்று திரும்பிய அமைச்சர் என்ற பெருமையை ஜெயராஜ் பெற்றார்.

பயணத்துக்கு மூன்று தினங்களுக்கு முன்னதாக மடுசெல்லும் யாத்திரிகர்களின் பெயர் விபரங்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. ஆனால் அமைச்சரிடம் எழுத்துமூலமான அனுமதி எதுவும் இருக்கிறதா என்பதை சோதனை செய்ய அவர் போய்ச் சேரும் வரை யாரும் முன்வரவில்லை.

வவுனியாவில் தனது உத்தியோகபூர்வ வாகனத்தையும் பாதுகாப்பு அதிகாரிகளின் ஆயுதங்களையும் படையினரிடம் கையளித்துவிட்டு தனது தனிப்பட்ட வாகனத்தில் மடு சென்ற அவருக்கு பொதுவாக அமைச்சர்களின் வாகனங்களில் பறக்கும் தேசியக் கொடியுடன் மடுவக்குள் நுழைய முடியவில்லை. ஆனால் போதிய பாதுகாப்பும் கௌரவமும் வழங்கப்பட்டது.

அன்டன் பாலசிங்கத்தின் கூற்றுப்படி அமைச்சருக்கு பாதுகாப்பு வழங்கியவர்கள் புலிகளின் எல்லைப்படை வீரர்கள்.

அகதி முகாம் ஒன்றுக்கு அருகில் தனது வாகனத்தில் இருந்து இறங்க முயற்சி செய்த ஜெயராஜ் அதற்கு அனுமதிக்கப்படவில்லை. தமது வழிகாட்டல்களை பின்பற்றமாற அவர் புலிகளால் கேட்டுக்கொள்ளப்பட்டதாக கூறப்படுகின்றது.

வவுனியாவில் ஆயுதங்களை வைத்துவிட்டு மடுவக்கு சென்று வரலாம். தனது நீர்கொழும்பு வீட்டில் ஆயுதங்களை வைத்துவிட்டு அவரால் கொழும்புக்கு வந்துபோக முடியுமா..? ■

~மதி~

# அண்டை மண்டலத்தில்....

## மர்மம் விலகுமா?

திடீர் சரண். தப்பிக்க வைக்கும் சாட்சிகள், அம்பலமாகும் சதிகள் என்று எல்லாம் அரங்கேறுகின்றன. ஆனாலும் சமாஜ்வாதி கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான பூலான் தேவியைக் கொன்றது யார் என்பது இன்னும் மர்மமாகவே உள்ளது. 'பூலானைக் கொன்றது நான் தான்' என்று கைதூக்கினார் பங்கஜ்சிங் எனப்படும் ஷெர் சிங்ராணா. இவரை போலீஸ் கைது செய்தது. டேராடூன் டி.ஏ.வி. சட்டக் கல்லூரி மாணவரான 25 வயது பங்கஜ் ரூர்கியில் சாராய வியாபாரமும் செய்கிறார். இவர் பூலான் தேவி ஏன், எதற்காக, எப்படி, படுகொலை செய்யப்பட்டார், எப்படி திட்டமிடப்பட்டது. தப்பியோடியது எப்படி என்பது பற்றி போலீசிடம் விலாவாரியாக விவரித்தார்.

இருபதாண்டுகளுக்கு முன்பாக பிமாயில் 20 தாக்கூர்கள் படுகொலை செய்யப்பட்டதை ராஜபுத்திர இளைஞரான பங்கஜ் இன்னும் மறக்கவில்லை என்பதை போலீஸ் புரிந்து கொண்டது. இந்த சம்பவம் நடந்து முடிந்த மூன்று நாட்களுக்குப் பிறகு பங்கஜ்ஜின் மூன்று கூட்டாளிகளும் ஷகரான்பூரில் சரணடைந்தார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரியான தகவல்களை அளித்து குழப்பினாலும் ஒரு விஷயம் தெளிவாக இருக்கிறது. அதாவது இவர்கள் நான்கு பேருமே பூலான் படுகொலையில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்.

கொலையாளிகள் பலராக இருக்கலாம் என்பதையும் பிடிபட்ட ' நான்கு பேரும் பல காரணங்களுக்காக பூலானைக் கொன்றிருக்கலாம் என்பதையும் விசாரணைகள் காட்டுகின்றன. அதில் ஒன்று அரசியல் பின்னணி, பூலானின் மீர்ஸாபூர் தொகுதியைச் சேர்ந்த சமாஜ்யவாதி கட்சி ஊழியரான கேசவ் சௌகான் என்பவர் கொலை நடந்த போது பூலானின் தில்லி வீட்டில் இருந்திருக்கிறார். கொலையில் பயன்படுத்தப்பட்ட இரண்டு ஆயுதங்களை இவர் கார்கள் நிறுத்துமிடத்தில் பதுக்கியதாக சொல்லப்படுகிறது.

கொலை நடந்த அன்று காலை 5.30 மணிக்கு ரூர்கியிலிருந்து பங்கஜ் பச்சை நிற மாருதி காரில் (ரி.ஐ.எம்.907) இரண்டு சமாஜ்வாதி கட்சி ஊழியர் களுடன் தில்லிக்கு வந்தார் என்று விசாரணைகள் சொல்கின்றன. பூலானை அன்று காலை நாடாளுமன்றத்திற்கு பங்கஜ் அதே பச்சை நிற மாருதியில்தான் அழைத்துச் சென்றார். பின்னர் மதியம் 1.30 மணிக்கு அவர் பூலானைக் கொன்றுவிட்டு தப்பிச் சென்றதும் அதே காரில் தான். அந்தக் காரை ஒரு வெள்ளை மாருதி தொடர்ந்தது. இதுவும் பங்கஜ் ரூர்கியிலிருந்து வந்தபோது, கூடவே வந்திருக்கிறது. பச்சை மாருதியை பங்கஜ் சிறிது தூரம் சென்று அப்படியே விட்டுவிட்டு ஒரு ஆட்டோவில் ஏறிப் பறந்தார். அதன் பின் இரண்டு பஸ்கள் மாறி கடைசியில் காஸியாபாத்தில் வெள்ளை மாருதிக்கு மாறிக் கொண்டார்.







### சொத்து யாருக்கு?

1. பூலானின் அம்மா முல்லா, தங்கை முன்னி, பூலானின் கணவர் உமேத் சிங், அவரது முன்னாள் கணவர்கள் இரண்டுபேர் ஆகியோர் சொத்துக்கு உரிமை கொண்டாடுகிறார்கள்.

2. பூலானின் சொத்தின் மதிப்ப ரூ.3 கோடியாக இருக்கலாம் என்பது போலீசின் மதிப்பீடு.

3. பூலானுக்கு தெற்கு தில்லியிலும் உ.பியிலும் வீடு, மிர்ஸாபூரிலும் பதோகியிலும் மனைகள், பான்கல்லில் ஒரு பண்ணை வீடு இருக்கிறது.

4. வங்கியில் ஒரு கோடி ரொக்கம் இருக்கும். இதில் அவர் வாழ்க்கையை கதையாக, சினிமாவாக எடுத்தவர்கள் அளித்த ராயல்டியும் அடங்கும்.

5. அவரது சொத்தைப் பாதுகாக்க அறக்கட்டளை அமைப்பதாக உமேத் அறிவித்திருக்கிறார்.

6. பூலான் மூன்று பேரை திருமணம் செய்து கொண்டதால் சட்டச் சிக்கல்கள் எழுந்திருக்கின்றன.

குற்றவாளிகளாக கைது செய்யப்பட்டிருக்கும் இவர்கள் கிரிமினல் கில்லாடிகள். டேராடூனில் பட்டப்பகலில் பஞ்சாப் நேஷனல் வங்கி கொள்ளையடிக்கப்பட்ட சம்பவத்தில் இவர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். எக்ஸைஸ் சட்ட மீறல் சம்பந்தமாக 1986 டிசம்பர் 11ந் திகதி ஹர்த்வார் ஜவால்பூர் போலீஸ் ஸ்டேஷனில் பதிவான எஃப்.ஐ.ஆரில் பங்கஜ் பெயர் இருக்கிறது. பங்கஜ்ஜின் அப்பா அளித்த உத்திரவாதத்தின் பெயரில் அவர் ஜாமீனில் வெளியே வந்திருந்தார். ஆனால் ஜூலை 18ந் திகதியன்று ஏதோ திட்டம் போட்டு உத்தரவாதத்தை வாபஸ் பெற பங்கஜ் பெயரில் வேறு ஒரு நபர் ஹர்த்வார் சிறையில் அடைக்கப்பட்டார். ஜூலை 26ந் திகதி அவர் அப்பா மீண்டும் பங்கஜுக்கு உத்தரவாதம் அளிக்க, 'அவர்' ஜாமீனில் வந்தார். பங்கஜ்ஜின் கூட்டாளியான ரஜீந்தர் சிங்கின் கதையும் இதுதான்.

இங்கேதான் தலைசுற்றல் ஆரம்பிக்கிறது. பங்கஜும் அவரது கூட்டாளிகளும் பூலான் கொலையில் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று உறுதிப்படுத்தப்படுகிறது. இந்த முக்கிய கட்டத்தில் இவர்களுக்குப் பதிலாக இருவர் சிறைக்குப் போனது ஏன், எப்படி? குற்றம் சாட்டப் பட்டவர்கள் ஜாமீன் இல்லாமல் உலாவர முடிந்தது எப்படி? இந்தச் சமயத்தில் பங்கஜ்ஜின் சகோதரரையும் அப்பாவையும் காணவில்லை. போலீஸ் இந்த மர்மம் பற்றியும் விசாரித்து வருகிறது.

கிடைத்திருக்கும் குழப்பமான தகவல்களை ஒட்ட வைத்து மர்ம முடிச்சை அவிழ்ப்பது என்பது சுலபமான காரியம் அல்ல. பொய்ச் சாட்சிகளை உருவாக்கி அரசு தரப்பை தடுமாற வைக்க 'கட்சிதமான திட்டம்' தயாராவதாக போலீஸ் சந்தேகப்படுகிறது.

பூலான் தேவியின் சிதைக்கு வைக்கப்பட்ட தீ அணைவதற்குள் அவரது சொத்தைப் பங்கு போட்டுக் கொள்வதற்கான சண்டை ஆரம்பமாகி விட்டது. (பார்க்க: பெட்டி) பூலானின் அம்மா முல்லா, தங்கை முன்னி, கணவர் உ.மேத்சிங், முன்னாள் கணவர்கள் என்று எல்லோருமே சொத்துக்காக அடித்துக் கொள்கிறார்கள். அவரது சொத்தின் மதிப்பு இரண்டு மூன்று கோடி ரூபாய் இருக்கலாம் என்று தெரிகிறது. உமேத் சிங் சொத்துக்களைப் பராமரிக்க அறக்கட்டளை ஆரம்பிப்பதாக ஏற்கனவே அறிவித்துவிட்டார். சாவில் கூட பூலானை தனித்துவிடமாட்டார்கள் போலிருக்கிறது. ■

## அமைச்சர் ஜெயராஜை கைது செய்ய வேண்டும் என்கிறது சிஹல உறுமய

"தடைசெய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தினருடன் யார் தொடர்பு கொண்டாலும் அது சட்டவிரோதமான நடவடிக்கையாகும். எனவே, அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோவுள்ளே, ஐக்கிய தேசியக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தன ஆகியோரைக் கைது செய்து சட்டத்தின் முன்நிறுத்த வேண்டும்" என்று சிஹல உறுமயவின் பொதுச் செயலாளர் திலக்கருணாரட்ன அரசாங்கத்தைக் கோரியுள்ளார்.

"ஐ.தே.கட்சி உறுப்பினர் ஒருவர் அடிக்கடி கட்டுப்பாடற்ற பகுதிக்குச் சென்று புலி உறுப்பினர்களைச் சந்தித்து வருவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள சந்தர்ப்பத்திலேயே முதல் முறையாக அமைச்சர் ஒருவர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்று திரும்பியிருப்பது கண்டிக்கத்தக்க செயலாகும்.

இலங்கையின் விமானப் படைத்தளம் தாக்கி அழிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அத்துறைக்குப் பொறுப்பான அமைச்சர் ஒருவர் அங்கு சென்றுள்ளார். அமைச்சர்களை இலக்கு வைத்துத் தாக்கும் தற்கொலைப் படையணிகள் கொழும்புக்கு வரும் நிலையில் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே புலிகள் இயக்கத்தின் பாதுகாப்போடுசென்றது வியப்புக்குரியது.

இவற்றைக் கொண்டு பார்க்கும்போது அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே புலிகள் இயக்கத்தின் நிழலாகச் செயற்படுவது தெரிகிறது. இந்நாட்டில் பல இலட்சக் கணக்கான சிங்கள கத்தோலிக்க மக்களுக்குத் தரிசிக்க முடியாத மடு மாதாவை இவர்கள் மட்டும் எப்படித் தரிசிக்கிறார்கள். இதனைக் கத்தோலிக்க மதகுருமாரும், ஆயர்களும் யோசிக்க வேண்டும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## உடனடியாக புதிய விமானங்களை கொள்வனவு செய்யும் வசதியில்லை

கட்டுநாயக்க விமானப்படைத் தளத்தில் இழக்கப்பட்ட போர் விமானங்களுக்குப் பதிலாக, புதிதாகப் போர் விமானங்கள் எதனையும் விமானப்படையினர் உடனடியாகக் கொள்வனவு செய்யமாட்டார்களென விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விமானப்படையினர் பெரும் நிதி நெருக்கடியிலிருப்பதாலேயே இழக்கப்பட்ட விமானங்களுக்குப் பதிலாகப் புதிய விமானங்கள் கொள்வனவு செய்யப்படாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

கட்டுநாயக்க விமானப் படைத்தள தாக்குதலில் ஓடு பாதைக்கு வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரு கிபிர் விமானங்கள், ஒரு மிக் விமானம், மூன்று கே-8 ரக பயிற்சி விமானம், எம்.ஐ.-24 ரக ஹெலிகொப்டர் ஒன்று, எம்.ஐ.17 ரக ஹெலிகொப்டர் ஒன்று என்று எட்டு வானூர்திகள் முற்றாக அழிக்கப்பட்டன. இதைவிட, விமானத்தளத்தில் பாதுகாப்புக் கூடாரங்களினுள் நிறுத்தப்பட்டிருந்தவற்றில் மேலும் இரு கிபிர் விமானங்களும் ஒரு மிக்-2 விமானமும் இரு பெல்-412 ரக தாக்குதல் ஹெலிகொப்டர்களும் முற்றாக அழிக்கப்பட்டன.

இவற்றுக்கு பதிலாக புதிய விமானங்கள் இருவார காலத்துக்குள் கொள்வனவு செய்யப்படும் என முன்னதாக தெரிவிக்கப்பட்டிருந்த போதும் தற்போது அது உடனடியாக சாத்தியமில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நண்பன் ஒருவனை நாட்டுக்குக் கொண்டுவா!

கட்டுநாயக்க விமானத்தளம் மீதான தாக்குதலால் மிக மோசமாக சரிந்து போயிருக்கும் உல்லாசப் பயணத் துறையை மீளக் கட்டியெழுப்ப உதவுமாறு வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களுக்கு இலங்கை உல்லாசப் பயண சபை அவசர கோரிக்கை விடுத்துள்ளது.

'நண்பன் ஒருவனை நாட்டுக்குக் கொண்டுவா' (Bring a friend Home) என்ற தலைப்பில் உல்லாசப் பயணத்துறை திட்டமொன்றை உடனடியாக அமுல்படுத்த சபை உத்தே சித்துள்ளது.

கட்டுநாயக்கவில் இடம்பெற்ற தாக்குதலையடுத்து உல்லாசப்பயணிகளின் வருகையில் மிகப் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதுடன், இலங்கை வருவதற்காக முன்னேற்பாடு செய்திருந்த ஆயிரக்கணக்கானோர் தங்கள் பதிவுகளை இரத்துச் செய்துமுள்ளனர்.


### ஹோமியோபதி சிகிச்சை

தமிழ் நாட்டின் பிரபல ஹோமியோபதி சிகிச்சை நிபுணரும் தமிழக அரசின் ஹோமியோபதி கவுன்சில் உறுப்பினருமான,
Dr. R. தியாகராஜன் D.H.M.S,AMRSH (LON) நீரிழிவு, ஆஸ்மா, மூட்டுவாதம், தோல் வியாதிகள், ஆண்மைக்குறைவு போன்ற நாட்பட்ட வியாதிகளுக்கும் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கிறார்.

காலம் : 23.08.2001-28.08.2001
இடம் : ஹோட்டல் கிறீன் லண்ட்ஸ், பம்பலப்பிட்டி.
தொலைபேசி : 585592, 581986.
HOTLINE : 077-602513.

### சுவிஸ் பேர்ண் மாநகரில்.
**Suji Jewellery Works**

நங்கையர் மனதை கொள்ளை கொள்ளும் நவீன டிசைன்களில் (22 கரட்) தங்க நகைகள் செய்து கொள்ள சுஜி ஜுவல்லரி வேர்க்ஸ் தொடர்புகட்கு:-

K. Thurai
Belpbergstrasse-10
3123. Belp Bern ,
Swiss.
T.P. 0041-31-8191837

*உங்கள் பழைய நகைகளை நீங்கள் விரும்பிய புதிய டிசைன்களில் குறித்த தவணையில் செய்து தரப்படும்.*

விளம்பரப் பகுதி

### துபால் மூலம் விஞ்ஞானம்

G.C.E. (A/L) ~ இரசாயனவியல்
Year - 9, 10, 11 ~ விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
Year - 5 ~ ஆரம்ப விஞ்ஞானம்

ஆசிரியர்: குமார் சிவப்பிரகாசம்

விபரங்களுக்கு சுயவிலாசமிட்ட தபாலுறையுடன் விண்ணப்பிக்கவும்
P.T.C 14, Covington Road, Batticaloa.

### வெளிவந்துவிட்டது!
**நூம்முகத் தையற்கலை**

(ஆசிரியையின் வழிகாட்டல் இல்லாமலேயே சுயமாகத் தையற்கலையை பயிலக்கூடிய இலகுவான பல எளிய வழிமுறைகளை உள்ளடக்கியது)
பூபாலசிங்கம் புத்தகசாலையில் பெற்றுக் கொள்ளலாம்.
தொ.பே:- 422321
நூலாசிரியர்:-**ஆ.பவானி** (போதனாசிரியை)

### ZURICH TO COLOMBO
**Cargo Service**

**எம்.சி.எஸ். கார்கோ சேவை 1989 தொடக்கம்**

கொழும்புக்கான அடுத்த கொள்கலன்
2001 செப்டம்பர் 14ல் புறப்பட்டு
2001 ஒக்டோபர் 10ல் இலங்கையை வந்தடையும்.
எமது இலங்கைக்கான கொள்கலன் சேவைக் கட்டணம் S.F.R. 80ல் இருந்து.
எமது கட்டணங்கள் பொதிகளின் அளவைக் கொண்டே நிர்ணயிக்கப்படுமே தவிர பொருட்களின் நிறையைக் கொண்டல்ல.

மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்...

Perlyn Tours 01-4407115
Mr.V.Munasinghe 01 302 58 38/ 079-665 65 53
Mr.Winsent (BE) 031-9925739 T.S.
Mr.Ranjith Fernando (LU) 041-3600912 S.E.G.
Mr.Edison (AG) 062-7943446 T.S.
Mr.Oscar 079-6319288 T.S.
Mr.Mohan Fernando (SG) 071-2223214 T.S.

### சிங்கப்பூரில் திருமணம்

சிங்கப்பூரில் வந்து திருமணப்பதிவு செய்து, திருமணம் செய்ய வருபவர்களுக்கு சகல வசதியுடன் தங்குமிடவசதியும், திருமணம் இலங்கை முறைப்படியோ அல்லது வீடியோ போட்டோவைப் பார்த்து வசதிக்கேற்பவோ தீர்மானிக்கலாம்.
விபரத்திற்கு- அப்புலிங்கம் சிங்கப்பூர் கைதொலை பேசி எண்:-
Tel:- 00 65 9 7514941. Tel. Fax:- 0065 2857494.

**LINGAM WEDDING SERVICE**
BLK 219 SERANGOON AVE 4
# 10-208 SINGAPORE-550219
TELE: (65) 4533308

### சுவிஸ். பேர்ண் மாநகரில் புதிய உதயம்.
**விதுஜா ஏசியன் சொப் வாக் ஹவுஸ்**
**காசே பசாஜ் .8-3011. பேர்ண். சுவிற்சர்லாந்து.**

மைக் டொனால்ட். மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகில் அமைந்திருக்கும் கட்டிட 1ம் மாடியில்.

எம்மிடம் இந்தியா, சிங்கப்பூர் தாய்லாந்து போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட குழந்தைகளுக்குரிய கோட், சூட், குருத்தா, ரீசேட், சோட்ஸ், கவுண், பஞ்சாபி, வெல்வெட் பஞ்சாபி, பெண்களுக்கான பஞ்சாபி, சுரிதார், சோலி, வெல்வெட் பஞ்சாபி, மற்றும் புடவைகள், பனாரஸ், கோலம், அபூர்வா, காஞ்சிபுரம், மைசூர்சில்க், ரூபிகுமின், சமர்குல்ட், ஆண்களுக்கான ஜீன்ஸ், சேட், பட்டுவேட்டி, மாறுகரை வேட்டி, என பல்வேறுபட்ட தெரிவுகளை பெற்றுக் கொள்ளவும் மற்றும் பழைய புதிய திரைப்பட பிரதிகளையும் நாடகப்பிரதிகளையும் 2 str வாடகைக்கு பெற்றுக் கொள்ளவும். மற்றும் அனைத்து மளிகைச் சாமான்களையும் அன்பளிப்பு பொருட்களைப் பெற்றுக் கொள்ளவும் எம்மை நாடுங்கள். தொலைபேசி அட்டைகள் யாவும் 26 str மட்டுமே. மற்றும் சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அசல் 22 கரட். தங்கநகைகள் எங்கள் விற்பனையில்.

தொடர்புகளுக்கு ஆனந்தன் சுவிஸ் T.P 031 311 35 10 or 076 530 67 55 or 031 992 82 67.

### மனோதத்துவ வைத்தியம் (General Psycho Therapy)

**கண்டியிலும் சந்திக்கலாம்**

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P. ஆறுமுகம். அவர்களை சந்தியுங்கள் இளம் சமுதாயத்தினரை வாட்டும் உடல் மெலிவு, கனவில் சக்தி இழத்தல், பயம், ஞாபக மறதி, நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், நித்திரையின்மை, போன்ற தன்னம்பிக்கை இழக்க காரணமான வியாதிகளை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி உங்களையே நீங்கள் வெல்லுங்கள்.

**SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)**

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணம். என்பதை 90 நிமிடத்தில் தான் குறைவற்ற ஆண் மகனாகிவிட்டேன். என்று அடி மனதில் பதியவைத்த பின்னரே பணம் பெறப்படும். வெளிநாட்டிலும், உள்நாட்டிலும், பல நூற்றுக்கணக்கான இளைஞர்களை சுகமாக்கிய ஆதாரங்கள் உண்டு.

**வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு விஷேட ஏற்பாடுகள்**

உங்களின் தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகளை நீக்க வழியின்றி தவிக்க தேவையில்லை. முழு விபரத்தையும் கடித மூலம். விளக்கி எழுதவும். பின் எமது சில கேள்விகளுக்கு பதில் தெரிந்த பின் தன்னுடைய குறைகள் முற்றாக நீங்க ஏற்ற மனோதத்துவ வைத்தியம் பதிவு செய்யப்பட்ட ஒடியோ கெசட் மூலம் மனோநிலையில் குறையற்றவர் என்றும், உடல் நிலை பாதிப்புக்கு உயர்தர மூலிகை மருந்தும் பெற்று வெற்றி பெற்ற ஆண் மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) கட்டாயம் முத்திரை செலவு அனுப்பவும்.

**மட்டக்களப்பு விலாசத்திற்கு மாத்திரம் கடிதத் தொடர்பு கொள்ளவும்**

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள், "ஹிஸ்டிரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளார்கள். நீரழிவு (கட்டுப்பாடான நடைமுறையுடனும் சில ஆசனப் பயிற்சியும் அத்துடன் எமது மருந்து பாவித்தும் பலர் நீரழிவு நோயில் இருந்து முற்றாக சுகமாகியுள்ளனர்) மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளை போதல், கிரந்தி நோய், குழந்தை பேறு இன்மை, இன்னும் தீர்க்க முடியாத வியாதிகளுக்கும், வைத்தியம் உண்டு. (கொழும்பில் விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்)

**கொழும்பில் ஆகஸ்ட் 23-30 திகதி வரை**
(செல்டெல் இலக்கம் மாற்றப்பட்டுள்ளது)
DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building,
Entrance Bankshall Street,No. 10 Reclamation Road, Colombo 11.
T.P. 074-722841, 074-715546 செல்டெல்: 072-664867

**கண்டியில் செப்டெம்பர் 01, 02, 03 திகதிகளில்**
ஆசிரி மெடிக்கல் ஹோல் 45, பேராதெனிய ரோட், கண்டி T.P.074-474156


**கல்முனையில் செப்டெம்பர் 08, 09 திகதிகளில்**
T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067- 29329

**வவுனியாவில் செப்டெம்பர் 15, 16 திகதிகளில்**
(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)
(Vanni Inn) 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோயில் ஒழுங்கை, வவுனியாவில் சந்திக்கலாம் T.P.024-22074, 21406.

கடிதத் தொடர்பு: RESIDENT T.P:- 065-24019
**DR.P.ARUMUGAM S.A.M.P.,**
NO.51/5. Koolavady Road, Batticaloa. SRI LANKA.

### மலையாள மாந்திரீகம்





மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் டாக்டர் பி.கே. சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை, எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கு மட்டுமே இடமுண்டு எண்ணியவன் - எண்ணியவளைத் திருமணம் முடிப்பதற்குச் சிற்சில தடைகளா, திருமணமே நடக்காதா என்ற ஏக்கமா. காதல் தோல்வியாகிவிட்டதா, கணவன் - மனைவி ஒற்றுமை குறைகிறதா, கையில் பணம் தங்கவில்லையா, பணவருவாய் குறைவா, கொடுத்த கடன் திரும்பி வரவேண்டுமா, குடும்ப வாழ்க்கை இனியவையாக அமையவேண்டுமா, லக்சுமி கடாட்சம் பெறவேண்டுமா, வெளிநாட்டுப் பயணத்தில் தங்கு தடை ஏற்படுகின்றதா, தான் பெற்றபிள்ளை தன் பேச்சைக் கேட்கவில்லையா, பெருவாழ்வு-குபேர வாழ்வு பெறவேண்டுமா, குழந்தைப்பேறு கிட்டவில்லை எனக் கவலையா, கல்வியில் சித்தி பெறவேண்டுமா, கடந்த 33 வருடமாக ஸ்ரீ துர்க்கையின் அருட் கடாட்சத்தால் 100க்கு 100% வெற்றி பெற்றவர்கள் எமது பதிவேடு மூலம் தெரிந்து கொள்ளலாம், வெளிநாட்டவர்களுக்கு கடல் கடந்து செயல்பட கூடிய வண்ணம் அதிவிசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்புவதால் வெற்றியும் உடனுக்குடன் கிடைக்கிறது. இது ஒரு பிரமாண்டமான அங்கீகாரம் பெற்றதும் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் மாந்திரீகப் பிரிவாக அதி உன்னத சேவையின் நிமித்தம் வெற்றி கிட்டுவது மிக மிகச் சுலபம், மாந்திரீக வேலைகள் வெற்றிக்கு அச்சொட்டான திட்டவட்டமான சரிவரும் திகதியும் கொடுப்பது என்றால் அது எமது திருவருளே, அதுமட்டுமல்ல காண்ட அடிப்படையில் ஜாதகங் களையும் கைரேகைகளையும் தெட்டத் தெளிவாக எழுதி அறிந்து கொள்ளலாம். இன்னும், அனைத்து உலக நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் மாந்திரீக சக்தியால் தீர்வு கண்டமையால், எண்ணற்ற வாடிக்கை யாளர்களின் நற்சாட்சிப் பத்திரங்களை எமது நிருவாக பதிவேட்டில் காணலாம்.

**வெளிநாட்டவர்களுக்கென அதி தொழிநுட்பம் வாய்ந்த 24 மணித்தியால தொலைபேசிச் சேவை உண்டு.**
T.P: 00941 342463 , 00941 470615, **தேவைகளுக்கு:-**

39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பீ.கே. சாமி (J.D.G.A.N)JP

உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika Uchchada Peedam.

கொழும்பில்
No.162, Kotahena Street, Mayfield Road, Colombo 13, Sri Lanka.


நுவரெலியாவில்
33, Daily Fair Complex, Kandy Road, Nuwara-Eliya. 052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 431137
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-342463, 431137,470615- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.


### 31ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 26 08 1946



மறைவு 25 07 2001

**அமரர் திரு. குமாரசாமி சூரியகுமாரன்**

(மானிப்பாய்)

எமக்கு வழிகாட்டி வாழ்வில் ஒளியூட்டி எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்டு விட்ட எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதி கிரியைகளில் நேரிலும், தொலைபேசியிலும், மலர்வளையம் வைத்தும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்து எமது துக்கத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்.
அம்மா, மனைவி, மக்கள், மருமகன்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

தகவல்: மகள், DAKSHAYINI GLADSTON (CANADA) 001-416-3210151


VHS கசெற் மாற்றவும் → V.C.D OR HQ. V.C.D. & NTSC

கொம்பியூட்டர் மூலம் மாற்றுவதைவிட புதிய டிஜிட்றல் தொழில் நுற்பத்தினால், நேரடி மாற்றத்தின் மூலம் தெளிவான படத்தை பார்க்க முடியும்.

Phone: 074-513888, 594492. E-mail: chhaya@eureka.lk. அசல் எண்ணப்பிரதிகளின் ஆரம்பம் நாமே..

STUDIO Chhaya
Original Idea's From Us
S.K.Ads

# அச்சுறுத்தலை அதிகரிக்கும் நாசகார ஆயுதங்கள்!

அலசுவது - இராஜதந்திரி

யாழ்ப்பாணம் நல்லைக் கந்தன் ஆலய தீர்த்தோற்சவத்திலன்று ஆகாயத்திலிருந்து மலர்களைத்தூவி அஞ்சலி செலுத்துமாறு ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க விமானப்படையினருக்குப் பணித்துள்ளார், என்ற செய்தி கடந்த சனிக்கிழமை ஆகஸ்ட் 18ந் திகதி காலை வானொலியில் வெளிவந்திருந்தது.

இச் செய்தி வெளியாகி ஒரு சில மணிநேரத்தில் கட்டுநாயக்கா விமானத்தளத்தை அண்டிய சீதுவைப் பகுதியில் மிக்-27 ரக யுத்த விமானமொன்று தரையில் வீழ்ந்து நொருங்கியது. அதன் விமானியான ரஷ்யக்காரரும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார் என்ற மற்றுமொரு செய்தி வானொலி மற்றும் தொலைக் காட்சி என்பவை வாயிலாக வெளிவந்திருந்தது.



கட்டுநாயக்கா விமானத்தளத்தில் கடந்த மாத இறுதிப்பகுதியில் நடத்தப்பட்டிருந்த பெருந்தாக்குதல் பற்றிய விசாரணைகள் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கும் இத்தருணத்திலேயே, இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான மற்றுமொரு மிக்-ரகத்தைச் சேர்ந்த யுத்த விமானம் பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளை விபத்துக்குள்ளாகியுள்ளது.

இலங்கை விமானப்படை அதிநவீன விமானங்களைக் கொண்டிராத போதிலும் நடுத்தர வலுக்கொண்ட வேகமான விமானங்களைக் கொண்டிருக்கின்றது. இவ்விமானங்களில் சில கட்டுநாயக்கா விமானத்தளத்தாக்குதலின்போது முற்றிலுமாக நாசமாக்கப்பட்டிருந்தன.

வேறு சில விமானங்கள் சேதங்களுக்குள்ளான போதிலும் திருத்தியமைக்கப்பட்டு மீளவும் பாவனைக்கு விடப்படக்கூடியவையாக இருக்கின்றனவென்றே தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை விமானப்படை தோற்றம் பெற்ற காலத்தில் பிரிட்டிஷ் தயாரிப்பு ஹெலிகாப்டர்கள், விமானங்கள் என்பவையே பாவனையில் இருந்து வந்தன.

ஆனால் தற்போது சர்வதேச ரீதியாக விமானப்படை விமானங்களைத் தயாரிப்பதில் பிரிட்டன் அதி நவீன தொழிற்நுட்பங்களைக் கையாண்டு வருகின்றது.

இதன் காரணமாக மிகப்பெறுமதி வாய்ந்த பிரிட்டிஷ் தொழில் நுட்பத்துடன் கூடிய விமானங்களை வாங்கக்கூடிய நிதி வல்லமை இலங்கையிடம் காணப்படவில்லை. ஆகவே மலிவு விலையிலேயே போர் விமானங்களை இலங்கை வேறு நாடுகளிடமிருந்து கடந்த சில வருடங்களாகக் கொள்வனவு செய்து வருகின்றது.

சோவியத் யூனியன் பிளவுபட்டதும் தோற்றம் பெற்ற உக்ரெயின் தேசம் விமானத் தயாரிப்பில், குறிப்பாக இராணுவவிமானங்களைத் தயாரிப்பதில் பெயர் பெற்றதாகும்.

இங்கிருந்தே அன்டநோவ், மற்றும் மிக்-ரக, எம்.ஐ. ரக விமானங்கள் ஹெலிகாப்டர்கள் என்பவற்றை இலங்கை மலிவு விலையில் கொள்வனவு செய்து வருகின்றது.

உக்ரெயின் தவிர சீனா, ஆர்ஜன்டீனா, இஸ்ரேல் ஆகிய நாடுகளிடமும் இலங்கை வானூர்திகளைப் பெற்றுள்ளது.

அத்துடன் அமெரிக்காவிடமிருந்தும் பெரும் பொருட் செலவில் பெல் ரகத்தைச் சேர்ந்த ஹெலிகாப்டர்கள் வாங்கப்பட்டுள்ளன.

அண்மையில் இலங்கை விமானப்படை அதன் பொன்விழாவைக் கொண்டாடியபோது பிரிட்டனிடமிருந்து ஹேர்க்குலிஸ் ரகம் என்றழைக்கப்படும் இராட்சத சரக்கு விமானமொன்றையும் பல கோடி ரூபா செலவில் இலங்கை பெற்றிருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கு-கிழக்கு யுத்தம் விரிவடைந்ததையடுத்தே விமானப்படையின் பலமும் பன்மடங்காகியது. தரைமார்க்கமாக தென்னிலங்கையிலிருந்து வடபகுதிக்குச் செல்கின்ற பாதைகள் அனைத்துமே யுத்தக் கெடுபிடிகளுக்குள்ளாகியுள்ளன.

ஆகாய மார்க்கமான ஒத்துழைப்பு தரைப்படைகளுக்கு இன்றியமையாததாகின்றது. குண்டு வீச்சு, கண்காணிப்பு என்பவற்றுக்காக மட்டுமல்ல. விநியோகங்கள் மற்றும் போக்குவரத்து என்பவற்றுக்குக் கூட விமானங்களையே பெரிதும் தங்கியிருக்கவேண்டியுள்ளது.

விமானப்படையினரது தரப்பில் பலவீனம் ஏற்படுமேயானால் தரைப்படை நடவடிக்கைகள் அனைத்துமே ஸ்தம்பிக்கும் நிலையே தோன்றும்.

இதன் காரணமாகவே பணவிரயத்தையும் பொருட்படுத்தாது விமானப்படையை எப்போதுமே ஒரு பலமான நிலையில் வைத்திருக்கவேண்டியது இராணுவ நடவடிக்கைகளைப் பொறுத்தவரை அவசியமானதாகின்றது.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்கள் கடந்த ஒரு தசாப்த காலத்துக்கும் மேலான யுத்தத்தினால் சின்னாபின்னப்பட்டுப் போயுள்ளன.

ஆகாய மார்க்கமான குண்டுகள், ஏவுகணைகள் என்பவற்றின் பாவனை காரணமாக எண்ணிலடங்காத உயிர்ச் சேதங்கள் உட்பட சொத்துக்கள், உடமைகள் என்பவற்றுக்கும் பெரும் அழிவுகள் ஏற்பட்டுள்ளன.

சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்னரே யாழ்ப்பாணத்தில் விமானக் குண்டு வீச்சுக்கள் ஆரம்பமாகியிருந்தன.

அப்போது விமானப்படையினர் இத்தாலியிடமிருந்து வாங்கிய சியாமெச்செட்டி ரக பயிற்சி விமானங்களைப் பாவித்தே குண்டு வீச்சுக்களை நடத்தினர்.

இந்த விமானங்களுக்குத் துணையாக அவ்ரோ ரக பழைய பிரிட்டிஷ் விமானங்களும் தாக்குதல்களில் ஈடுபட்டிருந்தன.

குண்டுவீச்சுக்கள் ஆரம்பித்த காலகட்டங்களில் வானமே இடிந்து வீழ்வது போன்ற சத்தமே குடாநாட்டை அதிரவைத்தது.

ஆகாயமார்க்கமான தாக்குதல்களின் போது பரல்களில் தயாரான வெடிமருந்து மற்றும் இரும்புத் துகள்கள் திணிக்கப்பட்ட பாரிய பெட்ரோல் குண்டுகளும் வீசப்பட்டன. இக்குண்டுகள் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்துபவையாக இருந்தன.

ஆகாயமார்க்கமான தாக்குதல்கள் விரிவடைய ஆரம்பித்த அதேசமயம், தரையிலிருந்தும் கனரக ஆயுதங்களின் பாவனை அதிகரிக்கலாயிற்று.

இந்த ஆயுதங்களில் நெடுந்தூர ஆட்டிலறி பீரங்கிகள் முக்கியமானவை. அண்மைக் காலங்களில் பல குழல் பீரங்கி என ஒரு சில செக்கன்களில் ஏராளமான வேட்டுக்களைத் தீர்க்கும் கனரக ஆயுதத்தின் பாவனையும் வடக்கு-கிழக்கில் இடம் பெற்று வருவதாகவே இருக்கின்றது.

வடக்கு-கிழக்கில் இடம் பெற்று வருகின்ற யுத்தத்தின் கடந்த இருபது வருடகால வரலாற்றை நோக்கும் பட்சத்தில் ஒரு பெரும் ஆயுதப் போட்டியே நடந்து வந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

புலிகளை முழுமையாக வெல்லவோ, அல்லது அவர்களிடமுள்ள ஆயுதங்களை அழிக்கவோ முடியாத நிலையில் அரச படைகள் இருந்துவருகின்றன.

சர்வதேச ஆயுத விற்பனையாளர்களும், உற்பத்தியாளர்களும் கழுகுகளைப் போல வட்டமிட்டு வந்து இலங்கையில் இடம் பெறும் யுத்தத்தைத் தமக்கு நல்ல வாய்ப்பாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

சர்வதேச ஆயுத விற்பனையாளர்களுக்கு உதவியாக இலங்கையிலும் பல உள்ளூர்த் தரகர்கள் இருப்பதுடன், அத் தரகர்களும் பெருங்கோடீஸ்வரர்களாக மாறியிருப்பதையே காணமுடிகின்றது.

இலங்கைப் படையினருக்கென விதவிதமான ஆயுத தளபாடங்கள் ஆண்டுதோறும் வாங்கிக் குவிக்கப்பட்டு வரும் இத்தருணத்திலேயே, இரசாயன ஆயுதங்கள் என்ற பயங்கர ஆயுதங்கள் குறித்தும் பேச்சுக்கள் எழுந்துள்ளன.

இரசாயன ஆயுதங்கள் பெறப்பட்டிருப்பது குறித்த தகவலில் எவ்வித உண்மையுமில்லை என்று அரசு தெரிவித்துள்ளது.

இருப்பினும் கடந்த காலங்களில் படிப்படியாக ஆயுத தளபாடங்களின் பாவனை பெற்று வந்த வளர்ச்சியினைப் பார்க்கும்போது இரசாயன-நச்சு ஆயுதங்கள்கூட விரைவில் வடக்கு-கிழக்கு யுத்தத்தில் இடம் பிடித்து விடுமோ என்ற பீதியே போராபத்துக்களுக்கு ஏற்கனவே முகங்கொடுத்து வருவோரிடத்தே காணப்படுகிறது.

எத்தகைய கனரக மற்றும், அபாயகரமான ஆயுதங்களையும் கொள்வனவு செய்யலாம். ஆனால் இனி வருங்காலங்களில் யுத்தத்தை இடைவிடாது நீடித்துச்செல்வதற்கான பணப்பலத்துடன் இலங்கையின் ஆட்சியாளர்களால் இருக்க முடியுமா? என்பதே முக்கிய கேள்வியாக இருக்கின்றது.

கட்டுநாயக்கா விமானத்தளம் மீது நடத்தப்பட்டுள்ள கடுந்தாக்குதல் இலங்கையின் பாதுகாப்ப வட்டாரங்களை மட்டும் அச்சுறுத்திவிடவில்லை.

முழு நாட்டையுமே பொருளாதார ரீதியாக ஆட்டங்காண வைப்பதாகவே அமைந்துள்ளது.

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் ஊடாக நடத்தப்படுகின்ற விமானப்போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ள அதேசமயம், கொழும்புத்துறைமுகத்தின் முக்கியத்துவம் கூட பாதிப்பை எதிர்நோக்கியதாகவே இருக்கின்றது.

கடல்வழிப் போக்குவரத்தைப் பொறுத்த வரை பூகோள ரீதியாக மேற்கத்தேய நாடுகளையும், கீழைத்தேச நாடுகளையும் இணைக்கின்ற ஒரு முக்கிய ஜல சந்தியாகவே கொழும்புத் துறைமுகம் விளங்குகின்றது.

இங்கே இதுவரைகாலமும் பல்வேறு முன்னணி கப்பல் நிறுவனங்களும் தமது போக்குவரத்தை மேற்கொண்டு வருபவையாக இருக்கின்றன.

கட்டுநாயக்கா விமான நிலையத்தாக்குதலையடுத்து கப்பல் போக்குவரத்துக்குக்கூட அச்சுறுத்தல்கள் ஏற்படலாமென பிரபல சர்வதேச கப்பல் சேவை ஒன்றியமான லொயிட்ஸ் நிறுவனம் (Lloyds) எச்சரித்துள்ளது.

அத்துடன் கொழும்புத் துறைமுகம் ஊடாகச் செல்லும் கப்பல்களின் காப்புறுதிப் பணத்தை அதிகரிக்கப் போவதாகவும் அறிவித்திருந்தது.

லொயிட்ஸ் நிறுவனம் அத்தகையதொரு அதிகரிப்பை மேற்கொள்ளுமேயானால் எரிபொருள் முதற்கொண்டு இலங்கையில் அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் பாரிய விலை அதிகரிப்பையே சந்திக்க வேண்டியதாகவிருக்கும்.

இந்த அச்சுறுத்தலை எதிர்நோக்கிய நிலையிலேயே இலங்கையின் முன்னாள் நிதியமைச்சரும், தற்போதைய கப்பல்துறை அமைச்சருமான ரொனி டி மெல் இலண்டனுக்கு கடந்தவாரம் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

அங்கு அவர் லொயிட்ஸ் நிறுவன உயர் மட்டத்துடன் கப்பல் காப்புறுதிப் பணத்தின் அதிகரிப்பை தவிர்த்துக்கொள்வது தொடர்பாகவும் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தார்.

ரொனி டி மெல்லும் அவரோடு சென்ற உயர்மட்டக் குழுவினரும் தமது தரப்பு நிலைப்பாடுகளை எடுத்துக் கூறியிருக்கலாம்.

ஆனால் சர்வதேச கப்பல் நிறுவனங்கள் பலவும் இயற்கை அனர்த்தம், தீ விபத்து, யுத்த நிலபரம், பயங்கரவாத நடவடிக்கைகள் என்பவை தொடர்பாக தமது கப்பல்களைப் பலகோடி டொலர்களில் காப்புறுதி செய்தவையாக இருக்கின்றன.

இந்நிலையில் கொழும்புத்துறை முகத்துக்கு வந்து போகின்ற கப்பல்களுக்கு ஏதாவது அனர்த்தம் ஏற்படுமேயானால், அக்கப்பல்களுக்கு பெருந்தொகைப் பணம் இழப்பீடாகக் கொடுக்கப்பட வேண்டியதாகவே இருக்கும்.

இதன் காரணமாகவே சர்வதேச லொயிட்ஸ் நிறுவனம் உறுதியான முடிவுகளை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகியுள்ளது. அந்த முடிவுகளுக்கு அஞ்சிய நிலையில் இலங்கை அரசாங்கமும் லொயிட்ஸ் நிறுவனத்தோடு பேச்சுக்களை நடத்த உயர் மட்டக் குழுவை அனுப்பிவைத்திருந்தது.

வயிற்றில் பலத்த அடிவீழ்ந்தது போல பொருளாதார நிலபரம் ஆட்டங்காண ஆரம்பித்ததுமே ஒரு வெளிநாட்டு நிறுவனம் முன்பாக மண்டியிட வேண்டிய நிர்ப்பந்தம் அரச தரப்புக்கு ஏற்பட்டுள்ளது.

ஆனால் இலங்கையை ஆட்டிப்படைத்துவரும் வடக்கு-கிழக்குப்பிரச்சனையைத் தீர்த்து வைப்பதில் வெளிநாடுகள் தாமாகவே உதவ முன்வரும்போது அந்த உதவியை மனமுவந்து ஏற்பதற்கு அரசதரப்புத் தயாராக இல்லை.

ஜனாதிபதியின் பணிப்பின்பேரில் விமானப்படை ஹெலிகாப்டர் ஒன்று இத்தடவை நல்லூர்க் கந்தனுக்கு செலுத்திய மலரஞ்சலி மூலமாகவேனும் இலங்கைக்கு ஒரு விமோசனம் கிட்ட வேண்டும்!!! ■

## அதிரடி அய்யாத்துரை



***கடந்த நூற்றாண்டில்*** *சிறந்த நகைச்சுவை நடிகர் சார்லி சாப்ளினெண்டாலும் இந்த நூற்றாண்டில அது நம்ம மகேஸ் வரனுக்குத்தான். உந்தாள் அடிக் கடி ஜோக் விட்டாலும், போன வாரம் ஒரு ஜோக் விட்டவர். உதப்போல எதுவும் தேறாது பாருங்கோ.பயங்கரவாதத் தடைச் சட்டத்தை கொண்டுவந்ததுக் காக யாழ்ப்பாணத்தில விழா எடுக்கப்போறதா சொல்லிப் போட்டார் மகேஸ்வரன். புரியேல்லையே.. சரி வேறு மாதிரி சொல்றன் கேளுங்கோ.. அவசரகால சட்டம் நீக்கப்பட்டதுக்கு தான்தான் காரணமெண்டு சொன்ன உவர், அதை யாழ் நகரில கொண்டாடப்போவதாக ஒரு போடு போட்டிருக்கிறார். இப்போ சொல்லுங்கோ.. போன நூற்றாண்டில பிறந்திருந்தால் நம்மவர் சார்லி சாப்ளினை விஞ்சியிருப்பாரல்லோ.. உந்த ஜீவராசிய பற்றி முன்னரே தெரிந்திருந்தால் ஜே.ஆர். பாராளுமன்றத்த அங்கொடை பக்கமா கட்டியிருப்பார்!*

**பொய் சொன்ன வாய்க்கு** பொரியும் கிடையாதெண்டு சொல்லுவினம். காப்புறுதிக் கட்டணம் மேல மேல பறந்ததுக்கு சொல்லுற காரணங்களில ஒன்று இந்த பழமொழியத்தான் ஞாபகப்படுத்துது. உலகத்தில எந்த மூலையில அபசகுனமான ஏது நடந்தாலும் உது புலிகளின்ர வேலைதான் எண்டு சொல்லிப் பழகிப்போன அரசாங்க வெப்தளம், கப்பல்களை கடற்கொள்ளையர் தாக்கப் போகினம் என்ற செய்தியை திரித்துபோட்டு அசத்திட்டுது. உதுல உள்ள 'கடற்கொள்ளையர்' என்றது புலிகளெண்டு மொழி பெயர்த்து தங்களின்ர வழமையான கெட்டித்தனத்தையும், விசுவாசத்தையும் காட்டிப்போட்டினம். உதப்பார்த்த வெளிநாட்டு கப்பல் காரர் அரசாங்க வெப்தளமே எச்சரிக்கை விடுதெண்டால் 'சம்திங்ரோங்' எண்டு முடிவு செய்து போட்டினம். உதத்தான் சொன்னனான் பொய் சொன்ன வாய்க்கு...

***பாலசிங்கத்தாருக்கு*** *சிறுநீரக சத்திரசிகிச்சை செய்ய யார் உதவினதெண்டு தெரியுமோ.. டாக்டர்தான் என்று சொல்லுவியள். உப்பிடிச் சொன்னால் உங்களுக்கு அறிவில்லை எண்டு அர்த்தம். பாலசிங்கத்த நோர்வேக்கு அனுப்பி வைத்தியம் பார்க்க ஏற்பாடு செய்தது யாரென்று அரசாங்கச் செய்தியறிக்கையில சொன்னவை. உடம்பெல்லாம் புல்லரிச்சுப்போச்சு.. எதிரி மேல உள்ள கருணையை நினைச்சு ஆனந்த கண்ணீர் விட்டனான். யான் பெற்ற இன்பம் நீங்களும் பெற வேண்டாம்..!*

**கோபுர தரிசனம்** கோடி புண்ணியம் என்று சொல்லுவினம். பம்பலப்பிட்டியில் வானுயரக் கோபுரம் கட்டி பிள்ளையாருக்கு விழா எடுத்துப்போட்டினம். இன்று ஊருக்கு தரிசனம் கொடுக்கிற உந்த கோபுரக் கோயிலின்ர புண்ணியத்துலதான் ஜூலைக் கலவரத்துல ஆயிரக்கணக்கான சனத்துக்கு அடைக்கலம் கிடைச்சது. ரெண்டு தசாப்தத்திற்குப் பிறகு மீண்டும் ஜொலிக்கும் அந்த கோயிலின் நிழலில் மக்கள் இனிமேலாவது நிம்மதியாக வாழ பிள்ளையாரே துணை!

***அரசாங்கத்தின்ர கதியைப்பற்றி*** நிறையப் பேர் ஏதேதோவெல்லாம் சொல்லுகினம். மனிதனின்ர விதியைப் பற்றி எல்லிஸ் என்பவரின் கருத்து இது:

**ஒரு மனிதனின் விதி அவன் எதிர்காலத்தில் அல்ல... அவனின் கடந்த காலத்தில்தான் இருக்கிறது!**

# உண்மைத் தொடர் 21

# உலகை உலுக்கிய சர்வாதிகாரி அடோல்வ் ஹிட்லர்

ஹிட்லரின் நடவடிக்கைகள் ஜிலி ரூபலுக்குள் ஒரு இனம்புரியாத பயத்தை ஏற்படுத்தியது. அவன் தன்னிடம் மிக அன்பாக நடந்துகொள்வதால், அவனை நல்லவன் என்று சில நேரங்களில் நினைப்பாள். ஆனால் நாட்டில் ஆங்காங்கே நடக்கும் அரசியல் முக்கியஸ்தர்களின் கொலைகளுக்கு ஹிட்லர்தான் காரணம் என்பதை அறியும்போது அவளுக்குப் பயமாகவும் இருந்தது.

பெர்லின் நகரின் மேலாக ஹிட்லரை ஏற்றிய விமானம் பறந்துகொண்டிருந்தது. நாட்டுத் தலைவருக்கான பிரத்தியேக விமானம். அருகில் அரைகுறை ஆடையுடன் ஜிலி அமர்ந்திருந்தாள்.

தூர இடங்களுக்குச் செல்லும் போது தனது செயலாளர், அல்லது காதலி என்று ஏதாவது ஒரு பிரிவின்கீழ் உள்ளடக்கி ஜிலியை அழைத்துக்கொண்டே செல்வான்.

விமானத்தில் சாய்ந்து அமர்ந்திருந்த ஜிலியின் கைகளை மெதுவாகப் பற்றினான் ஹிட்லர். 'என்ன' என்பது போல் அவளது பார்வை இருந்தது. அமைதியாக இருந்தாள். மற்றைய நாட்களில் காணப்படும் மகிழ்ச்சி இன்று அவளிடம் இல்லை. எப்பொழுதும் போலவே உதடுகள் சிவப்பாக இருந்தன. அவளது மேற்சட்டையைத் தாண்டி மார்பின் பெரும்பகுதி வெளியில் தெரிந்தது. வேறு நேரத்தில் என்றால் ஹிட்லர் அவற்றை பிடித்து... இன்று அப்படியான 'மூட்' அவளுக்கு இல்லை என்று அவன் உணர்ந்து கொண்டான்.

ஜிலியின் கைகளைப் பற்றிய அவன் அவற்றில் முத்தமிட்டதோடு நிறுத்திக் கொண்டான். அவளது கண்களில் ஒரு இனம்புரியாத சோகம் மறைந்திருப்பதுபோல் அவனுக்குத் தோன்றியது. எதுவும் கேட்கவில்லை.

பெர்லினுக்கு வெளியில் உள்ள ஒரு இடத்தில் அன்றைய இரவை ஹிட்லருடன் கழித்த ஜிலிரூபல், மறுநாள் அவனுக்கு எதுவும் கூறாமலே பிரிந்து சென்று விட்டாள்.

இந்தச் சம்பவம் நடைபெற்று இரண்டு நாட்களில் ஜிலி தற்கொலை செய்து கொண்டதாக ஹிட்லருக்கு அறியக்கிடைத்தது. ஹிட்லர் அதிர்ச்சியடைந்தான். அண்மைக் காலங்களில் அவனை மோசமாக பாதித்த விடயமாக ஜிலியின் தற்கொலை அமைந்திருந்தது. ஆனால் அவளது தற்கொலைக்கான காரணம் குறித்து பின்னர் எந்தத் தகவலும் வெளியாகவில்லை. உண்மையில் ஜிலிக்கும் ஹிட்லருக்கும் இடையிலான உறவு முறிந்ததா என்பது குறித்தோ அவள் ஹிட்லராலேயே கொலை செய்யப்பட்டிருக்கலாமா என்பது பற்றியோ நிச்சயமான தகவல்கள் இல்லை. எவ்வாறெனினும் ஜிலி இறந்து போனபின் சில நாட்கள் ஹிட்லர் மிகுந்த கவலையுடன் காணப்பட்டான். பல வைபவங்களுக்கு வருகை தரவில்லை. ஏறபாடு செய்யப்பட்டிருந்த கூட்டடங்கள் பலவற்றை இரத்துச் செய்தான்.

சில காலமாகவே ஜிலி மிகுந்த கவலையுடன் காணப்பட்டதாக அவளது நண்பி பின்னர் கூறியிருந்தாள். ஹிட்லரின் இறுதி காலத்தில் அவனுடன் சேர்ந்து உயிர் விட்டதாக நம்பப்படும். ஈவா பிரவுனுக்கு அடுத்ததாக அவனது அன்பை அதிகம் பெற்றிருந்தவளாக ஜிலி ரூபல் கருதப்பட்டாள். ஹிட்லரின் ஆட்சியில் நடந்த பல கொலைகளுக்குப் போலவே இந்த தற கொலைக்கும் கடைசிவரை காரணம் இல்லாமலே போய்விட்டது.

1934ம் ஆண்டு இறுதிப்பகுதியாகும் போது ஹிட்லர் அசைக்க முடியாத தலைவராக தன்னை உறுதிப்படுத்திக் கொண்டிருந்தான். அந்த ஆண்டு ஆகஸ்ட் 2ம் திகதி அவனுக்கு ஓரளவேனும் சவாலாக இருந்த ஒரே அரசியல் எதிராளியான ஹிடன்பேர்க் மரணமானார். அதைத் தொடர்ந்து நாட்டின் தலைவராக மட்டுமன்றி ஆயுதப்படைகளின் பிரதம தளபதியாகவும் தன்னைப் பிரகடனம் செய்து கொண்டான். தனக்கு நெருக்கமான இராணுவ அதிகாரிகளை வரவழைத்து அவர்கள் முன்னிலையில் பெயரளவிலான சத்தியப்பிரமாண வைபவம் ஒன்றையும் நடத்தினான்.

எவ்வாறிருந்தாலும் அவன் தனது சர்வாதிகாரப் போக்குக்கு மத்தியிலும் நாட்டின் பொருளாதாரத்தை மீளமைப்பதில் மிகத்திறமையாக செயற்பட்டான். 1933ம் ஆண்டாகும்போது ஜெர்மனியின் பொருளாதாரம் முற்றாக சின்னா பின்னமாகியிருந்தது. தொழில் செய்யக் கூடிய வயதினரின் சரிபாதிப்பேர் வேலையற்றிருந்தார்கள்.

பெரும்பாலான நகரங்களில் மின்சாரமற்றிருந்தது. வெளிநாட்டு வர்த்தகம் மோசமாகப் பாதிப்புக்குள்ளானது. 1890ம் ஆண்டுகளின் பின்னர் ஜெர்மனின் இருண்ட காலமாக இது கருதப்பட்டது. ஆனால் 1936ம் ஆண்டாகும் போது நிலைமையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டது. (1936-1937) அடுத்த ஒரு வருட காலத்தில் தேசிய வருமானம் இருமடங்காக அதிகரித்தது. தொழிலாளர்களுக்கான ஊதியங்கள் பெருமளவில் அதிகரிக்கப்பட்டன.

இறக்குமதி முடியுமானவரையில் மட்டுப்படுத்தப்பட்டது. உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட சடுதியான வளர்ச்சி வெளிநாட்டு நாணயமாற்றை ஏராளமாக சம்பாதித்துக் கொடுத்தது. கைத்தொழில் துறையில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் விளைவாக வாகன உற்பத்தியில் ஜெர்மன் ஆர்வம் காட்டத் தொடங்கியது.

இந்தக் காலப்பகுதியில் ஹிட்லரின் பணிப்பின் பேரில் அமைக்கப்பட்ட பொறியியலாளர் குழுவொன்றினால் 1939ல் வடிவமைக்கப்பட்ட வொக்ஸ் வோகன் கார் சர்வதேச ரீதியில் பெரும் வெற்றிகண்ட ஒரு ஜெர்மனிய உற்பத்தியாக இடம் பிடித்தது.

வொக்ஸ் வோகன் காரின் வடிவமைப்பு பொறியியலாளர்களால் ஹிட்லருக்கு காண்பிக்கப்பட்டபோது, அவன் பெருவாரியான மகிழ்ச்சி ஆரவாரம் செய்து அவர்களை பாராட்டினான். நாட்டின் கல்வித்துறையிலும் கூடுதல் ஆர்வம் காட்டிய ஹிட்லர் பல்கலைக் கழகங்கள் பலவற்றையும் அமைத்தான்.



## ஷானு

இந்த ஆக்கபூர்வமான கைத்தொழில் வளர்ச்சிக்கு சமாந்திரமாகவே அவனது அழிவுப்பாதையின் பயணமும் மெதுவாக ஆரம்பமானது.

ஜெர்மனிய இராணுவத்தை மீளமைக்கும் திட்டம் ஒன்றை அறிவித்தான் ஹிட்லர். அதன் ஆரம்பப்படியாக படையினரின் எண்ணிக்கை இருமடங்கு அதிகரிக்கப்பட்டது. ஆயுதப்படைகளின் சார்பாக பணியாற்றவென இராணுவமல்லாத மேலும் 8 இலட்சம் பேரையும் நியமித்தான்.


அந்த தசாப்தத்தின் முடிவில் ஐரோப்பாவிலேயே மிகப்பெரும் விமானப்படையை ஜெர்மனி கொண்டிருந்தது. 90 பில்லியன் மார்க்குகளை ஆயுத மீளமைப்புக்காக முதல் 5 வருடங்களில் ஹிட்லர் செலவிட்டான்.

**வருவான்...**

## உதட்டழகிகள் தர வரிசைப் பட்டியல்



பிரிட்னி



டயஸ்

முன்பெல்லாம் பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் அந்த அழகி, இந்த அழகி என்று அழகிகளைத் தேர்ந்தெடுநத வேலைகளை இப்போது வெப்தளங்களும் செய்ய ஆரம்பித்து விட்டன.

அண்மையில் வெப்தளம் ஒன்று அழகான உதடுகளைக் கொண்ட புகழ்பெற்ற பெண்களை வரிசைப்படுத்தியுள்ளது. இதில் முதல் பத்து இடங்களுக்குள் பொப்பிசைப் பாடகிகள், ஹொலிவூட் நடிகைகள், விளையாட்டு நட்சத்திரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.



ஹிஞ்சிஸ்

புகழ்பெற்ற பொப்பிசைப் பாடகி மடோனாவிற்குப் பின் உச்சத்தில் இருக்கம் இளம் பொப்பிசைப்பாடகி பிரிட்னி ஸ்பியர்ஸ் முதல் பத்து இடத்திற்குள் வந்திருக்கிறார்.

நடிகைகளில் 'சார்ளிஸ் ஏஞ்சல்ஸ்' படத்தில் நடித்துள்ள சுமரூன் டயஸிற்கும் விளையாட்டு வீராங்கனைகளில் டென்னிஸ் நட்சத்திரம் மார்ட்டினா ஹிஞ்சிஸிற்கும் அழகான உதடுகள் என்று சொல்லி அவர்களையும் முதல் பத்து இடங்களுக்குள் சேர்த்துள்ளது அந்த வெப்தளம்.

இந்த உதடுகள் தரப்படுத்தல் வரிசையில் ஒவ்வொருவரது உதடுகளையும் முத்தமிடக்கூடிய, தொட்டு இரசிக்கக்கூடிய காதலிக்கக் கூடிய என்று வகைவகையாகப் பிரித்துள்ளது வெப்தளம்.


## பிரமாண்டமான ரோஜாத் தோட்டம்

இங்கிலாந்து இளவரசி டயானா இறந்து வருடங்கள் 4 ஆகின்றன. இங்கிலாந்தில் அவருக்குப் பல இடங்களில் நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

இப்போது இலண்டனுக்கு வடக்கே பிரமாண்டமான ரோஜாத் தோட்டம் ஒன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளார்கள். 'அரசு ரோஜா மலர் தேசிய கழகம்' இந்தத் தோட்டத்தை அமைக்கிறது.

இந்த ரோஜாப் பூந்தோட்டத்தின் பரப்பளவு 50 ஏக்கர். சுமார் 250 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் இந்த ரோஜாத் தோட்டம் உலகிலேயே பெரியதாக இருக்கும் எனக் கருதப்படுகிறது. 2003ம் ஆண்டில் இதன் வேலைகள் முடிவடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிச்சை எடுக்கும் அனுமார்



'பிச்சை எடுத்ததாம் அனுமார், அதைப் பிடுங்கியதாம் பெருமாள்' என்பது பழமொழி. இதற்கொப்ப அனுமார் வேடம் போட்டுக் கொண்டு ஒருவர் பிச்சை எடுத்து வருகிறார்.

இது இங்கல்ல, இந்தியாவில் உள்ள ஆந்திராமாநிலத்தில் அதுவும் திருப்பதி (பெருமாள்) கோவிலுக்கு முன்பாக.

சில காலமாக திருப்பதி தேவஸ்தானத்திற்கு முன்பாக அனுமார் வேடத்தில் நின்று பிச்சை எடுக்கும் இந்தப் பிச்சைக்காரரின் பெயர் ஹுஸைன் என்பதாகும்.

## பெண்களின் உணர்வுகளைத் தட்டியெழுப்பும் எலக்ரோனிக் கருவி

ஆண்களை அந்த விஷயத்தில் கிளர்ச்சியடைய வைக்க 'வயாக்ரா' என்ற வீரிய மாத்திரை கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்து பெண்களுக்கும் உணர்வைத் தூண்டும் மாத்திரைகள் அறிமுகமாகிய வண்ணம் இருக்கின்றன.

ஆனால் உலகில் 50 சதவீதத்திற்கும் அதிகமான பெண்களுக்கு 'அந்த' விஷயத்தில் ஈடுபட விருப்பமே கிடையாது என்று சமீபத்தில் எடுக்கப்பட்ட ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது

இதற்கு மனச்சோர்வும் உடலில் போஷாக்கின்மையுமே காரணம் என்று அமெரிக்காவின் வோஷிங்டன் பல்கலைக் கழக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இப்படிப் பாதிப்புடைய பெண்களுக்காக 'எலக்ட்ரோனிக் கருவி' ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பெண்களின் முதுகுப் பகுதியில் இந்தக் கருவியைப் பொருத்தியவுடன், அவர்களது 'உணர்வுகள்' தட்டி எழுப்பப்பட்டு தயார் நிலைக்கு வந்து விடுவதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கிறார்கள்.

வடக்கு கரோலினாவைச் சேர்ந்த விஞ்ஞானிகள், தாங்கள் நடத்திய இந்த 'எலக்ட்ரோனிக் கருவி' பரிசோதனை வெற்றி அடைந்திருப்பதாகக் கூறியுள்ளார்கள்.

இதுபற்றி ஜூலியா ஹிமென் என்ற பெண் விஞ்ஞானி கருத்துத் தெரிவிக்கையில்,

"உலகம் முழுவதும் எடுக்கப்பட்ட ஆய்வில் பெண்களிடம் 'செக்ஸ்' ஆர்வம் குறைந்து வருவது கவலைக்குரியது.இதனை வீரிய மாத்திரைகளால் மட்டும் சரிசெய்து விட முடியாது என்பதால், தற்போது 'எலக்ட்ரோனிக்' முறையைப் பயன்படுத்தி வருகிறோம்" என்று தெரிவித்துள்ளார்.

## மனைவியை அடித்தால் 'டிஸ்மிஸ்'



மனைவியைஅடித்து உதைத்துச் சித்திரவதை செய்யும் அரசாங்க ஊழியர் வேலையில் இருந்து உடனடியாக பதவி நீக்கப்படுவார். இந்த அதிரடி உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது இந்தியாவில் ராஜஸ்தான் மாநில அரசு.


ராஜஸ்தான் மாநிலத்தில் சமீபகாலமாக கணவன்மார்களின் சித்திரவதைகளால் ஏராளமான பெண்கள் தற்கொலை செய்வது அதிகரித்துவருகிறது.

சில பெண்கள் கணவர்களால் அடிமையாக நடத்தப்பட்டு வருவதும் அரசுக்குத் தெரியவந்துள்ளது. இதற்கு முடிவு கட்ட 'சேவை விதிகள் 1999' யின்படி 'மனைவியை அடித்து உதைத்தாலோ சித்திரவதை செய்தாலோ உடனடியாகப் பதவி நீக்கம் அல்லது இடைநீக்கம் செய்யப்படுவார்கள்' என்று புதிய சட்டத்தை அமுல்படுத்தியுள்ளது.

இச்சட்டத்தில் மனைவியை சித்திரவதை செய்யும் கணவரின் சம்பளம் அவரது கையில் வழங்கப்படமாட்டாது. நேரடியாக மனைவியிடமோ அல்லது குழந்தைகளிடமோ தான் கொடுக்கப்படும்.

மனைவியரை விளர்சித்தள்ளும் கணவர்களுக்குத் தனது புதிய சட்டத்தால் 'பளார்' வைத்துள்ளது ராஜஸ்தான் அரசு.

## தகவல் பெட்டி




## நாய்ப் பிச்சை

நாய் ஒரு நன்றியுள்ள பிராணி என்பது எல்லாருக்கும் தெரிந்த ஒன்று. பொதுவாக வீட்டில் செல்லப்பிராணிகளாக வளர்க்கப்படும் நாய்கள் வீட்டையும் வீட்டிலிருப்போரையும் பத்திரமாகக் கவனித்துக் கொள்கிறது.

சில நாய்கள் வித்தைகளைச் செய்து காட்டி எஜமானர்களுக்கு சம்பாதித்துக் கொடுப்பதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். பாங்கொக் நகரில் உள்ள நாய் ஒன்று தனது வறிய எஜமானருக்காகப் பிச்சை எடுத்துக் கொடுக்கிறது.

பாங்கொக் நகரில் பாதசாரிகள் நடமாடும் இடத்தில் பிச்சை எடுக்கும் இந்த நாய், ஒவ்வொரு நாளும் ஆயிரம் பாட் (நம்நாட்டு மதிப்பில் சுமார் 2 ஆயிரம் ரூபாய்) சம்பாதிக்கிறதாம்.





## வெற்றிப் பயணம்

அமெரிக்காவைச் சேர்ந்த ஸ்டீவ் ஃபொசெட் என்பவர் விண்வெளியில் பலூனில் பறந்து சாதனை படைக்க பலமுறை முயன்று தோல்வி கண்டவர்.

இருப்பினும் தளராத முயற்சியினால் தோல்விகளைக் கண்டு துவண்டு விடாது வெற்றி பெற்றுள்ளார். கடந்த ஆகஸ்ட் மாதம் 7ம் திகதியன்று அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரத்தில் இருந்து பிரிஸ்பேர்ன் நகருக்குப் பறந்து சென்றார்.

இவரது வெற்றிப் பயணத்தின்போது பிடிக்கப்பட்ட படமிது.

## கருணைக் கொலை



## நினைவு அஞ்சலி

இரண்டாவது உலகப்போரில் சின்னஞ்சிறிய ஜப்பான் ஜெர்மனியுடன் சேர்ந்திருந்தது. இதனால் அமெரிக்கா தான் கண்டுபிடித்த அணுகுண்டை 1945. ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6ம் திகதியன்று ஜப்பானில் ஹிரோஷிமா நகர்மீது வீசியது.

அந்த அணுகுண்டு வெடித்தபோது இலட்சக்கணக்கானோர் வசித்த அந்த நகரம் அதே கணத்தில் இருந்த இடம் தெரியாமல் நிர்மூலமாகியது. இலட்சக்கணக்கான மக்கள் ஒரே நொடியில் மாண்டனர்.

அந்தப் பேரழிவு நடைபெற்று 56 வருடங்கள் நிறைவுபெற்றதை ஒட்டி, அதற்காக அமைக்கப்பட்டிருந்த நினைவுச் சின்னத்தின் அருகே ஜப்பானியர்கள் தரையில் படுத்துத் தமது அஞ்சலியைச் செலுத்தினர்.



அளவிற் பெரிய கடல் உயிரினங்கள் கரையொதுங்குவது அடிக்கடி நடைபெறுவதுண்டு. உயிருடன் ஒதுங்கும் பிராணிகளை மறுபடி கடலுக்குள் இழுத்துச் சென்று விட்டு விடுவார்கள்.

சிலவேளைகளில் பெரும் கடற்பிராணிகளை மறுபடி கடலுக்கு அனுப்பாமல் கொன்று விடுவார்கள். அவற்றின் துன்பங்களுக்கு முடிவு கட்டுவதற்காக 'கடற்பிராணிகள் பாதுகாப்புக் கழகம்' கருணைக் கொலை செய்துவிடும்.

அண்மையில் 10 மீட்டர் நீளமும் 20 தொன் எடையுமுள்ள திமிங்கிலம் ஒன்று தென்னாபிரிக்கக் கடற்கரையில் உயிருடன் ஒதுங்கியது. அதைக் கருணைக் கொலை செய்து விட முடிவு செய்தது 'கடற்பிராணிகள் பாதுகாப்புக் கழகம்.'

## பலமான மீசைக்காரர்

இந்தியாவில் கர்நாடக மாநிலத் தலைநகரான பெங்களூரைச் சேர்ந்த சுப்பா ராவ் என்பவர் பெரிய மீசை வைத்திருக்கிறார்.

அவரது மீசை பெரிதானது மட்டுமல்ல, பலமானதும்கூட. அண்மையில் தனது மீசையில் இரு முனைகளிலும் சமையல் எரிவாயு நிறைந்த சிலிண்டரைக் கட்டித் தூக்கினார். அதேநேரம் கைகளிலும் இரண்டு சிலிண்டர்களைத் தூக்கிச் சாதனை படைத்தார்.

இப்படித் தனது மீசையின் பலத்தால் சிலிண்டரைக் கட்டித் தூக்கி 'கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார் சுப்பாராவ்.

# மினி சினி

* காதலன்-சிம்ரான் ஜோடியாக நடிக்க மணிரத்னம் இயக்கும் படத்திற்கு முதலில் 'கன்னத்தில் முத்தமிட்டால்' என்று பெயரிட்டிருந்தார். பின்னர் 'குடை' என்றார்கள். இப்போது 'மஞ்சள் குடை' என்று மாற்றிவிட்டதாகக் கூறுகிறார்கள்.

* டி.ராஜேந்தரால் 'சொன்னால் தான் காதலா' படத்தில் அறிமுகமான 'கருத்தம்மா' ராஜஸ்ரீயின் தங்கை பாமி, இப்போது மலையாளப் படமொன்றில் நடித்து வருகிறார்.

* சௌந்தர்ராஜன் இயக்கத்தில் பிரபு-கார்த்திக் இணைந்து நடிக்கும் 'கிளிக்' படத்தில் பிரபு புகைப் படப்பிடிப்பாளராக நடிக்கிறார். இதில் இவருக்கு ஜோடியாக கிறிஸ்தவப் பெண்ணாக தேவயானி நடிக்கிறார்.

* சேரன் இயக்கும் 'பாண்டவர் பூமி' படத்தில் அருண்குமாருக்கு ஜோடியாக நடிப்பவர் ஷமிதா. இவர் திவ்யு போல 'விண்ணோடும் முகிலோடும்' படத்தில் ஷிவானி என்ற பெயரில் பிரசாந்த் ஜோடியாக அறிமுகமானவர்.

* பாலா இயக்கும் 'நந்தா' படத்தின் மூலம் மறு பிரவேசம் செய்யும் சரவணன், அதையடுத்து, இராம.நாராயணன் இயக்கும் புதிய படமொன்றில் கதாநாயகனாக நடிக்கவுள்ளார்.

* ஒளிப்பதிவாளர் ஜீவா இயக்கத்தில் மாதவன்-சிம்ரான்-ஜோதிகா நடிக்கும் '12பி' படம், 'ரன் லோலா ரன்' என்ற ஜெர்மனியப் படத்தின் உல்டா என்கிறார்கள்.

* வெற்றிப்பட வரிசையில் இணைந்துள்ள 'சிட்டிசன்' படத்தில் பல கெட்-அப்களில் அசத்திய அஜித், அடுத்து நடிக்கும் 'ரெட்' படத்திற்காக, முதல் முறையாக மொட்டை போட்டுக்கொண்டு மாறுபட்ட ஒப்பனையில் வருகிறார்.

* கே.ஆர்.ஜெயா இயக்கத்தில் 'உயிரிலே கலந்தது' படத்தில் ஒரு பாடல் காட்சியில் நடனமாடிய விந்தியா, இப்போது சரண் இயக்கும் 'அல்லி அர்ஜுனா' படத்திலும் ஒரு பாடலுக்கு நடனமாடி யுள்ளார்.

# தாதாக்கள் பிடியில் தமிழ்த் திரையுலகம்

மும்பைப் படவுலகின் அசத்தலான அந்த நாயகன் தனது படங்களில் எத்தனையோ வில்லன்களைப் போட்டுப் பந்தாடித் துவம்சம் செய்திருக்கிறார். ஆனால் அன்றைக்கு அந்த வில்லன் முன்பாக கைகட்டி நின்றார்.

"நான் எடுக்கும் படத்தில் உன்னால் நடிக்க முடியாது என்று சொன்னாயா?" என்று அந்த வில்லன் அலட்சியமாகக் கேட்டான்.

"நீங்கள் கேட்ட தேதியில், வேறு படங்களில் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறேன்" என்று அமைதியான குரலில் அந்த நாயகன் சொன்னார்.

"எனது படத்தில் நடிக்காவிட்டால் உயிர் இருக்காது. யார் படத்தில் நீ நடிக்கிறாய்?" என்று அந்த வில்லன் கேட்க, தயாரிப்பாளரின் பெயரைச் சொன்னார் அந்த நாயகன்.

"அவனை நான் பார்த்துக் கொள்கிறேன். நீ எனது படத்தில் நடி" என்று கூறிவிட்டு, அந்தத் தயாரிப்பாளருக்கு ஃபோன் செய்கிறான் வில்லன்.

இந்த வில்லன், சினிமா வில்லன் அல்ல. நிஜ வில்லன். நடந்த காட்சி மும்பையில் நடந்த நிஜமான சம்பவம். மும்பையில் 'அண்டர்கிரவுண்ட்' வேலைகளில் ஈடுபடும் தாதாக்களின் கையில் சிக்கி சீரழிகிறது இந்தித் திரையுலகு.

இப்போது இந்தக் கலாசாரம் தமிழ்த்திரையுலகிலும் வந்துள்ளது. எந்த முன்னறிவிப்பும் இன்றி 'உடனே வா' என நடிகர்களை மிரட்டி வருகிறார்கள் சில தடாலடித் தமிழ்த்திரையுலகப் புள்ளிகள்.

பார்த்திபன், தேவயானி, வடிவேலு ஆகியோரை மிரட்டியே தனது படத்தில் நடிக்க வைத்தார் தயாரிப்பாளரான அந்தத் தாதா.

தனது படத்தில் நடிக்குமாறு மிரட்டிய தயாரிப்பாளர் ஒருவரைப்பற்றி நடிகர் சங்கத்தில் புகார் சொன்னார் ஜோதிகா. ஜோதிகாவுக்கு ஃபோன் மூலம் அச்சுறுத்தல் விடப்பட்டது.

கார்த்திக் தனது நண்பர் ஒருவருக்குத் தயாரிப்பாளர் ஒருவரிடம் இருந்து கடன் வாங்கிக் கொடுத்திருந்தார். பணம் கொடுக்கச் சற்றுத் தாமதமாகியதால் கார்த்திக் படப்பிடிப்புக்காகச் சென்று தங்கியிருந்த ஹொட்டல் சுற்றி வளைக்கப்பட்டது.

கார்த்திக்கிற்கு வேண்டப்பட்டவர்கள் சிலர் பணத்தைக் கொடுத்து அடியாட்களை அங்கிருந்து விலகிப் போகச் செய்தனர்.

இதை விட 'குழந்தை' படத்தின் தயாரிப்பாளர்கள் போதைப் பொருட்களைக் கடத்தியதால் கைது செய்யப் பட்டனர்.

இப்படித் தமிழ்த்திரையுலகில் பல தாதாக்கள் புகுந்து தங்கள் இஷ்டத்துக்கு நடந்து கொண்டிருக்கின்றனர்.

நிலைமை கைமீறிப் போனால் நாளை பெரிய விபரீதமாகும் என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் உணர வேண்டும்.



## நடிக்க வரும் பாடகர்

பிரபல பின்னணிப் பாடகர் ஹரிஹரன் 'பவர் ஒப்ப விமென்' என்ற படத்தின் மூலம் நடிகராக அவதாரம் எடுக்கிறார். ஹரிஹரனுடன் குஷ்புவும் இப்படத்தில் முக்கிய வேடத்தில் நடிக்கிறார்.

தமிழ்-இந்தி ஆகிய மொழிகளில் தயாராகும் 'பவர் ஒப்ப விமென்' படத்தை இயக்குபவர் ஜெயதேவி.

ஜெயதேவியின் கணவரும் ஒரு இயக்குநர் தான். அவர் வேறுயாருமல்ல, 'கடவுள்', 'புரட்சிக்காரன்' போன்ற படங்களை இயக்கிய வேலு பிரபாகரன்.

## மொழிமாற்றுப் படங்கள் அதிகம்

இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை 39 நேரடித் தமிழ்ப்படங்கள் தயாராகியுள்ளன. இந்த 6 மாத காலத்தில் தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்ட பிறமொழிப் படங்கள் 56.

முன்பு மலையாளத்தில் மம்முட்டி, மோகன்லால், சுரேஷ் கோபி நடித்த படங்களும் தெலுங்கில் நாகார்ஜுன், வெங்கடேஷ், பாலகிருஷ்ணா நடித்த படங்களும் கன்னடத்தில் சாய்குமார் நடித்த படங்களும் வெளியாகும்.

ஆனால் இப்போது அதிக அளவில் ஆங்கிலப்படங்களும் 'பலான' தெலுங்கு-மலையாளப் படங்களுமே தமிழில் மொழி மாற்றப்படுகின்றன.

## மேலும் தாமதம்

கமல் இரட்டை வேடங்களில் நடிக்க தாணு தயாரிக்கும் 'ஆளவந்தான்' படவெளியீடு மேலும் மேலும் தள்ளிக் கொண்டே போகிறது. முதலில் சித்திரைப்புத்தாண்டுக்கு வெளியிடுவதாகத் தெரிவிக்கப்பட்டு, கடைசியாக ஆகஸ்ட் 15 வெளியாகவுள்ளதாகக் கூறப்பட்டது. இப்போது, தீபாவளிக்கு வெளியாகும் என்று கூறுகிறார்கள்.

## புதுஜோடி

ரஜினி-கமலோடு இணைந்து நடித்திருக்கும் மீனா, விஜய்-அஜித்தோடு ஜோடி சேரவேண்டும் என்பது அவரது நீண்டநாள் ஆசை.

'சிட்டிசன்' படத்தில் அஜித்தோடு ஜோடி சேர்ந்த மீனாவின் ஏக்கம் பாதியாகக் குறைந்தது. இதை அடுத்து விஜய்யோடு ஜோடி சேர்ந்து ஏக்கம் முழுவதும் தீரப்போகிறது.

விஜய் தற்போது நடித்து வரும் 'ஷாஜகான்' படத்தில் இரண்டாவது நாயகியாக நடிக்கிறார் மீனா.



ரவீனா ராண்டன்



மம்முட்டி-சாய்குமார்-மகேஸ்வரி-தாரா தேஷ்பாண்டே
படம்: இந்தியா ருடே

## குஷ்பு தயாரிப்பில் பிரசாந்த்

குழந்தை பெற்றுக் கொண்ட பின் ஒரு படத்தில் நடித்து வரும் குஷ்பு விரைவில் படத் தயாரிப்பைத் தொடங்கவுள்ளார்.

'ஏகேயெஸ்' என்ற பெயரில் தயாரிப்பு நிறுவனத்தைத் தொடங்கி (அதென்ன 'ஏகேயெஸ்'? ஏ-குஷ்புவின் மகள் அவந்திகா, கே-குஷ்பு, எஸ்-சுந்தர்.சி) இரண்டு படங்களைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளார் குஷ்பு.

முதல் படத்தில் பிரசாந்த் கதாநாயகனாக நடிக்கிறார். அடுத்த படத்தில் கார்த்திக்-பிரபு தேவா இணைந்து நடிக்கின்றனர்.

இரண்டையும் சுந்தர்.சியே இயக்கவுள்ளார்.

## கறாக் கன்னி

கவர்ச்சிக் கலக்கல் மும்தாஜ் துணி விஷயத்தில் எவ்வளவையும் இழக்கத் தயார். ஆனால் பண விஷயத்தில் அம்மணி படுகறாப் பேர்வழி.

அண்மையில் வெளியாகி இருக்கும் 'ஸ்டார்' படத்தில் மும்தாஜிற்குப் பேசியபடி சம்பளம் கொடுக்கவில்லை. உடனே நடிகர் சங்கத்தில் புகார் செய்ய, விஜயகாந்த் தலையிட்டு வாங்கிக் கொடுத்துள்ளார்.

## இந்தி இடுப்பழகி

இந்திப் படவுலகில் இப்போது அதிக ஊதியம் பெறும் நாயகிகள், ராணி முகர்ஜியோ பரீத்தி ஜிந்தாவோ கிடையாது. இவர்கள் இருவரும் அதிக படங்களைக் கைவசம் வைத்திருந்து முன்னணியில் இருந்தாலும், சமீபத்திய வரவான கரீனா கபூர் தான் அதிக சம்பளம் பெறுகிறார். ஒரு படத்தில் நடிக்க இவர் வாங்குவது இரண்டரைக்கோடி இந்திய ரூபாய். இவ்வளவு பெரிய தொகையைச் சம்பளமாகப் பெற்றிருக்கும் முதல் நடிகை இவராகத்தான் இருக்கும்.

இத்தனைக்கும் இவர் நடித்த முதல் படமான 'ரெப்யூஜி' சுமாராகத்தான் போனது. ராஜ்கபூரின் மகன் ரந்தீர் கபூரின் இரண்டாவது மகளான கரீனா, அக்கா கரிஷ்மாவையே ஓரிரு படங்களுக்குள் ஓரங்கட்டி விட்டார்.

பிரபல இந்தி இயக்குநர்களான சுபாஷ்கை, ஜே.பி.தத்தா, சுரஜ் பாட்டியா போன்றவர்களின் படங்களில் கரீனா தான் நாயகி. இவற்றையடுத்து ஸ்ரீதேவியின் கணவர் போனிகபூர் தயாரிக்கும் இந்திப் படத்தில் நடிக்க ஒப்புக் கொண்டுள்ளார்.

போனிகபூர் தயாரிப்பது தமிழ்-தெலுங்கில் பெருவெற்றி பெற்ற 'குஷி'யின் இந்திப் பதிப்பு. தமிழில் ஜோதிகாவும் தெலுங்கில் பூமிகாவும் காட்டிய இடுப்பு அழகை இந்தியில் காட்டப் போகிறார் கரீனா.



## ஜப்பானியப் படத்தில் மீனா

'கிளிக்' உட்பட ஓரிரு படங்களில் நடித்து வரும் மீனா ஜப்பானியப் படமொன்றில் நடிக்கவுள்ளார்.

'முத்து' ஜப்பானில் வெளியாகி வெற்றிபெற்றதை அடுத்து மீனாவுக்கு ஜப்பானில் ஒரு இரசிகர் மன்றமே இருக்கிறது. இதையடுத்து மீனாவை வைத்து தமிழ்த் திரைப்படப் பாணியில் தயாராகும் இப்படத்தை ஜப்பான் தொழிலதிபர் ஒருவரே தயாரிக்கிறார்.



பாலகிருஷ்ணா-ஆம்னி

# காதோடு சொல்லுகிறோம்

பெரு வெற்றி பெற்றிருக்கும் 'குடிமகன்' என்று ஆங்கிலத்தில் அர்த்தம் வரும் படத்தின் ஹீரோ, அந்தப் படத்தில் வேலை பார்த்தவர்களுக்கு ஒரு வாக்குறுதி கொடுத்தாராம். படம் வெற்றி பெற்றால் ஆளுக்கு ஒரு கலர் டீவி என்று. படம் வெற்றிகரமாக ஓடியும் கொடுத்த வாக்குறுதியை அந்த ஹீரோ காப்பாற்றவில்லையாம். காரணம் நடிகரின் காதல் மனைவியான அந்த முன்னாள் நடிகைதான் நந்தியாக நின்று காரியத்தைக் கெடுத்தாராம்.

இயக்குநர் நடிகையைக் காதலிப்பது தமிழ் திரையுலகில் இன்னமும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. மார்க்கண்டேய நடிகரின் வாரிசை வைத்து மூன்றெழுத்துப் படத்தை இயக்கி வரும் இரண்டு எழுத்து இயக்குநர் தான் காதலிக்கிறாராம். இந்தப் பூனையும் 'பால்' குடிக்குமா என்பது போல் சாதுவாகக் காணப்படும் அந்த இயக்குநர் காதலிப்பது கன்னத்தில் குழி விழும் இரண்டெழுத்துக் கன்னடக்கிளியைத்தான்.

மூன்றெழுத்து 'மா' நடிகை தமிழில் மறுபிரவேசம் செய்ய ஜோதிமயமான தங்கை நடிகை படாதபாடு பட்டாராம். ஒன்றும் சரிப்பட்டு வராததால அக்காவுக்காகச் சொந்தப்படத்தை எடுக்கத் திட்டமிட்டாராம் தங்கை. இயக்குநர்களிடம் கதை கேட்கும் படலமும் தொடங்கி விட்டதாம். அக்காவுக்கு கதை பிடித்தால் தங்கைக்குப் பிடிக்கவில்லையாம். தங்கைக்குப் பிடித்தால் அக்காவுக்குப் பிடிக்கவில்லையாம். இதனால் சொந்தப் படத்தயாரிப்பு இழுபட்டுக் கொண்டே போகிறதாம்.

அண்மையில் வெளியாகி இருக்கு 'கல கலப்பான' படத்தின் இளம் நாயகன் அவருக்கு ஜோடியாக நடித்த 'வெற்றி' கடகிளியைத் தீவிரமாகக் காதலிக்கிறாராம். நடிகை மீதான காதல் மயக்கத்தில் தினமும் நடிகையின் சொந்த ஊரான பெங்களூருக்கு ஃபோன் மூலம் தொடர்பு கொண்டு பேசியதில் ஃபோன் பில் ஒரு லகரத்தைத் தாண்டிவிட்டதாம். தயாரிப்பாளரான இளம் நாயகனின் தந்தைக்குலம் இந்த விஷயத்தைக் கேட்விப்பட்டு, மகனைப் பின்னி எடுத்து விட்டாராம்.

## புதிய வாய்ப்புக்கள்

'வல்லி' படத்தின் மூலம் மறுபிரவேசம் செய்திருக்கும் மாளவிகாவுக்கு மேலும் 3 புதுப்பட வாய்ப்புக்கள் கிடைத்திருக்கின்றன. அதில் 2 பட வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தவர் கார்த்திக்.

## தமிழுக்கு என்னாச்சு?

பிரசாந்த்-சிம்ரான் நடிக்க சரணின் உதவியாளர் ஹரி இயக்க 'தமிழ்' என்ற பெயரில் பூஜை போடப்பட்ட படத்தைப் பற்றி சத்தமே இல்லை. என்னாச்சு?

'தமிழ்' படத்தில் படப்பிடிப்பை அடுத்த மாதம் தொடக்கி ஒரே மூச்சில் முடித்து விடத் திட்டமிட்டிருப்பதாகக் கூறுகிறார்கள்.

## முகப்பில்

**மோனல்**

**எஸ்.வி.சேகர்-சுகன்யா**

படம்: கிருஷ்ணா கிருஷ்ணா



# கவர்ச்சி நடிகையே கதி என்று மயங்கிக் கிடக்கும் நகைச்சுவை நடிகர்

மதுரையில் இருந்து நடிக்க வந்த அந்த வைகைப்புயல் நகைச்சுவை நடிகர் பெண்கள் விஷயத்தில் கொஞ்சம் பலவீனமானவர்.

படவுலகில் பிரபலமானதும் முதலில் அம்மா வேடங்களில் நடிக்கும் நடிகைகளுடன் தொடர்பை ஏற்படுத்தினார். அதன்பின் முன்னணிக்கு வர ஆரம்பித்ததும், படவுலகிற்குப் புதிதாக வரும் சில கவர்ச்சி நடிகைகளைக் 'கவர்' பண்ணிக் கொண்டார் அவர்.

தமிழ்த்திரையுலகில் முதல் படத்தில் தாது 'திறமை'யைக் காட்டிய சில கவர்ச்சி நடிகைகள் அதன்பின் படவாய்ப்புக்கள் இல்லாமல் போக, சில பிரபலங்களின் 'கட்டுப்பாட்டில' இருந்து வருவது சர்வ சாதாரணம்.

அந்த நகைச்சுவை நடிகரும் பிரபலமில்லாத சில கவர்ச்சி நடிகைகளைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார். இது போதாதென்று அந்த ந.நடிகர் இப்போது இன்னொரு கவர்ச்சி நடிகையிடம் மயங்கிக் கிடக்கிறார்.

அழிந்துபோன உலக அதிசயங்களில் ஒன்றான தொங்கு தோட்டம் இருந்த நகரின் பெயரைக் கொண்ட கவர்ச்சி நடிகையிடமே இப்போது ந.நடிகர் மயங்கிக் கிடக்கிறார்.

'உயர' நடிகர் கதாநாயகனாக நடித்த 'அசத்தும்' படத்தில் ந.நடிகரும் தொங்கு தோட்ட கவர்ச்சி நடிகையும் ஜோடி சேர்ந்து நடித்திருந்தனர். இதனால் ஏற்பட்ட 'நெருக்கம்' காரணமாக கவர்ச்சி நடிகையே கதி என்று மயங்கிக் கிடக்கிறார்.

தனக்கு ஜோடியாக தொங்கு தோட்ட நடிகையையே போட வேண்டும் என்று நிபந்தனை விதித்து வருகிறார் அந்த ந. நடிகர்.

அதுமட்டுமா? அந்த ந.நடிகர் தமது படங்களில் நடிக்க வைக்க சில தயாரிப்பாளர்கள் தொங்குதோட்ட நடிகையை அணுகி நடிகரது தேதிகளைப் பெற்றுவருகின்றனர். கிடைத்துவிடும். அந்த அளவுக்கு நடிகை மீது மயங்கிக் கிடக்கிறார் ந.நடிகர்.

பல 'பலான' படங்களில் நடித்திருக்கும் தொங்குதோட்ட நடிகையைப் பற்றித் தெரியாமல் அவருடன், 'நெருக்கமாக' இருக்கிறார் ந.நடிகர்.

ஏற்கனவே 'உயர' நடிகர், மூன்றெழுத்து நகைச்சுவை நடிகர், பிரபல தயாரிப்பாளர் என்று பலர் தொங்கு தோட்ட நடிகையுடன் 'ஆழமான நட்பு' கொண்டிருந்தனர்.

தனது வசிப்பிடத்தை மேற்குறிப்பிட்ட ஒவ்வொருவரிடமும் தொட்டுக் காட்டி, "இதில் உங்கள் வாரிசு வளர்கிறது" என்று மிரட்டியே இலட்சக்கணக்காகப் பணம் பறித்தவர் தொங்கு தோட்ட நடிகை.

இப்போது பிரிக்க முடியாத நெருக்கத்தில் இருக்கும் ந.நடிகர்-தொங்குதோட்ட நடிகை 'நட்பு' என்னாகுமோ என்று அவலுடன் எதிர்பார்த்து வருகின்றனர் திரையுலகத்தினர்.

## 'தில்' வெற்றி

தமிழ்த்திரையுலகில் எப்படி எல்லாம் செண்டிமெண்ட் பார்க்கிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணம் இது.

'சேது' படத்தில் சேற்றில் விழுந்து புரண்டவர் விக்ரம். அதே போல் விக்ரம் நடித்த 'தில்' படத்தில் சேற்றில் ஒரு சண்டைக் காட்சியை வைத்திருக்கிறார்கள்.

இவர்களது செண்டிமெண்டாலோ என்னவோ இப்போது 'தில்' சக்கைபோடு போட்டுக் கொண்டிருக்கிறது.

## சரத்தின் 'கடிதம்'

சரத்குமார் 'கடிதம்' என்ற பெயரில் சொந்தமாக ஒரு பத்திரிகையைத் தொடங்கவுள்ளார் இதற்காக 'ஆர்.என்.கே. பப்ளிகேஷன்ஸ்' என்ற நிறுவனத்தை ஆரம்பித்துள்ளார்.

நடிக்க வருவதற்கு முன் சரத்குமார் தமிழகத்தில் இருந்து வெளியாகும் 'தினகரன்' நாளிதழின் பெங்களூர் நிருபராகப் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மலேசியாவில் 'லவ்'

பாரதிராஜா இயக்கும் 'லவ்' படத்தில் அவரது மகன் மனோஜ் கதாநாயகனாக நடிக்கிறார். படத்தின் நாயகியாக புதுமுகம் ஒருவர் அறிமுகமாகிறார்.

இந்தப்படத்தின் படப்பிடிப்புக்கள் யாவும் மலேசியாவிலேயே படமாக்கப்படவுள்ளன.



அம்சவிர்தன்-தருண்-தாமு-குணால்
படம்: புன்னகை தேசம்



மஹிமா சௌத்ரி



கரீனா கபூர்

## தங்கையும் தயார்

காயத்ரி ஜெயராமை அடுத்து வந்திருப்பவர் காயத்ரி ரகுராம். இவர் நடன இயக்குநர் ரகுராமின் இரண்டாவது மகள். மூத்தமகள் சுஜா 'மில்லேனியம் ஸ்டார்ஸ்' என்ற மலையாளத் திரைப்படத்தில் அறிமுகமாகி 'கிருஷ்ணதாசி' தொலைக் காட்சித் தொடரில் நடித்தவர்.

அக்கா சுஜாவைப் போல் வேற்று மொழிப் படத்தில் அறிமுகமாகி, 'என்ன சொல்லப்போகிறாய்' படத்தின் மூலம் தமிழில் அறிமுகமாகிறார் காயத்ரி. இவர் அறிமுகமானது 'ரேப்பள்ளிராதா' என்ற தெலுங்குப்படத்தில்.

காயத்ரி ரகுராம் நடிக்கும் 'என்ன சொல்லப்போகிறாய்' படத்தை இயக்குபவர் ரத்னகுமார். இதில் காயத்ரியுடன் நந்தா-சங்கிரஸ் ஆகிய ஹீரோக்களும் அறிமுகமாகிறார்கள்.

## ரஜினி படம் விரைவில் ஆரம்பம்

'படையப்பா' படத்திற்குப் பின் தனது இரசிகர்களை நீண்ட காலம் காக்க வைத்த ரஜினி, அடுத்த படத்தை விரைவில் தொடங்கவுள்ளார்.

படத்தின் இயக்குநர் என்று கே.எஸ்.ரவிக்குமார் என்பது முடிவாகி விட்டது. 'சமுத்திரம்' படத்தை இயக்கி முடித்திருக்கும் கே.எஸ்.ரவிக்குமார் இப்போது ரஜினி படக் கதை விவாதத்தில் முழுமூச்சாக இறங்கியிருக்கிறார்.

படத்திற்கு 'ஏழுமலை' என்று பெயர் வைத்திருப்பதாகவும் ஒரு கேள்வி.

## மாற்று இரட்டையர் ஆட்டம்

சுபாஷ் கையின் 'பர்தேஷ்' படத்தில் அறிமுகமான மஹிமா சௌத்ரிக்கு அதன்பின் சொல்லிக் கொள்ளும்படி படங்கள் இல்லை. இருப்பினும் ஓரிரு இந்திப் படங்களில் தலைகாட்டிக் கொண்டிருக்கிறார்.

தமிழில் விஜயகாந்திற்கு ஜோடியாக 'தவசி' படத்தில் நடிக்க முதலில் மஹிமாவைத்தான் அணுகினார்கள். முதலில் சம்மதம் தெரிவித்த மஹிமா பின்னர் மறுத்துவிட்டார்.


காரணம் காதல். இந்தியாவின் பிரபல டென்னிஸ் இரட்டையர்களில் ஒருவரான லியாண்டர் பயஸ் உடன் காதல் வயப்பட்டிருக்கும் மஹிமா அவரை விட்டுப் பிரிந்து வந்து நடிக்க முடியாது என அப்படத்தில் நடிக்க மறுத்து விட்டார்.

இது ஒருபுறமிருக்க, இப்போது இரட்டையர்களில் மற்றொருவரான மகேஷ் பூபதி இன்னொரு இந்தி நடிகையான ஷில்பா ஷெட்டியை மும்முரமாய் காதலித்து வருகிறார்.

டென்னிஸ் உலகில் இரட்டையர் ஆட்டம் போடும் பயஸ்-பூபதி ஜோடி, இப்போது மாற்று இரட்டையர் ஆட்டத்தில் இறங்கியிருப்பது இந்தித் திரையுலகில்.

# நிர்வாணச் சங்கத்தில் பெரியார்





**த**ந்தை பெரியார் என்றதும் அனைவரின் கண் முன் தெரிவது வெண்தாடி, வெள்ளைக்கண்ணாடி, அவரது ஊன்றுகோல். இவை எல்லாவற்றையும் விட பெரியார் ஒரு நாத்திகர் என்பது பலருக்கு தெரிந்த ஒன்று.

பெரியார் ஐரோப்பிய நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் செய்தபோது 'நியூடிஸ்ட் கொலனி' (நிர்வாணச் சங்கம்)க்கு விஜயம் செய்து தானும் ஓர் உறுப்பினராகி, அவர்களோடு நிர்வாணமாக ஒரு புகைப்படமும் எடுத்துக் கொண்டார்.

படத்தில் வலமிருந்து இடமாக (நான்காவதாக) பெரியார் நிற்கிறார். இது அ.மார்க்ஸ் என்பவர் எழுதிய 'பெரியார்' என்ற புத்தகத்தில் வெளியாகியுள்ளது.

## தாஜ்மஹால் கேட்காத எனக்கு...!

காதலின் முட்பாதையில்
முக்கால் தூரம்
முடிந்தது.
நான் வெற்றிக் கோட்டை
நெருங்குகையில்
நீ இன்னும்
திரும்பிப் பார்த்திருப்பது
புரிந்தது!
**
நான் மேகமாய் விண்மீனாய்
நிலவாய் சூரியனாய்
பரிணாமம் பெற்று
வானையே ஆக்கிரமித்த
பிறகும்
ஒரு பழைய பறவையின்
பல்லவிச் சத்தங்களா?
**
ஒரு தனிமரத்தில் நான்
பூவானேன் காயானேன்
பூத்தும் குலுங்கினேன்
குனிந்து பார்த்த
போது தான்
வேர் மட்டும்
வேறெங்கோ படர்ந்திருப்பது
தெரிந்தது!
**
ஆத்மார்த்தமான
உலகொன்றை
உனக்கென சிருஷ்டித்து
தந்தேன்
நீயோ
வெளியேறி வந்த
கிரகத்துடன் அதை
ஒப்பிட்டு பார்க்கிறாய்!

பூவின் மென்மையை
வேறொரு
பூவையில் கண்ட
நீ
மழலையின் பாதத்திலேனும்
என்
மனதைத் தேடியிருக்கலாம்!
**
தாஜ்மஹால் கேட்காத
என் காதலின்
யதார்த்தத்தில்
நீ உணராத
எளிமையை
எந்த கோணத்தில்
எங்கு கண்டாய்?
**
ஒப்பு நோக்குதலை
உன் செய்திக் குறிப்புடன்
நிறுத்தியிருக்கலாம்
என் காதலையுமா?
**
உனக்காக
நிறையவே
உருமாறியிருக்கிறேன்
இன்னும்
அவளில் பாதி
இவளில் பாதி
என்க்குள் வேண்டாம்
என்னை
எனக்காக நேசிக்கும்
என்னவனே வேண்டும்!!

ஏ.எ.்.ப்-கொழும்பு-12.




## என் நாட் குறிப்பு

உன்னுடன் சந்தோஷமாய்
சல்லாபித்திருந்த அந்த
சகாப்தங்களை
சப்பித்துப்பும்!
***
உன் வதன வண்ணங்கள்
முதலாய் இதர
இன்னல்கள் வரை
***
இயன்றளவு
நான் அனுபவித்த
அவஸ்தைகளையும்
அபூர்வங்களையும்
ஞாபகமூட்டும்!
***
தோளோடு தோளாய்(த்)
தொட்டுத் தழுவி
தோத்திரங்கள் பாடிய
அந்தத் தூரத்து நாட்களை
தூரத்திப் பிடித்து...
ஞாபகவுளிகளால்
என் கல்மனதினை(க்)
காயப்படுத்தி
சிந்தனைச் சித்திரம்
செதுக்கும்!
***
என் மூளையின்
மூர்க்கத்தனத்தால்
இதயத்தின் இனிமையான
எண்ணங்கள் அங்கலாய்க்க...
***
கைவிறைக்கப் பேனைப்
பிடித்து
கன்னாப்பின்னாவென்று
நான் கிறுக்கி வைத்த
காதல் கதைகளை
கச்சிதமாய்
அச்சித்திருக்கும்!
நீ கற்றுத் தந்த
காமசூத்திரங்களின்
கைவரிசைகளையும்
கசப்பான
அனுபவங்களையும்
பத்திரமாய்
பதித்து வைத்திருக்கும்.
***
இன்னும்–
உன் கடிதவரிகளின்
உணர்ச்சிகரமான
பகுதிகளை மட்டும்
***
பசைக் கொண்டு
ஒட்டியிருக்கும்!

து.பிரபாஹர்–
ஹப்புத்தளையூர்


## பேனா நண்பர்கள்



பெயர்:
ஆர். பிரேம்குமார்.
வயது: 20
முகவரி: இல.119 1/9,
ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,
கொழும்பு-10.
பொழுது போக்கு:
பத்திரிகை, ரீ.வி.



பெயர்:ஆர்.ரஞ்சனி,
வயது: 20
முகவரி:
இல.01,
மாணிக்கவத்தை,
டிக்கோயா.
பொழுது போக்கு:
பத்திரிகை, ரீ.வி.



பெயர்:
எம். ரிஸ்வான்
வயது: 18
முகவரி: 35 2ஏ,
தைக்காவீதி,
கல்முனைக்குடி-07.
பொழுது போக்கு:
கிரிக்கெட், பத்திரிகை.

## உன் வரவுக்குப் பதில்...


உன் வரவுக்காய்
பஸ் தரிப்பில்
பல மணி நேரம்
காத்திருந்தேன்.
**
உன் வரவுக்குப்
பதில் சி.ஐ.டி.யினரின்
வரவு அங்கு!
**
மறுநாள்
பத்திரிகையில்
செய்தி வந்தது...
**
'உளவறிந்த புலி
பஸ் தரிப்பில்'
கைது

கா.ரமேஸ்குமார்–
ஆரையம்பதி-02.

## மறக்காமல் மடல் எழுது!

பறவைக் குஞ்சே!
நானல்லவா உனக்கு
நிழல் தந்த மரம்
என்னை விட்டு விட்டு நீ
எங்கே போகிறாய் நில்!
**
உதிர்ந்து கொண்டிருந்த
என் இலைகளுக்கு
பச்சை உதிரம் தந்தது நீ!
வேர்களில் பூத்த என்னை
வெளியே பூக்கவைத்து நீ!
**
உன்னைப் பிரிவதால்,
மண்ணுக்கடியில் என்வேர்கள்
மரணத்தோடு போராடியது!
உன் நினைவு நெருப்பே
மழையாய் என்மேல் பொழிந்தது!!
**
என்னை ஏன் வெறுத்தாய்
என்பது
தெரியாத போது-ஒருநாள்
அருகே வந்த பறவை ஒன்றிடம்
உன்னை விசாரித்தேன்.
பறவை சொன்னது;
'நீ வெயிலை குடையாய்ப்
பிடிக்கப் போகிறாய்' என்று!
உடனே என்
கிளைகள் உதிர்ந்து போனேன்!!
சட்டென்று பட்டுப்போனேன்!!!
**
பறக்கவே பக்குவமில்லாத வயதில்
யார் உனக்கு-இந்தக்
கூடுகட்டும் ஆசையைக் கற்பித்தது???
**
உனக்கொரு
வானத்தை வாங்கித்தரும்
வண்ணக் கனவில்
நானிருந்தேன்!
நீயோ ஒரு கூண்டுக்குள்
போகிறாய் கூவிக்கொள்ள.
**
என் இலைகளை சிறகுகளாக்கி
உன்னோடு பறந்துவர
எனக்கும் வலிமையில்லை.
என்னில் ஓர்
இலையாய் வந்து ஒட்டிக்கொள்ள
உனக்கும் வசதியில்லை
**
முடியாது என்னால்
மற்றுப்புள்ளி வைக்க-நீ
எங்கிருந்தாலும்,
உன் சுகங்களை எழுதி
கடிதம் அனுப்பு!
என்பழைய முகவரிக்கல்ல
இதோ என் புதிய முகவரி
'பட்டமரம்'.

என்.தனுசுஜன்–
சண்டிலிப்பாய்.




**ந**ம்முடன் வாழ்ந்தவர்கள் எல்லோருமே வெற்றி பெற்றிருக்கிறார்கள். அவர்களுடைய வெற்றி நமக்கு வழி காட்டும் ஒளிவிளக்கு. ஒருவர் பெற்ற வெற்றியை நாமும் பெற முடியும் என்பதனைத் தான் இது காட்டுகிறது.

நோபல் பரிசு பெற்ற அன்னை தெரசா பட்டபாடுகள் கொஞ்ச நஞ்சமல்ல. ஆனாலும் அவர் நிச்சயமாக கஷ்டங்களை தன்னுடைய கஷ்டமாக ஏற்றுக்கொண்டு வெற்றி பெற்ற முதல் பெண்மணி அவர்தான்.

கஷ்டத்தைக் கண்டு ஒடி ஒளிந்து கொள்ளவில்லை. பயத்தைக் கண்டு பதற்றப்படவில்லை. எதையும் தன்னால் செய்ய முடியும் என்று உறுதியாக நம்பி செயல்பட்டார்.

இதுதான் அவருக்கு வெற்றியைத் தேடித் தந்தது.

நம்முடைய திறமையையும் ஆற்றலையும் சேர்த்து ஒரே இடத்தில் குவிக்கும் போது அதன் சக்தி மகத்தான மாபெரும் இயக்கமாக மாறும்.

அடைய வேண்டிய நோக்கத்தில் வெற்றி பெறுவதற்கு அவசியமான திட்டங்களை வகுத்துக் கொண்டு அதன் வழியில் சென்று ஓயாமல் செயல் புரிந்தால் தான் வெற்றியைப் பெற முடியும்.

இப்படி இல்லாமல் சந்தேகப்பட்டுக் கொண்டு, செயல் புரியாமல் தயங்கிக் கொண்டிருந்தால் வெற்றி நம்மிடம் வராது.

## அன்னையின் உறுதி



வெற்றி பெற முடியும் என்று உறுதியுடன் செயலைச் செய்து வந்தார்.

அவருக்குத் துன்பங்கள் தொடர்ந்து வந்தாலும், தன்னுடைய செயலில் உறுதியாக இருந்தார். செயலில்தான் அவருடைய கவனம் இருந்ததே தவிர, வேறு எதிலும் கவனத்தைச் செலுத்தவில்லை.

இடையில் ஏற்பட்ட இடையூறுகளையும் இன்னல்களையும் அவர் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. தன்னுடைய செயல்தான் முக்கியம் என்று கருதினார். அதன் காரணமாகத்தான் அவருடைய ஒவ்வொரு செயலிலும் வெற்றி ஒளிவீசிக் கொண்டிருந்தது.

உலகத்திலேயே மற்றவர்களுடைய

உலகில் ஏராளமாகப் பணம் சம்பாதித்தவர்களும் புகழ் பெற்றவர்களும் ஒரே துறையில் முன்னேறி வெற்றி பெற வேண்டும் என்று விரும்பியவர்கள் தான் என்பதனை மறந்து விடக்கூடாது.

அவர்கள் அதற்கான வழிகளில் கண்ணும் கருத்துமாக இருந்து செயல் புரிந்து தங்களுடைய குறிக்கோளை நிச்சயமாக நிறைவேற்றிக் கொண்டவர்கள் தான்.

நாமும் ஏன் இவர்களைப் போல் செயற்படக்கூடாது? வெற்றி பெறக் கூடாது?

## இந்தவாரம் உங்கள் பலன்

**26.08.2001 தொடங்கி 01.09.2001வரை**

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்,) கருமங்களில் இடையூறுகள் ஏற்படும். பணவரவு சிறிது தாமதமாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியற்ற தன்மை காணப்படும். உத்தியோகத்தில் உள்ளோர் மேலதிகாரிகளைப் பகைத்துக் கொள்வர். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் தோன்றும். விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளால் மத்திம இலாபமடைவர்.

அதிஷ்ட நாள் : செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 04.

### இடபம்:

(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை,) தொழில் கஷ்டங்களுடன் பணவரவும் சிறிது பாதிக்கப்படும். குடும்பத்தில் துக்க நிகழ்ச்சியொன்று மனக்கவலைதரும். உத்தியோகஸ்தர்கள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நன்மை தரும். மாணவர்களுக்குக் கல்வித்தடை நீங்கும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 03.

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை புனர்பூசத்து முன்முக்கால்,) காரியங்களில் அனுகூலமும்பணவரவும் சிறந்து விளங்கும். குடும்பத்தில் மறைமுக எதிர்ப்புக்களால் மனக்கவலை தோன்றும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளை பகைத்துக் கொள்ளாமலிருப்பபது நல்லது. மாணவர்களுக்குக் கல்வியில் அக்கறைகூடும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.

அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 05.

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) எடுத்த கருமங்களில் வெற்றியுண்டாகும். பணவரவு குடும்ப சுகம் சிறந்து விளங்கும். உத்தியோகத்தில் உள்ளோர் பதவிகளில் இடமாற்றத்தைப் பெறுவர். மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடை விலகும். விவசாயிகள் வியாபாரிகள் இலாபமடைவர்.

அதஷ்ட நாள்: வியாழன்.
அதிஷ்ட இலக்கம்: 07.

### சிங்கம்:

(மகம்பூரம், உத்தரத்து முதற்கால்) செய்தொழலில் நன்மையுடன் குடும்பத்தில் மகிழ்ச்சியான சம்பவங்கள் நடந்தேறும். பொருள் வரவு சிறந்து காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் மனக் கசப்புக்களுக்கு ஆளாகுவர். மாணவர்களுக்கு கல்வியில் இருந்து வந்தத்தடை நீங்கும். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபம் அடைவர்.

அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 02.

### கன்னி:

(உத்தரத்து பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை,) தொழிலில் நன்மையும், குடும்பத்தில் மகிழ்ச்சியும் தோன்றும். பணவரவு விடயங்களில் அவதானத்துடன் செயற்படவும், உத்தியோக ரீதியாக பதவி உயர்வு நன்மைகளுக்கு இடமளிக்கும். மாணவர்களுக்குக் கல்வியில் உயர்ச்சி கிடைக்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.

அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 05.

## சோதிட மாமணி தில்லை

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்,) எதிர்பார்த்த கருமங்களில் வெற்றி கிடைக்கும். தொழில், குடும்பநிலை, பணவரவு என்பவற்றில் முன்னேற்றம் உண்டாகும். உத்தியோகத்தில் இருந்து வந்த கஷ்டங்கள் தீரும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபடைவர்.

அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 06.

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம் கேட்டை,) தொழில் நிலை, குடும்ப நிலை, என்பவைகளில் அவதானத்துடன் செயற்படவும். பொருள் வரவில் தடையுண்டாகும். உத்தியோகத்தில் உள்ளோர் தமது மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள்,வியாபாரிகள்,குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 05

### கிரக நிலை

| | |
|---|---|
| சிங்கம் | - சூரியன், புதன் |
| தனு | - செவ்வாய், கேது |
| இடபம் | - சனி |
| மிதுனம் | - வியாழன், வெள்ளி, இராகு |

**சந்திரன், விருட்சிகம், தனு, மகரம் இராசிகளில் இந்த வாரம் சஞ்சரிப்பார்.**

### தனு:

(மூலம்பூராடம், உத்தராடத்து முதற்கால்,) எதிர்பார்ப்புக்களில் தடைகள் உண்டாகும்.குடும்பநிலை,பணவரவு, தொழில் நிலைகளில் கவனமுடன் செயற்படவும். உத்தியோகத்தில் உள்ளோர் மறைமுக எதிர்ப்புக்களுக்கு ஆளாகுவர். மாணவர்களுக்குக் கல்வியில் உயர்ச்சியுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள், மத்திம இலாபம் பெறுவர்.

அதிஷ்ட நாள்: வியாழன்.
அதிஷ்ட இலக்கம்: 04.

### மகரம்:

(உத்தராடத்து பின்முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை,) காரியங்களில் வீண்தடையும், குடும்பத்தில் சிறிது பிரச்சனைகளும் தலைதூக்கும். உத்தியோக ரீதியாக ஒருசிலர் இடமாற்றங்களுக்கு ஆளாகுவர். மாணவர்களுக்குக் கல்வியில் உயர்ச்சி ஏற்படும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் அடைவர்.

அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 05.

### கும்பம்:

அவிட்டத்து பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்,) தொழிலிலும், பொருள் வரவிலும், நன்மைகள் வந்து சேரும், காரியங்களில் அனுகூலம் கிடைக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் நல்லெண்ணத்தைச் சிலர் சம்பாதிப்பர். மாணவர்களுக்குக் கல்வியில் உயர்வுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் அடைவர்.

அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 07.

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி ரேவதி,) செய்தொழிலில் கஷ்டங்களும், பணமுடங்கலும் தோன்றும். வெளியிட பயணங்களில் அவதானமாக இருக்கவும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் தப்பெண்ணத்துக்கு ஆளாகுவர். மாணவர்கள் கல்வியில் மந்தநிலையடைவர். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஷ்ட நாள்: வியாழன்.
அதிஷ்ட இலக்கம்: 05.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## அப்படியும் இப்படியும்



குண்டாக இருப்பவர்கள், தங்கள் உடம்பு கொஞ்சம் மெலியாதா என்று ஏங்குவார்கள்.

அதே போல் மெலிந்து போய் இருப்பவர்கள், எதைச் சாப்பிட்டாலும் "சதை போடமாட்டேன் என்கிறதே?" என்று நொந்து போய் இருப்பார்கள்.

பின்வருவது மாதிரி நடந்து கொண்டால், குண்டானவர்கள் ஒல்லியாகவும், ஒல்லியானவர்கள் குண்டாகவும் மாறிவிடுவீர்கள்.

### குண்டானவர்கள் மெலிய...

* மூன்று வேளை மட்டும் உண்ணுங்கள். அதுவும் அளவோடு உண்ணுங்கள்
* வறுத்த மற்றும் பொரித்த உணவுகளைத் தவிருங்கள்.
* ஆட்டிறைச்சி, கோழிறைச்சி, மீன் போன்றவற்றைத் தொடாதீர்கள்.
* நொறுக்குத் தீனிகள் எப்போதுமே வேண்டாம்.
* ஐஸ்கிறீம், இனிப்பு வகைகள், கேக், சொக்கிலேட், போன்றவை கூடவே கூடாது.
* காலை, மாலை வேளைகளில் சிறிது தூரம் நடந்துச் செல்லுங்கள். அல்லது சைக்கிள் ஓட்டுங்கள்.
* மதியச் சாப்பாடு முடிந்ததும் தூங்கி விடாதீர்கள்.
* தினசரி முடிந்தளவு உடற்பயிற்சி செய்யுங்கள்.



### மெலிந்தவர்கள் குண்டாக...

* மூன்றுக்கு நான்கு வேளை சாப்பிடுங்கள். நன்றாகச் சாப்பிடுங்கள்.
* வறுத்த மற்றும் பொரித்த உணவுகளைச் சாப்பிடுங்கள்.
* ஆட்டிறைச்சி,கோழிறைச்சி, மீன் வகைகளை ஒரு பிடி பிடியுங்கள்.
* மிக்சர், கடலை, வடை என்று அவ்வப்போது நொறுக்குத் தீனிகளைக் கொறித்துக் கொண்டிருங்கள்.
* ஐஸ்கிறீம், கேக், இனிப்புவகைகள், சொக்கிலேட் என்று தாராளமாகச் சாப்பிடுங்கள்.
* மதியச் சாப்பாட்டை முடித்து, ஒரு குட்டித் தூக்கம் போடுங்கள்.

## காய்கறிகள் கெடாமல் இருக்க

* ஒரு வாயகன்ற மண் பாத்திரத்தின் பக்கவாட்டில் நிறையத் துளைகள் இருக்க வேண்டும். அதில் பச்சைக் காய்கறிகளைப் போட வேண்டும். மற்றொரு மண் பாத்திரத்தில் நீர் ஊற்றி வைத்து அதன் மேல் காய்கறிகள் உள்ள மண் பாத்திரத்தை வைத்து அதை மண்ணலான மூடியால் மூடி, மெல்லிய ஈரச் சாக்கால் மூடி வைத்தால் 10 நாட்கள் கெட்டுப் போகாமல் பாதுகாக்கலாம்.

2,3 நாட்களுக்கு ஒரு முறை சாக்கை ஈரப்படுத்தினால் போதும். ஃபிரிட்ஜ் இல்லாதவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம்.

* கீரை வாடாமல் இருக்க, அதன் வேர் பாகத்தை நீரில் அமிழும்படி வைத்து, இலைப்பாகத்தை ஈரத்துணியால் சுற்றி வைக்கலாம்.

* எலுமிச்சம்பழத்தை ஒரு நாளைக்கு ஒரு மணிநேரம் தண்ணீரில் ஊற வைத்து எடுத்து விட்டால் கெடாது.

* வாழைக்காய்களைத் தண்ணீரிலேயே போட்டு வைத்தால், நாலைந்து நாட்களுக்குப் பழுத்துப் போகாது.

* தேங்காய் மூடியைத் தண்ணீரில் போட்டு வைத்தால் 2 அல்லது 3 நாட்கள் கெடாது. தினமும் நீரை மாற்ற வேண்டும்.

* பச்சைக்காய்கறிக் கூடை மீது ஈரத் துணியால் மூடினால் கெடாமல் இருக்கும்.

* பச்சை மிளகாய் காய்ந்து வாடி விடாமல் இருக்க, அவற்றின் காம்புகளைக் கிள்ளி எடுத்து விடவும்.

* கறிவேப்பிலை காயாமல் வாடாமல் இருக்க, ஓர் அலுமீனியப் பாத்திரத்தில் போட்டுத் தலைகீழாகக் கவிழ்த்து வைத்து விடுங்கள். எத்தனை நாட்கள் ஆனாலும் அப்படியே இருக்கும். ஈரத்துணியிலும் சுற்றி வைக்கலாம்.

* இஞ்சியை ஈரத்துணியால் சுற்றித் தண்ணீர்க் குடத்தின் மேல் வைத்திருந்தால், பத்து நாட்கள் வரைப் புதிதாகவே இருக்கும்.




அனிதாவின் முகம் சரிந்தது, "உன்ன போய் கேட்டேன் பாரு."

"பாரு அனிதா... இந்தியாவில் பொறந்த ஒவ்வொரு பொண்ணுமே அடிமை... நமக்கு எக்கனாமிக்கலா சுதந்திரம் கிடையாது. தனியா நடந்து போற தைரியமும் இல்லாத வரை யாராவது ஆண் சொல்றதைக் கேட்டுத்தான் ஆகணும். முதல்ல அப்பா, அப்புறம் புருஷன். அப்புறம் பையன். உங்கப்பா அம்மா நல்லது பண்ணுவாங்கன்னு ஒரு நம்பிக்கைல தலையாட்டிரு."

"நீ என் நிலமைல இருந்தா என்ன சொல்வே மது...?"

"எங்கப்பாவோ அம்மாவோ என்னை இப்படிக் கட்டாயப் படுத்தமாட்டாங்க."

"அத்தனை சுதந்திரமா?"

"இல்லை. அத்தனை அலட்சியம். பாரேன்.. இப்பப் போய் ஃபோன் போட்டு, 'நான் வைரவன்னு ஒருத்தரைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்'னா, 'எப்ப கல்யாணம்'னு எங்கப்பா கேப்பாரு. தடுக்க மாட்டார்."

"ஓ, அப்படியா சேதி! வைரவனைப் புடிச்சிட்டியா?"

"சே..சே.. அந்தாளு பயங்கரம்... அவர்ட்ட அப்பாயின்மெண்ட் வாங்கித்தான் காதல் பண்ண முடியும். ஒரு பார்ட்டில கேட்க்ராஷ் பண்ணப் போறேன். நீயும் வரியா?"

"அப்ப இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துக்கலாம்னு சொல்லு."

"ஆமா, இந்த நாட்டில என்ன வெச்சிருக்கு? அமெரிக்காவுல இண்டியன் பாய்ஸ்-அவங்க சம்பாதிப்பாங்க...நாம்ப என்ஜாய் பண்ணலாம். கார் வாங்கித் தருவாங்க. எங்க அக்கா இருக்காங்க.. வாரம் ஒருமுறை சமையல் பண்ணி மைக்ரோவேவ் ஒவன்ல அப்பப்ப சுட வெச்சுட்டு, சாயங்காலத்துல ஊர் சுத்த போய்ருவாங்க. லைஃப்னா அதான்."

"மது... நீ சீரியஸா பேசறியா தமாஷ் பண்ணிறியானு தெரியறதே இல்லை."

"அனிதா... இதைவிட ஆசை ஏதும் இருக்க முடியாது. உனக்கு நோபல் பரிசு வாங்கவோ.. இல்லை பம்பாய் சினிமாவில நடிக்கவோ ஆசை இல்லை தானே?"

"இல்லை..!"

"அப்ப கல்யாணம் பண்ணிக்க. சும்மா பட்டானியிலே இந்த ஃபைலம் அந்த ஃபைலம்னு படிச்சு என்ன பிரயோஜனம்?"

"சரி வரேன், தாங்க்ஸ்!"

"இரு அனிதா.. உன்மனசுல என்ன நெனைச்சுக்கிட்டு இருக்கே.. அதைச் சொல்லிடு. உன்னைப் பார்த்தா இதில் விருப்பம் இல்லை போல தோணுது!"

"எனக்கு மேலே படிக்கணும்னு ஆசை."

"படிச்சு?"

"மைக்ரோ பயாலஜி பண்ண ஆசை."

"பண்ணு. அதுக்கும் கல்யாணத்துக்கும் என்ன சம்பந்தம்? மைக்ரோ பயாலஜி பண்ணிக்கிட்டே பயாலஜிக்கல் ரோலையும் பார்த்துக்க! அசடே.. டோண்ட் ஹெஸிடேட்! அமெரிக்கன் வுமன்... அவங்களுக்கு அங்கு எவ்வளவு சுதந்திரம் தெரியுமா?"

அனிதா அந்த வாரம் குழப்பத்தில்தான் இருந்தாள். அவளிடம் யாரும் கல்யாணத்தைப் பற்றி கேட்கவில்லை. கல்யாணத்துக்கு அப்பா சம்மதித்து விட்டதாகத்தான் தெரிந்தது. அந்த சுரேஷ் மறுபடி வந்திருந்தான். பிரைவேட் டாக்ஸி கொண்டு வந்திருந்தான். அனிதாவை சினிமா அல்லது பீச்சுக்கு அழைத்துக் கொண்டு போய் தனியாகப் பேச விரும்பவதாகச் சொன்னான். அம்மா 'போகலாம்' என்றாள். அப்பா அனுமதி கொடுத்து விட்டதாகச் சொன்னாள். "வேணும்னா ஜிம்புவை அழைத்துக் கொண்டு போ" என்றாள். அவன் மறுத்து விட்டான்.

காரில் தெருமுனை தாண்டியதும், "அனிதா... நான் உன்னைப் பார்த்த கணத்திலேயே தீர்மானித்து விட்டேன், உன்னை நான் காதலிக்கிறேன்" என்று டிஷ்யு பேப்பரால் மூக்கைத் துடைத்துக் கொண்டு சொன்னான்."என்னை நீ மணக்க சம்மதித்ததுக்கு வந்தனம்,வருகிற பதினெட்டாம் தேதி கல்யாணம் வைத்துக்கொண்டு விடலாம். பத்தொன்பது பெங்களூர் போய் விட்டு அங்கிருந்து பம்பாய், இருபத்தோராம் தேதி ராத்திரி நான் ஏர் இண்டியா பிடித்து நியூயார்க் போகிறேன்" என்றான் சுரேஷ்.

சுரேஷ் டாக்ஸியை பீச்சில் நிறுத்தச் சொல்லிவிட்டு, அனிதாவை அழைத்துக் கொண்டு மணலில் நடக்க ஆரம்பித்தான். "நியூயார்க்ல இந்த மாதிரி பீச் பார்க்க முடியாது. ஃப்ளாரிடா போகணும். ஃப்ளாரிடால டிஸ்னி வோர்ல்ட், எப்காட் சென்டர் எல்லாம் இருக்கு. நாம் அங்கு போகலாம்... புதன்கிழமைகளில் போனா ப்ளேன் டிக்கெட் கொஞ்சம் சீப்! ஃப்ளாரிடால என் கஸின் பால்கி டாக்டரா இருக்கான். அவன் கூட தங்கினா ஒரு நாளைக்கு அறுபது டாலர் ஸேவ் ஆகும்" என்றான். அனிதா பேசவில்லை.

"அனிதா யுலுக் ஸோ லவ்லி! நீ கட்டிக்கிட்டு இருக்கற ஸாரி அங்கு வாங்கினா நாப்பது டாலர். டெக்ஸ் டைல்ஸ் இங்கதான் சீப்! அங்க டெக்ஸ்டைல்ஸ் எல்லாமே லெதர் குட்ஸ்" என்றான்.

"ஏன் மௌனமாகவே இருக்கே அனிதா?"

"என்ன பேசறது?"

"உனக்கு அமெரிக்கா பிடிக்கும் இல்லையா?"

**"பிடிக்குமா பிடிக்காதான்னு என் அபிப்பிராயம் யாருக்கும் முக்கியமா தோணலை. நானும் ஒரு மனுஷி. எனக்கும்**

**நவீன எழுத்துலக வேந்தன் சுஜாதா**

**விருப்பம் இருக்கலாம்னு என்னை யாராவது கேட்டாங்களா? அப்பாவுக்கு என்னை எப்படியாவது கல்யாணம் பண்ணி அனுப்பிச்சுட்டா ரிட்டயர் ஆகறதுக்குள்ள எல்லா பொறுப்பும் தீர்ந்ததுன்னு எண்ணம். அம்மாவுக்கு அப்பா சொல்றது-அது சமுத்திரத்துல குதின்னு சொன்னாலும் வேத வாக்கு. ஜிம்புவுக்கு டீ ஷர்ட்... அக்காவுக்கு, "நான் ஜல்பாய்குரில, செத்து சுண்ணாம்பாறேன்.. நீயாவது அமெரிக்கா போனா நான் வர ஒரு சான்ஸ்னு எண்ணம். யார் என் விருப்பத்தைக் கேட்டா?"**

"உங்களுக்கு சிஸ்டர்ஸ் உண்டா?" என்று கேட்டாள் அனிதா,

"இருக்கா. அவளோட காண்டாக்ட் அத்தனை இல்லை.. கல்யாணத்துக்கு வர மாட்டான்னு நெனைக்கறேன்" என்றான் சுரேஷ்.

அப்போது அவர்கள் எதிரே இரு சிறுவர்கள் வந்து நின்றனர். "இன்னா அய்ரே. காதல் பண்றியா?" என்றான் ஒருவன்.

"டேய் போடா! சும்மா பேசிக்கினு இருக்காரு... ஏண்டா டிஸ்டப் பண்ற... என்ன அய்ரே?" என்றான் மற்றொருவன்.

அவர்களைப் பார்த்த சுரேஷுக்கு கை நடுங்கியது. "வா போய்டலாம்... ஏதாவது பண்ணிடுவாங்க" என்றான். அவன் கண்களில் சுத்தமாகப் பயம் இருந்தது. அனிதாவுக்குப் பயமாக இல்லை. இருவரும் சிறுவர்கள்.

"எப்பவுமே இப்படித்தானோ இங்க?"

"நான் வந்ததில்லை" என்றாள் அனிதா.

"மெட்ராஸ் ரொம்ப மோசமாயிடுச்சு. ரொம்ப மோசமான ஜனங்கள்... நான் போன மூணு வருஷத்தில இண்டியாவே எத்தனை மோசமாயிடுச்சு! ப்ளேன் ஸ்ட்ரைக். ரயில்ல போனா கம்பார்ட்மெண்ட் எல்லாம் மோசம்.. நியூஜெர்ஸில இதெல்லாம் பாக்கவே முடியாது".

அவர்கள் எழுந்து நடக்க, உடன் அந்த சிறுவர்கள் நடனமாடியபடியே வந்து "வாத்தியாரே.. உஸ்தாத்... காசு குடு குருவே...!" என்றனர். மற்றவன் சினிமா பாட்டு பாடிக் காட்டினான். "காசு குடு வாத்யாரே!"

"எதுக்கு காசு கொடுக்கணும்?" என்றாள் அனிதா.

"கங்காளம்மனுக்கு கோயில் கட்றோம்.. இந்த பாரு வெளம்பரம்" என்று மஞ்சளாக ஓரங்கள் துவண்ட காகிதத்தைக் காட்டினான்.

அந்தக் காகிதத்தில் 'அருள்மிகு கங்காளம்மன் அறக்கொடை-அக்டோபர் 1987' என்று இருந்தது.

"என்னப்பா, 1987-ன்னு போட்டிருக்கு?"

"கொடுங்கறேன், ரொம்ப கேள்வி கேக்றியே! பிச்சாண்டை வந்து ப்ரீயா காதல் பண்ற.. அதை அனுமதிக்கிறோமில்லை?"

சுரேஷ் பையில் இருந்த அத்தனை க்ரெடிக் கார்டையும் எடுத்துக்காட்டி "இண்டியன் ருப்பீஸா இல்லைப்பா!" என்றான்.

அனிதா தன் பர்ஸை எடுத்து அஞ்சு ரூபாய் கொடுத்தாள்.

"மவராசி! தாக்குலம் வாள்க" என்று சென்றான்.

"அஞ்சு ரூபாய் அதிகம்!" என்றான்.

"இல்லாட்டா போகமாட்டாங்க"

"என்ன மோசமான கண்ட்ரி உங்க இண்டியா!" என்றான்.

"நீங்க இண்டியா இல்லையா?"

"நான் க்ரீன்கார்டு ஹோல்டர்! இன்னும் அஞ்சு வருஷத்தில் ஸிட்டிஸன்ஷிப் வாங்கிடுவேன்... நீகூட அமெரிக்காக்காரி ஆயிடுவே."

க்வீன்மேரீஸ் அருகில் டாக்ஸி காத்துக் கொண்டிருந்தது. இங்கே ஒருமுறை டான்ஸ் ஃபெஸ்டிவலுக்கு வந்திருக்கிறாள். சாந்தினி பாட பாட்டுக்கு, நடுவில் மது நெளிந்து நெளிந்து ஆட, பக்கவாட்டில் ஐந்து ஐந்தாக இருந்த பத்து பெண்களில் தானும் ஒருத்தியாக, 'மேரே பிச்சே படே ஹை தஸ் லட்கே' என்று வரும்போது எத்தனை ஆரவாரம்!

சுரேஷ் தன் பர்ஸை எடுத்து, 'இது ஒரு டாலர்' 'இது பத்து டாலர்' என்றெல்லாம் ஒரே மாதிரியாக இருந்த நோட்டுகளைக் காண்பித்தான். "இது க்ரெடிட்கார்டு.. இதைக் காட்டியே எல்லா கடைலயும் எதுவும் வாங்க முடியும். போன உடனே உனக்கும் ஒரு க்ரெடிட் கார்டு வாங்கி கொடுத்துட்டேன்னா.." என்று அமெரிக்க வாழ்வின் பால பாடங்களைப் புகட்ட ஆரம்பித்தான்.

**சின்னாளம்பட்டுப் புடைவையை கிராமத்துப் பெண்கள் போலக் கட்டிக் கொண்டு, அவ்வப்போது சற்றே பளபள வென்ற கால்கள் தெரிய கோலாட்டம், குதித்து குதித்து கோலாட்டம்!**

**"சாந்துப் பொட்டடி நீ எனக்கு.. சவ்வாதுப் பொட்டடி நான் உனக்கு.. சாந்துப் பொட்டுக்கும் சந்தனப் பொட்டுக்கும் சம்மதமோ முத்துவீராயி!"**

"அனிதா! என்ன யோசிச்சுட்டேவரே? நியூயார்க்கில இந்த மாதிரி 'ஜேவாக்கிங்' பண்ண முடியாது!"

"வீட்டுக்குப் போகலாம்!"என்றாள்.

"டின்னருக்குப் போக வேண்டாமா?"

"இல்லை... இன்னொரு சமயத்தில சாப்பிடலாமே.. ப்ளீஸ் எனக்கு உடம்பு சரியில்லை!"

"ஆமா! உன்முகம் வாடியிருக்கே.. ஏன்? எல்லாம் அமெரிக்காவிலிருந்தா சரியா போய்டும்!"

'அமெரிக்கா.. அமெரிக்கா!'

[அனிதா வருவாள்...]




## பட்டுச் சேலை பரிசுப் போட்டி

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



✯ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

✯ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

✯ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** JY

பெயர்:......................................

முகவரி:......................................

......................................

தொழில்:......................................

கையொப்பம்:......................................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 01-09-2001**


அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? பதுளை வாசகிக்கு அதிஷ்டம்!

**இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்**

அனி கிங்ஸ்லி,
198, கனுபலல்ல, பதுளை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.




## பாப்பா முரசு சிறுகதை

# யானையின் பதில்!

**ஒரு** நாள் அந்தக் காட்டின் ராஜாவான கிழ சிங்கம் செத்துப்போனது.

அதன் மகனான இளம் சிங்கத்திற்கு கிரீடம் சூட்டி அரசனாக்கி, மகிழ்ந்தன காட்டு விலங்குகள்.



தன் தந்தையை போன்று பொறுமை, பக்குவம் இல்லாத இளம் சிங்கம், இளம் வயதிலேயே தனக்கு கிடைத்த பதவியை நினைத்து கர்வம் கொண்டது.

எல்லாரையும் மிரட்டி, உருட்டி தன்னுடைய பலத்தைக் காட்டியது.

எந்த மிருகத்துடனாவது சண்டை போட்டு தன்னுடைய வலிமையை எல்லாருக்கும் காட்ட நினைத்தது அது.

எனவே, வலிய போய் எல்லா மிருகங்களையும் சண்டைக்கு இழுத்தது சிங்கம்.

சிங்கத்தின் குணம் தெரிந்ததால், எல்லா மிருகங்களும் பணிந்து போய் பின்வங்கின.

வழக்கம் போல தன் உணவை சாப்பிட்டு முடித்த சிங்கம் 'காட்டு உலா'விற்கு கிளம்பியது.

வழியில் புலி ஒன்று வணங்கியது சிங்கத்தை.

"இந்தக் காட்டின் ராஜா யாரடா?" என்றது சிங்கம் ஆணவத்துடன்.

"சர்வ வல்லமை படைத்த தாங்கள் தான் ராஜா!" என்றது புலி.

அந்த பதிலைக் கேட்டு மிகவும் பெருமை கொண்ட சிங்கம், வாலை ஆட்டி ஆட்டி நடந்துச் சென்றது. தேனடையை சுவைத்து தின்றுக் கொண்டிருந்த கரடியைப் பார்த்தது சிங்கம். தேனடையை கீழே போட்டு விட்டு அரசனை வணங்கியது கரடி.

"இந்தக் காட்டின் ராஜா யார்?" என்றது சிங்கம்.

"இளஞ்சூரியனான தாங்கள்தான் மன்னா," என்றது கரடி.

மிகவும் பெருமைப்பட்ட சிங்கம் மேலும் நடந்தது. வழியில் மிகப்பெரிய யானை ஒன்றைக் கண்டது சிங்கம்.

"மத யானையே... இந்தக் காட்டின் ராஜா யாரடா?" என்றது மிகப் பெருமையுடன்.

இளம் சிங்கத்தின் திமிர்த்தனமான பேச்சில் கோபம் கொண்ட யானை, சிங்கத்தை தன் துதிக்கையால் தூக்கி ஒரு சுழற்று சுழற்றி 'மடார்' என்று ஒரு மரத்தின் மீது தூக்கிப் போட்டது.

'பொத்'தென்று விழுந்த சிங்கம்,அடிபட்டதன் காயங்களை நக்கியபடியே சிரமப்பட்டு எழுந்தது. மிகவும் வெட்கத்துடன்,

"நான் கேட்ட கேள்விக்கு பதில் தெரியலைன்னா,தெரியலைன்னு சொல்ல வேண்டியதுதானே. அதுக்காக இப்படியா என்னை தூக்கி வீசுவது?" என்று கேட்டுவிட்டு அவமானத்துடன் அந்த இடத்தை விட்டுச் சென்றது.

அதிலிருந்து சிங்கத்தின் திமிர் போன இடம் தெரியவில்லை.



1 தொடக்கம் 26 வரையான புள்ளிகளை ஒரு பென்சில் கொண்டு இணைத்து மறைந்திருப்பது எதுவென்று கண்டுபிடியுங்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!




மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **01.09.2001.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 409**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 407

**பரிசுக்குரியவர்:**
சரவணமுத்து காளிதாசன்,
அயிஸ்லெபி தமிழ் வித்தியாலயம், பண்டாரவளை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| கு. பிரியங்கா,<br>இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி,பம்பலப்பிட்டி. | பி. பிரவீன் பிரகாஷ்,<br>திருத்துவக் கல்லூரி, கண்டி. |
| பாத்திமா சியாமா,<br>முஸ்லிம் பாலிகா வித்.,அக்குறணை. | எஸ். ரமீஷா,<br>பசறை தமிழ் மகா வித்தியாலயம், பதுளை. |
| இ. சு. அமுதசுரபி,<br>விவேகானந்தா வித்தியாலயம், அக்கரைப்பற்று-08. | சி. அபிலாஸ்,<br>சென். மேரிஸ் மத்திய மகாவித் த.க., பொகவந்தலாவ. |
| சுஜிகரன் விஜயகுமார்,<br>சென். ஜோன் பொஸ்கோஸ் கல்லூரி, ஹட்டன். | ஆர். றோஷான் மொஹமட்,<br>சாந்த ஜோன் வித்தியாலயம், நுகேகொடை. |
| அசானா இல்மா அம்சீக்,<br>பனித தோமையார் பெண்கள் பாடசாலை, மாத்தளை. | ஆர். கமலினி,<br>தமிழ் மகா வித்தியாலயம், வெலிமடை. |

## விடுகதைகளும் விடைகளும்

1. மழையில் நனையும்,
வெய்யிலில் காயும், வெளியில் மலரும்
வீட்டில் சுருங்கும்
அது என்ன?

2. ஆழ்கடலின் அடியே பிறந்து
அங்கொருவர் கண்டெடுத்து
அங்காடிக்கு வந்து சேர்ந்து
அங்கமதில் அரங்கேறும்
அது என்ன?

3. கட்டோடு இருந்ததைப் பிரித்து
சத்தை எடுத்து விட்டுச்
சருகைப் போட்டு விட்டார்.
அது என்ன?

4. இரு வட்டம் சுழல,
எட்டுக்கால் இழுத்துச் செல்ல,
கடக்கா முடக்கா
கடை வீதியில் போகுது.
அது என்ன?

5. மாடத்திலே வசிப்பான்;
மன்னவனும் அல்ல;
கோபுரத்திலே வசிப்பான்;
கொற்றவனும் அல்ல;
அவன் யார்?

### விடைகள்

1. குடை
2. முத்து
3. உமி
4. மாட்டு வண்டி
5. மாடப்புறா

## குட்டிச் செய்திகள்

* நீரை உறிஞ்சிக் குடிக்கக் கூடிய பறவை புறா ஒன்று மட்டும்தான்.
* ஓநாய்கள் மணித்தியாலத்திற்கு 60 கிலோ மீட்டர் வேகத்தில் ஓடக்கூடியது.
* இந்தியாவின் பெரிய மிருகக்காட்சிச் சாலை கல்கத்தாவில் உள்ளது.
* ஒரு கோழிக்குஞ்சுக்கு 8 ஆயிரம் இறகுகளுக்கு மேல் வளர்கின்றன.
* தங்கத்தைக் கரைக்கப் பயன்படுவது இராஜ திராவகம்.

## விநோதமான திருமணங்கள்



← முற்காலத்தில் இந்தியாவை ஆட்சி செய்த இராஜபுத்திர வம்சத்தவர்கள் இல்லங்களில் நடைபெறும் சில திருமணங்களில் மணமகனின் இடத்தில் அவனது வீரவாள் மட்டுமே வைக்கப்பட்டிருக்கும்.




↙ அமெரிக்காவில ஒட்டா என்ற இடத்தைச் சேர்ந்த லிஸா என்ற பெண்மணி சில காலத்திற்கு முன், துருக்கியில் உள்ள தன் மணமகனை மனதில் நினைத்தபடியே திருமணம் செய்து கொண்டாள்.



← அமெரிக்காவின் ஒகலோமாவில் உள்ள துல்ஷாவைச் சேர்ந்த ஒரு பொறியியலாளர் தனக்கு மணப்பெண் தேவை என்பதை தொலைக்காட்சியில் தோன்றி அறிவித்தார். உடனே ஒரு பெண் அவரை மணக்க சம்மதிக்க, திருமணம் நடந்தேறியது.

## சிக்னல்



**மு**தன் முதலாக வீதிப்போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் 'சிக்னல்' முறை 1868ம் ஆண்டில் தான் அறிமுகமாகியது. அப்போது பச்சை, சிவப்பு ஆகிய இரண்டு நிறங்கள்தான் இருந்தன. கேஸ் விளக்குகளே ஆரம்பத்தில் இதற்குப் பயன்படுத்தப்பட்டன. முதலில் சிக்னல் பயன்படுத்தப்பட்ட இடம் இலண்டனில் உள்ள பாராளுமன்றக் கட்டடத்திற்கு அருகில். ஆனால் சிக்னல் நிறுவப்பட்ட சில நாட்களிலேயே, அந்த விளக்கு வெடித்து ஒரு பொலிஸ்காரரைக் கொன்றது. அத்துடன் சிக்னல் முறை நிறுத்தப்பட்டது. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் பயனாக 1914ம் ஆண்டில் அமெரிக்காவில் தற்போது புழக்கத்தில் இருக்கும் மூவர்ண(பச்சை-அம்பர்-சிவப்பு) விளக்குகள் கொண்ட சிக்னல் அமைக்கப்பட்டது. பெருகி வரும் போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்க, தற்போது இலண்டன் நகரின் மையப்பகுதியில் ஒரே கம்பத்தில் 75 சிக்னல் விளக்குகளைப் பொருத்தியுள்ளார்கள்.

# தூனாடாவிட்டாலும்

கமலம் செட்டை கட்டாத குறையாகப் பறந்து கொண்டு திரிந்தாள். இருக்காதா பின்னே? முதன் முதலாக நாளை தான் மகள் வயிற்றுப் பேத்தியைக் காணப் போகிறாள். கனடாவில் பிறந்து வள்ர்ந்து பதினான்கு வயதுப் பெண்ணாக வரப் போகும் பேத்தி லக்ஷியை மனக்கண்ணில் கட்டிக் கொண்டு உச்சி முகர்ந்தாள். அல்வாயிலுள்ள அவளது வீட்டின் தெருவோரத்தில் போய் நின்று கொண்டு போவோர் வரவோரை அருகில் அழைத்து தனது பேத்தி வரப்போகும் செய்தியை நூறாவது தடவையாகத் தனது கம்பீரமான குரலில் ஒலிபரப்பிக் கொண்டிருந்தாள்.

"ஏண்டீ சந்திரா! உனக்குத் தெரியுமா? என்ரை பேத்தி லட்சுமியோ லச்சியோ... பேரே வாய்க்குள்ளை வராதாம்... அவள் தான் என்ரை கல்யாணியின்ரை மோள். நாளைக் கெல்லே இஞ்சை வரப்போறாள். இப்ப கனடாவிலை இருந்து கொழும்பிலை வந்து நிற்கிறாள். பொடியை எப்ப காணப் போறமெண்டு இந்த நெஞ்சு கிடந்து எப்பிடித் துடிக்குது தெரியுமா?" கண்கள் படபடக்கக் கூறிக் கொண்டிருந்த கமலம், தூரத்தில் போய்க் கொண்டிருந்த மரகதத்தைக் கண்டு விட்டு உரத்த குரலில் கூப்பிட்டாள்.



"மரகதம், மரகதம்! இஞ்சை கொஞ்சம் வந்திட்டுப் போயேன்."

"என்ன கமலமக்கா, என்னையா கூப்பிட்டியள்? நான் கொஞ்சம் அவசரமாப் போறன். அவர் தோட்டத்துக்குச் சாப்பாடு கொண்டு வரச் சொன்னவர். உங்கடை பேத்தி வாற விசயம் நீங்கள் முந்தியே எனக்குச் சொல்லிப் போட்டியள். எதுக்கும் பின்னேரம் வீட்டை வாறன்; ஆறுதலாக் கதைப்பமக்கா." தப்பித்தோம் பிழைத்தோம் என்று மெல்லக் கழன்று கொண்டாள் மரகதம்.

"பாரன் கொழுப்பை! ஒரு நிமிசம் என்னோடை கதைக்கிறதிடையிலை ஏதோ தலை போன மாதிரி துடிச்சுக் கொண்டு நிக்கிறாள். எல்லாம் எரிச்சல் தான். என்ரை பேத்தி வெளிநாட்டிலை இருந்து வாறாளெண்டவுடனை எப்பிடி உந்த முகம் கோணலாகிப் போச்சு பாரன். என்னட்டை ஒரு கதை கேக்கிறதுக்கிடையிலை அப்பிடி என்ன உயிரே போகப் போகுது?" என்று முகத்தைச் சுளித்தபடி சிறிது பலமாகவே முணுமுணுத்தாள் கமலம்.

தெருமூலையில் ராசையா வருவது மங்கலாகத் தெரிந்தது. கமலம் வாசற் கதவுடன் சேர்ந்திருந்த படியில் அமர்ந்து கொண்டாள். ராசையா கமலத்திற்கு ஆசைக்கும் ஆஸ்திக்குமாக இரண்டு பிள்ளைகள் தான். மகள் கல்யாணியை கமலத்தின் அண்ணன் மகனுக்கே கட்டிக் கொடுத்து அவள் கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்கிறாள். மகன் கரன் கனடா போய் இரண்டு வருடத்திலேயே பெற்றோர்கள் விருப்பத்தை மீறி யாரோ ஒருத்தியைக் கைப்பிடித்து வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தான். தமிழ்ப் பெண்ணானாலும் கரன் காதலித்துக் கல்யாணம் செய்ததை கமலத்தால் ஜீரணிக்க முடியவில்லை. அதனால் அவன் திருமணம் செய்த நாளிலிருந்து இந்தப் பதினைந்து வருடமாகக் கதை, பேச்சு என்று எந்தத் தொடர்பும் கிடையாது.

"என்ன கமலம், பேத்திமார் வாற சந்தோசத்திலை துள்ளிக் குதிச்சுக் களைச்சுப் போனாய் போலை," என்று ராசையா கேட்கவும் கமலத்தின் சோர்ந்திருந்த கண்மடல்கள் திடுக்கிட்டு விரிந்து துடித்தன.

"என்ன சொன்னனீங்கள்? ஒருக்கால் திருப்பிச் சொல்லுங்கோ. பேத்திமாரோ... எனக்கு ஒரு பேத்திதான். சொல்லிப் போட்டன்"

"அது சரி பிள்ளை. நீ வாற போறவைக்கெல்லாம் உன்ரை மகள் வயிற்றுப் பேத்தி வாறதைச் சொல்லுறியே ஒழிய, கரன்ரை பொடியும் வாறாளெண்டதை சொல்லாமல் விட்டிட்டியே.. அவள் தகப்பன் செய்த பிழைக்கு அவள் குழந்தை என்ன செய்வாள்?"

**அல்வையூர்-காந்தி அருணாசலம்**

"இஞ்சை பாருங்கோ. அவன் பாவியின்ரை கதை மட்டும் என்னோடை கதையாதேங்கோ. கட்டையிலை போறவன்! இப்பிடிக் காதல் கத்தரிக்காய் எண்டு என்னைத் தலை குனிய வைச்சுட்டானே; எங்கடை வம்சத்திலை ஆரும் ஓராள் இப்பிடி லவ் பண்ணுறன் எண்டு கேடுகெட்ட வேலை பாத்தவையே. உவன் நாசமாப் போக! அது தான் பதினைஞ்சு வரியத்துக்கு முந்தியே செத்த பொடி எண்டு தலையிலை தண்ணி வாத்திட்டமே, பிறகெங்கை இருந்து வந்தது இந்தப் பேரப்பொடி? வரட்டும்.. வரட்டும். அவளை முகந் திரும்பிப் பார்த்தனெண்டால், என்ரை பேர் கமலம் இல்லை. நான் சொன்ன சொல்லுக்கு மறுபேச்சில்லாமல் என்ரை அண்ணன்ரை மேனைக் கட்டின கலியாணியின்ரை பிள்ளை தான் எனக்குப் பேத்தி. சொல்லிப் போட்டன்." ஆவேசம் வந்தவள் போல் உரத்த குரலில் கூறிக் கொண்டிருந்த கமலத்தின் கோபத்திற்கு சம்பந்தமே இல்லாமல் இரண்டு சொட்டுக் கண்ணீர்த் துளிகள் உடைந்து கன்னத்தில் கோடிழுத்தன.

"சரி பிள்ளை, இப்ப நீ ஏன் ரென்சனாகிறாய்.. எனக்கு மட்டுமென்ன அவன் செய்தது மறந்து போச்செண்டே நினைக்கிறாய்.. இப்ப நினைச்சாலும் உடம்பெல்லாம் கூசுது. என்ரை இனஞ்சனமெல்லாம் வந்து உன்ரை பொடியன் ஆரோ ஒருத்தியை லவ் பண்ணுறானாமே எண்டு ஏளனமாக் கேக்கேக்கை என்ரை எண்சாண் உடம்பும் ஒரு சாணா எல்லோ குறுகிப் போய் நிண்டுது. இந்த உடம்பு நெருப்பிலை கலந்தாலும் உவன் பொடியனோடை எங்களுக்குத் தொடர்பு இருக்கப் போறேல்லை. இப்ப ஏன் உந்த நன்றி கெட்ட நாயின்ரை கதை. வா சாப்பிடுவம்." உணர்ச்சி வேகத்தில் ராசையாவின் விழிகள் சிவந்தன.

பொழுது மிக மெதுவாகவே ஊர்ந்து விடிந்தது. கமலத்திற்கு கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை. கையில் சாமானை வைத்துக் கொண்டே உள்ளேயும் வெளியேயுமாகத் ஓடிக் கொண்டிருந்தாள்.

"என்னங்க.. பிள்ளை இப்ப வந்திடும் தானே... இதென்ன வெள்ளனப் பாக்கேக்கையும் ஏழுமணி காட்டிச்சுது. இப்ப இவ்வளவு நேரத்துக்குப் பிறகு பாக்கவும் அதே ஏழு மணியாயிருக்கு. மணிக்கூடு ஏதும் பிழையாயிருக்குமோ?" என்று அங்கலாய்த்தாள் கமலம்.

"என்ன கமலமிது. பிள்ளையள் கொழும்பிலை இருக்கிற என்ரை மச்சானோடை தானே வரப்போகினம். மச்சான் நேற்றும் ரெலிஃபோனிலை சொன்னவன், 'நீ ஒண்டுக்கும் யோசிக்காதையடா. நான் பேத்திமாரைக் கவனமாக் கொண்டு வந்து உன்ரை கையிலை ஒப்படைக்கிறன்' எண்டு. பிறகேன் பறந்து கொண்டு திரியிறாய். இதிலை கொஞ்ச நேரத்துக்கு ஆறுதலா இரு."

"அதில்லையப்பா. கலியாணியின்ரை மேளென்ன தாயைப் போல ஒல்லியா இருப்பளோ அல்லது மருமகனைப் போல வாட்ட சாட்டமாயிருப்பாளோ.. ஐயோ இந்த மனசு சந்தோஷத்திலை எப்படிப் படபடக்குது தெரியுமே? நெஞ்சு துடிக்கிற துடிப்பிலை உயிர் போனாலும் போடும். பேத்தியைப் பாத்திட்டுச் செத்தாலும் பரவாயில்லை."

"வாயை மூடு பிள்ளை! என்ன விசர்க் கதை கதைக்கிறாய்? அங்கை பார்.. அங்கை பார்.. கார் வருகுது. இஞ்சை தான். வா...வா" ராசையா திடீரென்று இளைஞனாகியதில் பாய்ந்து வெளியே ஓடவும், கமலம் 'நானென்ன சளைத்தவளா?' என்று ர்ாசையாவை முந்தினாள்.

கதவைத் திறந்து கொண்டு லாவகமாக இறங்கிய அந்த இரு பெண்களில் சடாரென்று அடையாளம் தெரிந்த அந்தப் பெண்... நீண்டு நுனியில் சிறிது வளைந்த அந்த எடுப்பான நாசி.. குறும்பாகத் துறு துறுவென்று சுழலும் அந்தப் பெரிய கண்கள்... நெளி நெளியாக அலைபாயும் அந்தக் கரிய சுருண்ட முடி. அப்படியே மகன் கரனை உரித்து வைத்தது போல் என்ன ஒரு முக ஒற்றுமை? இடுங்கிய நான்கு ஜோடிக் கண்களும் இமைக்க மறந்து விரிந்தன. "தாத்தா, பாட்டீ!" என்று சிரித்த பேத்தியின் மேல் வாயின் ஓரத்தில் கரனின் அதே தெற்றுப் பல்லு பளீரிட்டது. ராசையாவும் கமலமும் பார்த்துப் பார்த்து ரசித்த அந்தக் கன்னக் குழிகூட அச்சாக அப்படியே சுழியிட்டது. அம்மாடியோவ்! இப்படி ஒரு உருவ ஒற்றுமையா?

ஓடி வந்து கட்டிக் கொண்ட மகன் வயிற்றுப் பேத்தியை மூச்சுத் திணற ஆவேசத்துடன் முத்தமிடும் கமலத்தை வலுக்கட்டாயமாகத் தள்ளிவிட்டுத்தான் இழுத்து அணைத்துக் கொண்டார் ராசையா. மகனே குழந்தையாக ஓடி வந்து அணைத்துக் கொண்டது போல் நெஞ்சில் இன்பம் பொங்கியது. பதினைந்து வருடமாக மகனிடம் காட்ட மறுத்துப் புதைத்து வைத்திருந்த பாசம் பொங்கிப் பீறிட்டதில் பேத்தி திக்குமுக்காடிக் கொண்டிருந்தாள்.

# மாறுபாடுகள்

புதிய திரைப்படம் வெளியிடப்பட்டு இன்றுடன் மூன்றாவது நாள். தற்போது அஜித்குமார் படங்கள் சிறப்பாக இருப்பதனாலும், இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே நேரத்தில் வெளியிடப்பட்டதனாலும் நெல்சன் தியேட்டரில் ஏகப்பட்ட கூட்டம். அந்த தியேட்டருக்கு அருகாமையிலிருந்த 'சூசை' கடைக்கும் வியாபாரம் சுறுசுறுப்பாகிக் கொண்டிருந்தது.

நுரைதள்ளிய பால்தேனீரை பருகிக் கொண்டே வாங்கில் இருந்தபடி, எதிரே சனக்கூட்டத்தை அவதானித்துக்கொண்டிருந்தார்.

"கொசு மொய்க்குது. முதல்ல டீயைக் குடிடாப்பா!"

"ஓமடா! கவனிக்கவில்லை. சனம் நல்லா இருக்கு என்ன...?"



"இன்னும் வீடீயோவுக்கும் வரவில்லை. அதான் இப்படி. எல்லாப் படத்தைப் போல தான் இருக்கும். இப்போ யார்ர படம் சொல்லக் கூடியமாதிரி இருக்கு. அதெல்லாம் சிவாஜி காலத்தோட சரி."

"இல்ல மச்சான். சுப்பரா அஜித் நடிச்சிருக்கான். முதல்நாளே பார்த்துப் போட்டன். நல்லாயிருக்கு பார்க்கலாம்." அருகில் இருந்து ஜேம்பான் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர் இடையில் குறுக்கிட்டு,

"நேற்று நானும் பார்த்தேன். நல்லாயிருக்கு. முடிவு சுப்பரா இருக்கு."

"என்ன சுப்பர்." சற்று அலுத்துக்கொண்டே," பெரிசா சொல்றதற்கு என்று ஏதுமில்லை. பணம் செல்வாக்கு அதிகாரம் எல்லாத்திற்கும் அடிமைப்பட்டு பலாத்காரமாக காதலிச்சவளையே கட்டிக்கிறதாகக் காட்டுகின்ற முடிவு எனக்கென்றால் சரியாகப் படவில்லை."

"நீங்க என்ன சொல்றீங்க...?"

"படத்தோட முடிவைத்தான்."

"அப்படியில்லையே..! நீங்க சொல்ற மாதிரி முடிவில்லை. அந்தப் பெண்ணையும் விட்டு, கிராமத்துல இருக்கின்ற தன்னோட உறவுக்காரப் பெண்ணை அல்லவா கைப்

**இளையவன்-திருகோணமலை**

பிடிக்கிறதாக முடிவு." பதிலளித்தவரை முகத்திற்கு நேரே ஏறிட்டு தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டார்.

"நீங்க வேற ஏதோ படத்தைப்பற்றிச் சொல்றீங்க..."

"இல்லை. நான் நேற்றுத்தான் பார்த்தேன். சுவராச் சொல்றன்."

"அப்போ நான் முதல் நாளன்றே பார்த்தது...?"

"என்னடாப்பா ரெண்டுபேரும் போட்டுக் குழப்பிக் கொண்டிருக்கிறீங்க. எப்படி ஒரு படத்திற்கு ரெண்டு முடிவு..?" கடைக்காரர் குறுக்கிட்டார்.

"அதானே! அந்தாள் அவ்வளவு உறுதியாகச் சொல்கிறார்! அவர் சொல்கிறதெல்லாம் சரி. ஆனால் முடிவைத்தான் மாற்றிச் சொல்கின்றார். அதான் குழப்பமா இருக்கு."

"ரெண்டு பேரும், பார்த்திருக்காங்க. இதுல யாரோ ஒருவருக்கு குழப்பம். இப்போ படம் முடிஞ்சுபோற யாராவது வருவாங்க. கேட்டுப்பார்த்திட்டாப் போச்சு. சீனியைக் கலக்கிக்கொண்டே முதலாளி சொன்ன தீர்ப்பை ஏற்றுக்கொள்ளவும், முடிவைக் கேட்டறிந்து கொள்ளக்கூடியதான ஒருவர் வரவும் சரியாக இருந்தது.

"படம் நல்லாயிருக்கு. முடிவென்று சொன்னால், திமிர்த்தனமா காதலிச்சவளை கைவிட்டது சரி. கிராமத்து உறவுக்காரப் பெண்ணைப் பொறுத்தவரையில் பெரிதான காதல் இல்லாததினால், இலகுவாக மனதை மாற்றி யாரையாவது கல்யாணம் செய்து கொள்ளலாம். தன்னை விரும்பியவள் தனக்காகவே வாழ்வாள் என்பதை வலியுறுத்துவதற்காக அந்தப் பெண்ணையே முடிப்பது என்னைப் பொறுத்தவரையில் நல்ல முடிவு."

அங்கிருந்தவர்கள் அனைவருமே குழம்பிப்போயினர். எப்படி மூன்று விதமான முடிவுகள்..?

ஏற்கனவே பார்த்ததாகச் சொன்ன இருவருக்கும் அவர் மேல் சற்று சந்தேகம். வேறு ஏதாவது படத்தின் முடிவுகள் அல்லது இடையில் நித்திரையாகி சுமார் குத்து மதிப்பாக முடிவை...

"முடியும் வரைக்கும் பார்த்தீங்களா..? நேற்று பார்த்தேன், நீங்க சொல்ற மாதிரி காட்டவில்லையே..."

"அப்போ! முதல் நாளன்றே இந்தப்படத்தைப் பார்த்த நான் தியேட்டர் முகட்டையா பார்த்துக்கொண்டிருந்தேன்..? சொன்னால் நம்ப மாட்டேன் என்கின்றீர்களே..?"

எல்லாவற்றையும் அறிந்துகொண்டதும் வந்தவரும் நன்றாகவே குழம்பிப்போனார். ஏகமொத்தமாக ஒரு படத்தின் முடிவுக்காக சூசை கடையிலிருந்தவர்கள் தடுமாறி குழம்பிக்கொண்டிருந்தனர். இன்றைக்கு நாட்டுக்குத் தேவையான மிக அவசியமான அந்த விடயம் சிறிய தேனீர்க்கடையில் தீர்வுக்காக தடுமாறிக் கொண்டிருந்தது. இதற்கும் மேல் விளக்கம் பெற்றிடவோ அல்லது தீர்வைக் கொடுத்திடவோ யாரும் இல்லை என்று ஏகமனதான முடிவில் பிரகாரம் அனைவரும் ஒன்றிணைந்து அந்த முடிவுக்கு வந்தனர்.

தன்னைச் சுற்றி சிறிய கூட்டமாக வந்திருப்பவர்களை ஆச்சரியத்துடன் அவதானித்தார் தியேட்டர் உரிமையாளர் கிரி.

பிரச்சனைகளைத் தெளிவாகக் கேட்டறிந்து கொண்டதும் மெல்லிதாகவே சிரித்துக் கொண்டு,

"நீங்க யாருமே எழுத்தோடும் போது கவனிக்கவில்லை போல இருக்கு. நீங்க மூணுபேரும் சொல்றது சரிதான்."

ஒரே நேரத்தில் அனைவரும் அவரை முகத்திற்கு நேரே ஏறிட்டனா. குழப்பம் தொடர்ந்து கொண்டே இருந்தது.

"இது உங்களின் கதை. பொருத்தமான முடிவுகள் உங்களில் யாருக்காவது இருக்கலாம் என்று ஆரம்பத்திலே போட்டுக் காட்டுவதை கவனிச்சிருந்தால் இந்தக் குழப்பம் வந்திருக்காது."

"கிரியண்ணே! எங்களுக்குப் புரியவில்லை."

"இந்த படத்தோட டைரக்டர் மாறுபாடுகளைக் காட்டுறதில கில்லாடி. படத்தின் பரபரப்பிற்காகவும், வியாபார தந்திரத்திற்காகவும் இப்படி முடிவுகளை அமைச்சிருக்கார். எதிர்பார்த்த மாதிரியே இருக்கு."

"............"

"உங்களுக்குப் புரியவில்லை போலயிருக்கு. கடைசி ரீல் மாத்திரம் நீங்க சொல்ற மாதிரி மூன்று விதமாக இருக்கு. ஒருநாளைக்கு ஒன்றுபடியாக தினம் மாற்றி காண்பிக்கப்படல் வேண்டுமென்று எங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. முடிவுகளை பார்த்து உங்களைப்போல குழம்பிக்கொள்பவர்கள் எப்படியும் இன்னும் ரெண்டு தடவைகள் பார்த்தாகவேண்டும். வசூல் குவிக்கிறதற்கு இதுவும் ஒரு தந்திரம்" எங்களைப் பார்த்து அவர் மீண்டும் மெல்லிதாகவே...

# தடுமாற்றம்

நேரம் காலை எட்டு. பாடசாலை பிறேயர் முடிந்ததும் நான் கிளம்பினேன். ஒவ்வொரு வகுப்பறையாக இப்படிச் செல்வது வழக்கம். வழமை போல் அன்றும் அந்த ஓலெவல் வகுப்புக்குள் நுழைந்தேன். வழக்கத்திற்கு மாறாக, அமைதியாக இருந்தது அது.

'ஆசிரியர் இல்லாமல் இருக்குது. இன்னும் ஆறுமாசத்தில சோதனை' என்ற எண்ணத்தில் மொனீற்றரிடம் கேட்டேன்.

"டீச்சர் எங்க?"

"சேர் உங்கட ஒஃபீசுக்குத்தான் மிஸ் போனவ!" என்றான் அவன். அவனுடைய முகத்தில் கலவரம். மற்றைய மாணவர்களும் ஒருவித பதற்றத்தில் இருந்தார்கள்.

'அப்படியென்றால் ஏதோ பிரச்சனையிருக்கு' என்று உணர்ந்து கொண்டவனாய் காரியாலயத்திற்கு நடந்தேன்.

"யெஸ் கம்மின்", ஓலெவல் வகுப்பு ரீச்சர் புவனலோஜினி உள்ளே வந்தார். அவரோடு அந்த மாணவன் கண்கள் சிவந்து முகம் வீங்கி,

"என்ன மிஸ்?"

"சேர் அது வந்து இவன் என்ர கிளாஸ் மாணவன்.." குறுக்கிட்டேன்.

"இவன் ஓலெவலா ஆளப்பாக்க சின்னவனா இருக்கு!" என்று ஆச்சரியத்தை வெளிப்படுத்தினேன்.

"ஆள்தான் சின்னன் சேர். செய்யிற வேலையெல்லாம் பெரிசு. இவன் என்ர வகுப்பென்று சொல்லவே அவமானமாயிருக்கு."

"அப்படி என்ன மிஸ் நடந்தது!"

"சேர் இந்தக் கடிதத்தப் பாருங்கோ.. இந்த மன்மதன் எழுதியிருக்கார். என்ன சேர்ட்ட குடுடா!" என்று புவனலோஜினி ரீச்சர் அவன் காதை முறுக்கினார். நான் கொஞ்சம் கண்டிப்பானவன்தான். அது அவருக்கும் தெரியும். அவனுக்கும் தெரியும். ஆனால் எதையும் முதலில் தீர விசாரிப்பேன்.



"மிஸ் நீங்க வகுப்புக்குப் போங்கோ. நான் பார்த்துக்கொள்றன்!"

"சரி சேர்" அவரின் குரலில் திருப்தி தொனித்தது. தன்னுடைய கடமை தீர்ந்தது போல் புறப்பட்டார்.

"டேய் சொல்லடா என்ன செய்தாய்?" என் அதட்டலில் திடுக்குற்றான் மாணவன். அந்தக் கடிதம் போட்ட இடத்திலேயே இருக்க, விடயத்தை அவன் வாயால் எதிர்பார்த்தேன். அவனாகச் சொல்லட்டும். பயம் அவனை ஆக்கிரமித்திருந்தது. என் குரலை சற்றுத்தாழ்த்தி,

"தம்பி டீச்சர் நல்லா அடிச்சவவா?" என்றேன். வேகமாகத் தலையாட்டினான் ஆமென்று. "பயப்படாத நான் அடிக்கமாட்டன்!" பக்கத்திலிருந்த பிரம்பை தூக்கி எறிந்தேன். தண்ணீர் கொஞ்சம் கிளாசில் ஊற்றிக்கொடுத்தேன். மடமடவென்று குடித்தான். அத்தனைதாகம் அவனுக்கு. டீச்சர் வாட்டித்தான் போட்டார்.

"இப்ப சொல்லு?"

"அ..து கா..த..ல் கடிதம்!" இழுத்தான். "அப்படியா? யாருக்கு? உன்னோட படிக்கிறவளுக்கா?" தலையாட்டினான். ஓலெவல் வகுப்பு பதினாறு வயது. மீசையோடு இப்படி ஆசைகளும் அரும்பும் வயது. நானும் அந்த வயதைத்தாண்டி வந்தவன்தானே? "அது சரி எப்படி மாட்டுப்பட்டாய்?"

"அது வந்து... என்ர கொப்பிக்குள்ள இருந்தது... டீச்சர்.. கொப்பி பாக்கேக்க கண்டுட்டா!" என்றான் அப்பாவித்தனமாக. அந்தக்கடிதத்தைப் பார்த்தேன். ***என்றென்றும் என் பிரியமுள்ள குமுதாவுக்கு, நான் எழுதும் முதல் கடிதம்.. இப்படிக்கு உன் உண்மையுள்ள உயிர் சேகரன்.***

கண்ணியமான வார்த்தைகள் கொண்டு தன் மன ஏக்கத்தைக் கொட்டியிருந்தான்.

"நீ.... சேகரன் நல்லா கதை, கவிதையெல்லாம் எழுதுவியா? சொல்வளம் உன்னட்ட நிறையவே இருக்கு.. அதுசரி எப்ப இந்தக் கடிதம் கொடுக்கப்போறாய்?" நான் கேட்ட போது, அவன் அதிசயமாக என்னைப் பார்த்தான்.

"என்ன பிறின்சிப்பலா பாக்காத, ஒரு நண்பனா பார். இந்தக் கடிதத்த இன்றே கொடுத்துடு உன்ர குமுதாவிட்ட!" என்று அவன் தோளில் தட்டிச் சிரித்தேன். அவனுடைய முகம் கொஞ்சம் கொஞ்சமாக மலர்ந்தது.

**ராகுலன்-வெள்ளவத்தை**

"படிப்பையும் கவனிச்சுக் கொள்ளுப்பா!"

"சரி சேர்"- என்றான் உற்சாகமாக.

மறுநாள்,

"சேர் கூப்பிட்டீங்களாமே?" புவனலோஜினி ரீச்சர் உள்ளே நுழைந்தார்.

"ஓம் மிஸ், உங்கட ஷெடுல் மாத்தியிருக்கு. உங்கட வகுப்ப நான் பொறுப்பேத்திருக்கன். நீங்க ஜொயின் பண்ணெக்க கேட்டது போலவே ஏ,லெவல் வகுப்பு உங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கு.

"தாங்யூ சேர் தாங்யூ!" அவர் வார்த்தைகள் முழுதும் நன்றியுடன் சந்தோஷித்தார். நேரம் எட்டே காலை அண்மித்திருந்தது; புறப்பட்டேன் அந்த ஓலெவல் வகுப்பை நோக்கி. பதினாறு வயது இரண்டும் கெட்டான் வயது. கொஞ்சம் தடுமாறும் வயது. அந்த வயதில் சிந்தனைகள் செயல்களெல்லாம் புரட்சிகரமானதாகத்தானிருக்கும். அவற்றையெல்லாம் நாங்கள் அடக்கவோ திணிக்கவோ முடியாது. முயன்றால் அது விரக்திக்குத்தான் வித்திடும். அவர்களையெல்லாம் விட்டுத்தான் பிடிக்கவேண்டும். வெறும் அடிஉதை தண்டனைகளில் பயனில்லை. 'Recommendations will worth than ruling (தண்டிப்பதை விட சிபாரிசுகளே மேலானது)

அவர்களைப் பொறுத்தவரையில் இது தான் உண்மை.

'அந்த வயதில் நாங்கள் போடாத கூத்தா' எண்ணிக்கொண்டு அந்த வகுப்புக்குள் நுழைந்தேன். "குட்மோனிங் சேர்..." "குட்மோனிங் சார்..." சேகரனைத் தொடர்ந்து மற்றைய மாணவர்களும் உற்சாகத்தோடு வரவேற்றார்கள்.

துப்பாக்கி, அவள் கழுத்தின் பின்பக்கம் அழுந்தியது. அவள், சிகரெட்டை ஊதியபடி விமானத்தைக் கிளப்பினாள்.

சங்கர்லாலும் மாணிக்கமும் எப்படியாவது உயிருடன் தப்பியிருக்கமாட்டார்களா என்ற அற்ப ஆசை அவள் மனத்தில் எழுந்தது.

அந்த நம்பிக்கையால் அவள் தன்னையும் மாய்த்துக் கொண்டு, ஷாவையும் மலர்ச்சோலையையும் விமான விபத்துக்குள்ளாக்க விரும்பவில்லை!

விமானம், இப்போது உயர எழும்பியது!

ஷா, ஜெட்பார்ட் விமானத்தை நெருங்கிக் கொண்டிருந்த அதே நேரத்தில், ஷாவின் பங்களாவின் பக்கத்தில் என்ன நடந்தது என்பதைக் கொஞ்சம் தெரிந்துகொள்ள வேண்டும்.

சங்கர்லால் தன்னந்தனியராக ஷாவின் கோட்டையை நோக்கி வருகிறார். அவர் வாய்ப்பான இடத்தில் வந்ததும் மலைச்சரிவிலிருந்து பத்துப் பேர் மிஷின் துப்பாக்கியால் சங்கர்லாலைச் சுட்டுக் கொல்ல வேண்டும் என்று ஷா கட்டளை இட்டார் அல்லவா? அந்த பத்துப்பேரும் மிக ஆவலுடன் காத்திருந்தார்கள்.

கழுத்துப்பட்டை தளர்ந்திருக்க, தலைமுடி கலைந்து நெற்றியில் துவளத் தனித்து வருபவர் சங்கர்லாலைத் தவிர வேறு எவராகவும் இருக்கமுடியாது என்பது மலைச்சரிவில் மறைந்திருந்த மனிதர்களின் கருத்து.

சங்கர்லால், ஷாவின் பங்களாவைக் கண்டுபிடிக்க மலைச்சரிவிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தபோது, அடிக்கடி தொலைநோக்கியால் பார்த்துக் கொண்டே வந்தார். மர்மத்தீவில் பகைவர்களிடம் சிக்கியதைப்போல் இங்கும் சிக்கிக் கொள்ள அவர் விரும்பவில்லை.

அவர், கொஞ்சம் தொலைவில் வந்து கொண்டிருந்த போதே, ஷாவின் பங்களாவும் அதைச் சுற்றியிருந்த மற்ற வீடுகளும் அவர் பார்வையில் பட்டன. அவர் ஒரு பாறையின் மறைவில் பதுங்கியபடி, மிக உயரமான இடத்தில் இருந்தபடி பார்த்துக் கொண்டிருந்தார். அங்கிருந்து ஷாவின் பங்களா மிகத் தெளிவாகத் தெரிந்தது. கொஞ்ச நேரம் அவர் அங்கே ஒளிந்து பார்க்க முடிவு செய்தார்.

சங்கர்லால் தனியாக வருகிறார் என்ற செய்தி கிடைத்ததும், ஷா விரைந்து மலர்ச்சோலையுடன் ஜீப்பில் புறப்பட்டதைப் பார்த்தார்.

ஜீப் வேறு திக்கில் சுற்றிக்கொண்டு போனதை அவர் தொலைநோக்கி கண்டுபிடித்தது. விமானத்தை அடையத்தான் அவர் போகிறார் என்பதைத் தெரிந்து கொண்டார். மாணிக்கம் அங்கு இருக்கும் வரையில் எவரும் விமானத்தைனக் கடத்த முடியாது என்று அவர் எண்ணிவிட்டார். என்றாலும், சங்கர்லால் உடனே பங்களாவை நோக்கிப் போக விரும்பவில்லை. கொஞ்சம் பொறுத்து, மனிதர்கள் நடமாட்டம் குறைந்ததும் ஷா பங்களாவுக்குள் நுழையத் திட்டமிட்டுப் பதுங்கி இருந்தார்.

அப்போதுதான் அவர் எதிர்பாராத அந்த நிகழ்ச்சி நடந்தது.

புதை பொருள் ஆராய்ச்சி நிபுணர் ஒருவர் அந்தப் பகுதியில் புதை பொருள்களைக் கண்டுபிடிக்கக் கால் நடையாகவே பல் நாட்கள் சுற்றிக் கொண்டிருந்தார். அவர் ஒரு கைப்பெட்டியுடன் களைப்போடு வந்து கொண்டிருந்தார். அவரும் அந்தப் பகுதியில் புகை வருவதைக்கண்டதும் வீடுகள் இருக்க வேண்டும், மனிதர்கள் வாழும் இடமாக இருக்கவேண்டும் என்று கைப்பெட்டியுடன், கழுத்துப் பட்டையைக் களைப்பால் தளர்த்திவிட்டுக் கொண்டு கலைந்த தலையுடன் வந்து கொண்டிருந்தார்.

பரந்த வெளியில் மலைச் சரிவுகளுக்கு இடையே அவர் நடந்து வந்து கொண்டிருந்த போது, சட்டென்று பார்ப்பதற்குச் சங்கர்லாலைப் போலவே அவர் இருந்தார்.

தனியாக வந்த அந்த மனிதரைக் கண்டதும், துப்பாக்கி வீரர்களின் தலைவன் சுடும்படி கட்டளை இட்டான்.

படபடவென்று மிஷின் துப்பாக்கிகள் முழங்கின.

புதை பொருள் ஆராய்ச்சியாளர், தன்னை என்ன தாக்கியது என்பதைத் தெரிந்து கொள்வதற்குள், அவர் உடல் பொத்தல் பொத்தலாகியது. அவர் அப்படியே சுருண்டு விழுந்தார். துவண்டு விழுந்தார். இறந்தார். இதைக் கண்டதும் சங்கர்லாலுக்குத் தன் இரத்தமே உறைவதைப் போல் இருந்தது.

'தான் சிக்க வேண்டிய இடத்தில் எவரோ ஒரு மனிதர், குற்றமற்ற மனிதர் சிக்கி இறந்தாரே' என்று துன்பம். மிகக் கொண்டார்,

ஷா, தன்னைக் கொல்ல ஏற்பாடு செய்துவிட்டுத்தான் போயிருக்கிறார் என்பதை உணர்ந்ததும், அவர் கவனம் விமானத்தின் பக்கம் திரும்பியது.

அவர் கொஞ்சமும் அசையாமல் அங்கேயே ஒளிந்திருந்தார்.

கொஞ்ச நேரத்தில் விமானம் புறப்பட்டபோது- 'ஆகா! மாணிக்கம் ஏமாந்துவிட்டான். யோகோ டானியும் ஏமாந்துவிட்டாள்.' என்று அவர் உதடுகள் முணுமுணுத்தன.

மேலே எழும்பிச் சென்ற விமானத்தைத் தொலைநோக்கியால் பார்த்தார்.

விமானம் வட்டமிட்ட போது அதில் மூன்று பேரின் தலைகள் தெரிந்தன.

'ஷாவும் மலர்ச்சோலையும் யோகோடானியும் விமானத்தில் போகிறார்கள். மாணிக்கம் என்ன ஆனான்? ஜீப் திரும்பவில்லையே?' என்ற கேள்வி அவர் மனத்தில் எழுந்தது.

ஜெட்பார்ட் விமானத்தில் ஷா இரகசியக் கவருடன் இந்தியாவை விட்டுத் தப்பிப் போவதைச் சங்கர்லால் கொஞ்சமும் விரும்பவில்லை.

அந்த விமானத்தை எப்படியாவது திருப்பியாக வேண்டும். எப்படி?

அவர் மூளை விரைந்து வேலை செய்தது.

சங்கர்லாலுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்குமோ என்ற ஐயத்துடனும் அச்சத்துடனும் மாணிக்கம் விரைந்து ஓடிய போது-

ஜீப்பின் பக்கத்தில் நின்று கத்தியைத் தொட்டு பார்த்துக்கொண்டிருந்த சர்தார்ஜி, ஒரு மரத்தின் மறைவில் ஒளிந்து கொண்டார். ஓடிவரும் இளைஞனை எதிரில் நின்று தாக்குவதைவிட மறைந்திருந்து தாக்குவது மிகவும் பாதுகாப்பு என்று எண்ணினார் அவர்.

மாணிக்கத்தைக் கொன்று விடும்படி கட்டளையிட்டு விட்டுச் சென்றிருந்தார் ஷா. ஆகையால், சர்தார்ஜி அவர் கட்டளையை நிறைவேற்றியே ஆக வேண்டும்.

விரைந்து வந்து கொண்டிருந்த மாணிக்கம் நேராக ஓடியிருந்தால் சர்தார்ஜியின் வேலை எளிதில் முடிந்திருக்கும். அவன் எந்தப் பக்கம் ஓடி வந்தானோ அந்த பக்கம் தான் சர்தார்ஜி காத்திருந்தார்.

விரைந்து ஓடிவந்து கொண்டிருந்த அவன் கண்கள் மரத்தின் மறைவில் நிறுத்தப்பட்டிருந்த ஜீப்பைப் பார்த்து விட்டன.

# மர்மத்தீவு 17

## சங்கர்லால் துப்பறியும்



ஓடி வந்தவன் ஜீப்பைப் பார்த்ததும் அப்படியே நின்றான். ஆபத்து மிகத் தொலைவில் இல்லை. அது நெருங்கிவிட்டது என்பதை உணர்ந்து அவன் பின்வாங்கி ஒரு மரத்தின் மறைவில் நின்று பார்த்தான்.

ஜீப்பில் எவர் வந்திருப்பார்கள். அவர்கள் விமானத்தை நோக்கிப் போயிருப்பார்களோ என்ற ஐயம் அவனுக்கு ஏற்பட்டது. எவரும் தென்படவில்லை. ஜீப்பின் பக்கம் பார்த்

## தமிழ்வாணன்

தான். எவரும் தென்படவில்லை. கூர்ந்து அவன் ஒவ்வொரு மரத்தின் பக்கமும் பார்வையைச் செலுத்தினான். செலுத்திய போது, சர்தார்ஜியின் சிவப்புத் தலைப்பாகை காட்டிக் கொடுத்துவிட்டது.

சர்தார்ஜி ஒருவர் ஒளிந்திருக்கிறார் என்பதை மாணிக்கம் புரிந்து கொண்டான். வேறு எவராவது இருக்கிறார்களா என்று அவன் கண்கள் கூர்ந்து பார்த்தன. ஜீப்பில் வந்தவர்கள் விமானத்தை நெருங்கிவிட்டார்களா?

அவன் மெல்லப் பின்வாங்கி,மறைந்து மறைந்து ஒரு புதரில் ஒளிந்து கொண்டான். சர்தார்ஜியைச் சுட அவன் விரும்பவில்லை.

எவ்வளவு நேரமானாலும் சரி, இந்தச் சர்தார்ஜியை உயிருடன் பிடிப்பது என்று திட்டம் போட்டான். அவரைச் சுட்டால் அவர் நண்பர்கள் உதவிக்கு ஓடிவரக்கூடும் அல்லவா? ஆகையால், அவன் அப்படியே கொஞ்சம் நேரம் பதுங்கி இருந்தான்.

நேராக ஓடிவந்து கொண்டிருந்த மாணிக்கம் தாக்கப்படவேண்டிய நேரத்தில் ஜீப்பைப் பார்த்து விட்டுப்பின் வாங்கி ஓடி ஒளிந்து கொண்டது சர்தார்ஜிக்கு ஏமாற்றமாக போய்விட்டது. கொஞ்ச நேரம் பொறுத்துச் சர்தார்ஜி மாணிக்கத்தைத் தேடி வெளியில் வந்தார். மாணிக்கத்தின் ஆற்றலை அவர் குறைத்து மதிப்பிட்டுவிட்டார்.

'அந்த இளைஞன் எங்கே ஒளிந்திருந்தாலும் பிடித்து வெளியில் கொண்டு வருவோம்' என்ற துணிச்சலுடன் சர்தார்ஜி இங்கும் அங்கும் தேடியபோது-

திடீரென்று அவர் முதுகில் ஒரு துப்பாக்கி அழுத்தியது.

மாணிக்கம், துப்பாக்கியை அழுத்தியபடி, "கைகளைத் தூக்கு!" என்றான்.

சர்தார்ஜி கைகளைத் தூக்கியபடி நின்றார்.

மாணிக்கம், அவரை ஒருகையால் சோதனைபோட்டுக் கத்தியை எடுத்துத் தொலைவில் எறிந்தான். சர்தார்ஜியிடம் வேறு கொலைக்கருவி எதுவும் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டதும், "ஜீப்பில் வந்தது யார்?" என்று கேட்டான்.

"ஷாவும் மலர்ச்சோலையும்" என்றார் சர்தார்ஜி.

"எங்கே அவர்கள்?" என்று கேட்டான் மாணிக்கம்.

விமானம் இருந்த திக்கில் கையைக் காட்டினார் சர்தார்ஜி,

அப்போதுதான் விமானம் புறப்படும் ஓசையும் கேட்டது.

'எவ்வளவு பெரிய தவறு செய்துவிட்டோம்?' என்று எண்ணியது அவன் மனம்.

இனி, யோகோடானியைக் காப்பாற்ற முடியாது. சங்கர்லால் என்ன ஆனார் என்று பார்க்கலாம் என்று முடிவு செய்தான். உடனே அவன் துப்பாக்கியைத் திருப்பி சர்தார்ஜியின் மண்டையில் ஓங்கி ஒரு போடு போட்டான்.

தலைப்பாகை தாங்கிக் கொண்டதால் அவர் தடுமாறினார். மயக்கமடையவில்லை.

மீண்டும் ஓர் அடியை அவரது நெற்றியின் இடப்பக்கம் போட்டான்.

சர்தார்ஜி அப்படியே அடியற்ற மரம் போல் சாய்ந்தார்! பொத்தென்று அவர் விழுந்த ஓசை கேட்டது.

சங்கர்லாலைச் சுட்டு வீழ்த்திக் கொன்றுவிட்டதாக எண்ணிய ஷாவின் ஆட்கள், வெற்றி ஆரவாரத்துடன் இப்படியும் அப்படியும் ஓடினார்கள்.

இரண்டு பேர் வந்து இறந்த மனிதரின் பிணத்தை ஒரு சவப்பெட்டியில் போட்டுக் கொண்டு போய் பங்களாவுக்கு அப்பால் ஒரு மரத்தடியில் வைத்தார்கள்.

'சங்கர்லால் சுட்டுக் கொல்லப்பட்டார்' என்று எண்ணி எல்லாரும் அவர் பிணத்தை வந்து பார்த்தார்கள்.

ஆரவாரம்! கேளிக்கை.

கொடியவர்கள் அனைவரும் ஆளுக்கு ஒரு மதுப்புட்டியுடன் போதையினுள் மூழ்கத் தொடங்கினார்கள்.

சங்கர்லால், மெல்லத் தன் மறைவிலிருந்து புறப்பட்டார். அவர் மறைந்து, மறைந்து ஒளிந்து ஒளிந்து, ஷாவின் பங்களாவின் பின்புறம் வந்தார். அவரை எவரும் பார்க்கவில்லை.

எல்லாரும் தன்னைப் பார்க்காதபோது, அவர் பங்களாவின் பக்கவாட்டில் இருந்த ஒரு சன்னலைத் திறந்து கொண்டு ஓர் அறைக்குள் குதித்தார்.

நல்ல வேளையாக அந்த அறையில் எவரும் இலர்.

பங்களாவிற்குள் அவர் ஒவ்வோர் அறையாகப் புகுந்து புறப்பட்டார் ஆரவாரமான அந்தப் பங்களாவில் எல்லா வாய்ப்புகளும் இருந்தன. சங்கர்லால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற கேளிக்கையில் எல்லாரும் வெளியே போய் மதுவைப் பருகிக் கொண்டிருந்தார்கள்.

ஷா, சங்கர்லாலின் விமானத்தில் தப்பிவிட்டார் என்ற மகிழ்ச்சி வேறு.

**தொடரும்...**

# டயானா தன் மகனுக்கு எழுதிய

# கடைசிக் கடிதம்

ஜூன் 12, இளவரசர் சாள்ஸ்-இளவரசி டயானா தம்பதியரின் மூத்த மகன் வில்லியம் பிறந்தநாள். கடந்த ஆண்டு பிறந்த நாள் அன்று இளவரசர் வில்லியமிற்கு விலை மதிப்பிட முடியாத பிறந்தநாள் பரிசு ஒன்று கிடைத்திருக்கிறது.

பிறந்த நாளுக்கு முந்திய தினம், இளவரசர் வில்லியமிற்கு ஒரு கடிதம் கொண்டு வந்து கொடுக்கப்பட்டது. அவரது அம்மா இளவரசி டயானா, தன்மகனுக்கு எழுதியது.



டயானா, கார விபத்தில் எதிர்பாராத விதத்தில் இறந்ததிலிருந்து அந்த கடிதம் டயானாவின் நண்பர் ஒருவர் வீட்டில் பத்திரமாக வைக்கப்பட்டிருந்தது.

தன் பெயரை வெளியிடவிரும்பாத அந்த நண்பர் 18வது பிறந்தநாள் பரிசாக அதை வில்லியமுக்கு பத்திரமாக அனுப்பி வைத்தார்.

வில்லியம் தனது 18வது பிறந்த நாள் அன்றுதான் அந்த கடிதத்தை பிரித்துப் பார்க்க வேண்டும் என்பது டயானாவின் விருப்பம்.

"அந்த லெட்டரை பிரித்ததும் இது உண்மையான லெட்டர்தானா என்ற சந்தேகம் எனக்குள் வந்தது. அம்மாவின் கையெழுத்து எனக்கு நன்றாகத் தெரியும். அதைப் பார்த்ததும் என் அம்மாவால் எழுதப்பட்டதுதான் என்று சந்தேகமின்றி தெரிந்துவிட்டது," என்று ஈடன் கல்லூரியில் தன்னுடன் படித்த நெருங்கிய நண்பரிடம் தெரிவித்துள்ளார் வில்லியம்.

"அந்தக் கடிதத்தை மீண்டும் மீண்டும் நான் படிக்க, என் மனதிற்குள் என் அம்மா பேசுவதைக் கேட்க முடிந்தது. எனது சிறுபிள்ளை பருவம், நானும், அம்மாவும் சேர்ந்து இருந்த மகிழ்ச்சியான நேரங்கள், என் மனதில் வெள்ளமாக பெருக்கெடுத்து வந்தன. எனக்கு அழுகை வந்துவிட்டது. என் வாழ்க்கையில் எனக்கு கிடைத்த மிகப்பெரிய பிறந்தநாள் பரிசு இது தான்," என்கிறார் வில்லியம்.

வில்லியம் பிறந்தது ஜூன் 12, 1982 அதற்கு சில வாரங்களுக்குப் பிறகு, டயானா தனது கனவுகளையும், நம்பிக்கையையும் பற்றி தனது முதல் குழந்தைக்கு கடிதம் எழுத ஆரம்பித்தார்.

வித்தியாசமான எண்ணம். வேறு யாராவது இப்படி எழுதியிருப்பார்களா என்பது சந்தேகமே! தனது சந்தை, எர்ல் ஸ்பென்ஸர் தனக்கு கொடுத்த தங்கத்தால் ஆன பேனாவில் எழுத ஆரம்பித்தார் டயானா. தன்மகனைப் பார்த்துக் கொண்டே சொல்லவொண்ணாத வார்த்தைகளில் அடங்காத மகிழ்ச்சி, அன்பு, மற்றும்அவனது எதிர்காலத்தைப் பற்றிய கவலையுடன் கடிதத்தை எழுத ஆரம்பித்தார் டயானா.

'உனது வெற்றிகள், சாதனைகளை நான் மகிழ்ச்சியோடு பாராட்டுவேன். உன் தவறுகளை நான் கண்டிப்பேன். மை டியர் சன், ஆனால் ஒன்று, நீ என்ன செய்தாலும், சரியோ, தப்போ நான் எப்போதும் உன்பக்கம் இருப்பேன் என்பதை நீ தெரிந்து கொள்ளவேண்டும்.'

தொட்டிலில் இப்போது படுத்துக் கொண்டிருக்கும் தன் மகன், இங்கிலாந்து நாட்டு சரித்திரத்தில் முக்கிய இடம் வகிப்பான் என்பதை நன்கு உணர்ந்திருந்த டயானா தொடர்ந்து இப்படி எழுதியுள்ளார்.

'இந்த நாட்டின் பிற்கால அரசர் என்ற முக்கிய இடத்தை நீ பிறப்பிலேயே பெற்றிருக்கிறாய். அரச மகுடம், உனக்கு சுமையாக இல்லாமல், பெரும் ஆசியாக இருக்க வேண்டும் என்பதுதான் எனது நம்பிக்கையும், பிரார்த்தனையும் எப்போதும்!'

'உனக்கு உள்ள ஏராளமான செல்வாக்கு, ஆதிக்கம் பற்றி எப்போதும் கவனமாக இருக்க வேண்டும். ஏழை எளியவரிடம் அன்பாக நடந்து கொள்.. உலகத்தை இன்னும் சிறந்த இடமாக ஆக்குவதற்கு உன் செல்வாக்கை நீ பயன் படுத்தவேண்டும்,' என்று எழுதியிருக்கிறார் டயானா.

பத்து வருடங்களுக்கு மேல் அந்த கடிதத்தை அப்படியே வைத்திருந்த டயானா, சார்ள்ஸிடமிருந்து விவாகரத்து பெற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டபோது, அந்த கசப்பான உண்மையை, தன் மகனுக்கு விளக்க வேண்டும் என்று நினைத்திருக்கிறார்.

விவாகரத்து முடிந்த பிறகு, கென்சிங்டன் அரண்மனை லொக்கரில் பத்திரமாக வைத்திருந்த அந்த கடிதத்தை எடுத்து வில்லியமிற்கு, தன் திருமணம் ஏன் எப்படி முறிந்தது என்று தன் வார்த்தைகளில் விளக்க முடிவு செய்தார் டயானா என்று அவருடைய நெருங்கிய நண்பர் கூறுகிறார். ஆனால், எந்த ஒரு இடத்திலும் சார்ள்ஸ் மீது எந்த பழியையும் சுமத்த வில்லை.

'நானும், உங்கள் அப்பா சார்ள்ஸிடம் உண்மையாக ஒருவரை ஒருவர் காதலித்தோம். நீயும் உன் சகோதரன் ஹரியும், அந்த நெருக்கமான அன்பில் பிறந்தவர்கள் தான்.'

விவாகரத்திற்கு முன்பும், விவாகரத்துச் சமயத்திலும் தான் பட்ட மனவருத்தம், வலி ஆகியவற்றை மிகவும் குறைத்தே எழுதியுள்ளார் டயானா.

'சில சமயம் காதல் நீடித்து நிற்பதில்லை. அந்த விஷயத்தில் எனக்கு அதிர்ஷ்டம் இல்லை; என்றாலும் இரண்டு அழகான மகன்கள் என் காதலால் கிடைத்தது உண்மை. உங்கள் இருவரையும் நான் அபரிமிதமாக நேசிக்கிறேன். கடந்த சில ஆண்டுகளில் மன முறிவினால் ஏற்பட்ட



கஷ்டங்களை, இன்னும் ஆயிரம் முறை அதிகமாகவும் நான் தாங்கிக் கொள்வேன்- உங்கள் இருவருக்காக!' என்றும் எழுதியுள்ளார்.

அரண்மனை ஒற்றர்களால் தான் எப்போதும் கண்காணிக்கப்படுவதை உணர்ந்த டயானா, இந்த கடிதம் திருடப்பட்டு விடும் என்று பயந்து, தன் நம்பிக்கைக்குரிய நண்பரிடம் கொடுத்து பத்திரப்படுத்தினார்.

'இந்த கடிதத்தை, வில்லியமின் 18 வது பிறந்தநாள் வரை பத்திரமாக பார்த்துக் கொள்ளுங்கள். டைவர்ஸ் ஆனதிலிருந்து யாரையும் என்னால் நம்பமுடியவில்லை. என்னால் நம்பமுடியவில்லை. எனக்கு அவதூறு ஏற்படுத்த சார்லஸின் ஆட்கள் தயங்க மாட்டார்கள், என்று தன் நண்பரிடம் கூறி யுள்ளார் டயானா.

கென்சிங்டன் அரண்மனை முத்திரை பதிக்கப்பட்ட பேப்பரில் எழுதப்பட்ட இந்த கடிதத்தை, கவரில் போட்டு கவரை ஒட்டாமலே தன் நண்பரிடம் கொடுத்தார்.

மீண்டும் அந்த லெட்டரில் இன்னும் கொஞ்சம் எழுதவேண்டும் என்று டயானா நினைத்திருக்கிறார். ஆனால், துரதிருஷ்டவசமாக தனது 36வது வயதில் டயானா பாரீஸ் நகரில் நடந்த மோசமான கார் விபத்தில் உயிர் இழந்தார்.

டயானா, கடிதத்தை கொடுத்த நண்பரை, சிறுபிள்ளை முதல் வில்லியமிற்கு தெரியும். அவர்தான் விலை மதிப்பில்லாத அந்த கடிதத்தை, பொக்கிஷத்தை வில்லியமுக்கு அனுப்பியவர். ■

# எஸ்.டி.எஸ். தொடர் 65

## உறுப்பினர்கள் இல்லாத அரசியல் கட்சி

இலங்கைத் தமிழரசுக் கட்சி தமிழுணர்ச்சியால் உந்தப் பட்டவர்களின் ஓர் அமைப்பாகவே இருந்தது என்று கூறலாமே தவிர, அவ் வமைப்பினை ஓர் அரசியல் கட்சி என்று கூறமுடியாது. இக்கூற்று பலருடைய வாதப் பிரதிவாதங்க ளைக் கிளப்பி விடலாம் என்பது தெரியும். இருப்பினும் ஓர் அரசியல் கட்சி என்று குறிப்பிடுவதற்கேற்ற அம்சங்கள் எதுவும் அவ்வமைப்பில் இருந்த ில்லை.

இந்நாட்டில் பதிவு செய்யப்பட்ட ஓர் அரசியல் கட்சி என்ற கோதாவில் பல பொதுத் தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றிபெற்றது என்பது உண்மைதான். ஆனால் அக்கட்சியின் உறுப்புரிமை பெற்ற வர்கள் என்ற எண்ணிக்கை எதுவுமே கிடையாது. உறுப்பினர் விண்ணப்பப்படி வங்கள் இருந்தன. காலத்துக்குக் காலம் செலுத்தப்படவேண்டிய உறுப்பினர்களுக்



அறப்போராளி அரியநாயகம்

குரிய சந்தாத் தொகையும் நிர்ணயிக்கப்பட் டிருந்தது. பொதுத் தேர்தல்களில் வேட் பாளர்களாக முன்வருவோரிடம் நிச்சயமாக விண்ணப்பப் படிவங்கள் ஒப்பமிடப்பட்டு சேர்வுப் பணம் பெறப்பட்டு வேட்பாளர்க ளாக அனுமதிக்கப்பட்டனர்.

கட்சியின் ஆரம்பகாலத்தில் உறுப்பினர் கள் சேர்க்கப்பட்டது என்னவோ உண்மை தான். ஆனால் காலஞ் செல்லச் செல்ல அப்பழக்கம் மறக்கப்பட்டதொன்றாகப் போய்விட்டது.

வருடாந்த தேசிய மாநாடுகள் வெகு விமரிசையாக நடைபெற்று வந்தன. ஆட்சிக் குழு உறுப்பினர் தெரிவு போன்ற முறை களும் அனுசரிக்கப்பட்டன. இருந்தபோதி லும் ஆட்சிக் குழுவில் இடம்பெறும் எல் லோருமே அக்கட்சியின் உறுப்பினர் என்று தங்களை நிரூபிப்பதற்கு முடியாதவர்களாக இருந்து வந்தனர்.

தேசிய மாநாடு நடைபெறுவதானால், அம்மாநாட்டில் கலந்து கொள்பவர்கள் அனைவரும், எந்த நகரம், எந்தக் கிராமம், எந்த மாவட்டம் என்பதற்கான கட்சிக் கிளையின் தேர்வினை அடிப்படையாகக் கொண்ட கட்சிக் கிளையினால், மாநாட்டுப் பிரதிநிதி என்ற அந்தஸ்துடன் தான் மாநாடு நடைபெறும் இடத்துக்கு வந்து சேர வேண்டும். அப்பேர்ப்பட்டவருக்குத் தான் ஆட்சிக் குழுவில் இடம் பெறுவோ ரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இருக்க வேண்டும்.

மட்டக்களப்புப் பகுதியைப் பொறுத்த மட்டில் கொழும்பிலிருந்தோ யாழ்ப்பாணத் திலிருந்தோ திரு.இராசதுரை அவர்களுக்கு ஒரு தகவல் அனுப்பப்படும். குறிப்பிட்ட திகதிகளில் மட்டக்களப்புக்கு வருகைதர விருக்கும் தலைவர்களின் பட்டியல் அனுப்பி வைக்கப்படும். உடனடியாக திரு.இராச துரை கட்சிக்காக உழைக்கும் தொண்டர் களை அணுகி விவரத்தைக் கூறுவார். ஆங்காங்கே கூட்டங்கள் ஏற்பாடு செய்யப் படும். தங்களைத் தமிழரசுக் கட்சிக்காரன் என்று கூறிக்கொள்வோர் அனைவருடைய ஒத்துழைப்புடன் பொதுக்கூட்டங்கள் நடை பெறும். தேசிய மாநாடு நடைபெறுமானால், அதைப் பற்றி அறிந்த-வசதி படைத்த அனைவரும் மாநாடு நடைபெறும் இடத் துக்கு ஒன்றாகவோ தனித்தனியாகவோ செல்வார்கள்.

மட்டக்களப்புப் பிராந்தியத்துக்கான அமைப்புக்குழுச் செயலாளராக பல ஆண்டுகள் பணியாற்றியமையினால் இக் கருத்துக்களை முன்வைக்கத் துணிந்தேன். கட்சியை ஜனநாயக ரீதியில் அமைக்க வேண்டும் என்று பல தடவைகள் எம்போன் றவர்களால் வேண்டுகோள் விடுத்தும் அது கவனிப்பாரற்றுப் போய்விட்டது.

இக்காரணத்தினால்தான் தமிழரசுக் கட்சி தமிழுணர்ச்சியால் உந்தப்பட்டோருக் கான அமைப்பு என்று கூறத் துணிந்தேன்.

மட்டக்களப்புப் பிராந்தியத்துக்கு அமைப்புச் செயலாளராக நான் பணிபுரிந்த காலம்-1958ம் ஆண்டுவரை-அப்பிராந்தியத் தில் ஒழுங்கான முறையில் கட்சி உறுப்பினர் களின் பதிவேடு கூடக்கிடையாது. இதே கால கட்டத்தில் கொழும்பு மாநகரத்தில் அமைப்புச் செயலாளராகவும் கட்சி அலுவலகப் பொறுப்பாளராகவும் அல்ஹஜ் மசூர் மௌலானா அவர்கள் கடமை பார்த்தார். கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தையில் இருந்த சுதந்திரன் அலு வலகத்துடன் கொழும்பு நகர அலுவலகம் செயற்பட்டது.

கொழும்பு அலுவலகத்தில் கட்சி உறுப் பினர்கள் பதிவேடு கிரமமாகப் பதியப் பட்டுப் பேணப்பட்டு வந்தது. யாழ்ப்பாணத் தில் தலைமை நிலையத்தின் பொறுப்பாள ராக அப்போது திரு.சண்முகநாதன் (மணி) என்பவர் கடமையாற்றினார். அங்கும் உறுப்பினர் பதிவேடு பராமரிக்கப்பட்டு வந்தது. இருப்பினும் போதுவாக கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் பதியப்பட்ட தற்கான சான்றுகள் இல்லை.

கட்சியின் பொதுக்குழு கூடுகின்ற காலங்களில் கட்சி உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டு, ஒவ்வொரு அங்கத்தவருக் கும் அடையாள அட்டையும் இலக்கமும் கொடுக்கப்படவேண்டும் என்று கோரிக்கை எழுப்பி வந்தேன். ஆனால் அது நிறைவேற் றப்படவே இல்லை.

திரு.இராசமாணிக்கம் அவர்கள் கட்சி யின் தலைவராகப் பொறுப்பேற்ற போது உறுப்பினர் பதிவு பற்றியும் கட்சியின் புனரமைப்பு பற்றியும் கூறினேன். "இதெல் லாம் தேவையில்லாதது பத்மன்; கட்சியுடன் தொடர்புடைய எந்த நடவடிக்கைக்கும் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒத் துழைப்புக் கொடுக்கின்றார்களே! ஆகவே அத்தனை பேரையுமே கட்சி உறுப்பினர் கள்தான் என்று கணித்துவிடவேண்டியது தானே!" என்று தான் பதில் கூறுவார்.

1958ம் ஆண்டு முதல் 1961 வரை மூன்று வருடங்கள் நான் தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதி யாக இருக்க நேர்ந்தது. அக்கால கட்டத்தில் சென்னை இராயபுரத்தில் இருந்த திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைப் பணியகத் துக்குச் சென்று கட்சியின் அமைப்பு முறை களைப் படித்தேன். கட்சித் தொண்டர்களின் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய மூன்றும் எவ்வாறு கடைப்பிடிக்கப்பட்டு வந்தன என்பதனையும் அலசி ஆராய்ந்தறி யும் சந்தர்ப்பமும் கிடைத்தது. 1961ல் இலங்கைத் திரும்பியதும் தமிழரசுக் கட்சியை யும் சீரான ஒழுங்குமுறைக்குக் கொண்டு வர எண்ணினேன்.

தலைமன்னார் மூலம் கப்பலில் வந் திறங்கியதும் மட்டக்களப்புக்குச் செல்லாமல் நேராக யாழ்ப்பாணம் செல்ல ரயிலேறி னேன். கட்சியின் முக்கியமான செயற் குழுக் கூட்டம் அங்கு நடைபெற்றது. இக் கூட்டத்தில் தான் வடக்குக் கிழக்கில் அரச அலுவலகங்களின் முன்புறமிருந்து மறியல் செய்யும் சத்தியாக்கிரகப் போராட்டம் தொடங்கப் படுவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதே கூட்டத்திலும் தி.மு.க போராட் டங்கள் எவ்வாறு நடைபெறுகின்றன என் பதை விளக்கிக்கூறி, சத்தியாக்கிரகப் போராட்டத்திலீடுபடுவதற்கு முன்னர் கட்சி யைப் புனரமைக்க வேண்டும் என்று வற் புறுத்தினேன். ஆனால் "அத்தகைய புனர மைப்பு வேலைகளிலெல்லாம் இப்பொழுது காலத்தைச் செலவிட முடியாது" என்று கூறிவிட்டனர்.

இத்தகைய எனது கோரிக்கைக்கு திரு மலையைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு.சிவ குரு அவர்கள் பூரண ஆதரவினை அளித்து வந்தார். அவரும் அடிக்கடி தமிழகம் சென்று தி.மு.க. தலைவர்களுடன் உறவாடி வருபவர்.

தி.மு.க.வில் சத்தியாக் கிரகத்துக்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டால், முதலில் போராட்டத்தில் யார் யார் ஈடுபட வேண் டும்; அவர்கள் கைது செய்யப்பட்டால், அதனைத் தொடர்ந்து போராட்டத்தில் யார் யார் ஈடுபடவேண்டும் என்று பெயர்ப் பட்டியல் அறிவிக்கப்பட்டு, ஒழுங்கு முறை யாக வகுக்கப்பட்டிருக்கும்.

இதனை எடுத்துக் காட்டாகக் குறிப் பிட்டு, "சத்தியாக் கிரகத்தில் முதலில் கலந்து கொள்ளும் அணியினர் தாக்கப் பட்டு, அத்தனை பேரையும் கைது செய் தால், அடுத்து என்ன செய்வது?" என்று கேட்டேன். கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய திரு.இராசமாணிக்கம் அவர்களே இதற்குப் பதலளித்தார்.

"அவ்வாறு அடிபட்டால், அதுவும் எமக்கு ஒரு வெற்றிதானே!" என்று பதிலளித்தார். அத்துடன் "எமது போராட்டம் ஒரு வெகு ஜனப்போராட்டம். தனித்தனிக் குழுக்களாக இல்லாமல் எல்லோரும் ஒன்றாகக் கலந்து கொண்டு, எல்லோருமே அதன்பலனை அனுபவிக்க வேண்டியதுதான்!" என்று மேலும் தெரிவித் தார்.

உண்மையில் திரு.இராசமாணிக்கம் அவர்கள் கூறியது போல், தமிழரசுக் கட்சி யின் காலத்தில் பல அறப்போராட்டங்களை நடத்தியிருக்கிறது; அவற்றிலெல்லாம் ஓர ளவு வெற்றியும் கண்டுதான் இருக்கிறது என்பதனை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சியை அமைப்பதற்குரிய பொறுப்பினை திரு. இராசதுரை அவர்கள் ஏற்றுக் கொண்ட



ஆரையூர் அமரன்

காலத்தில் அவருக்கு உறுதுணையாக விருந்து உதவிய பலரைக் கடந்த முரசில் வெளியிட்டிருந்தேன். இதில் தங்கள் பெயர் கள் இடம் பெறவில்லையே என்று பல அன்பர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆத்திரப்பட்டார்கள். எல்லோரு டைய பெயர்களையும் உடனடியாக நினைவுக்குக் கொண்டு வருவது கொஞ்சம் கடினமானது தான். ஏனெனில் கட்சியின் உறுப்பினர் பட்டியல் எவ்வாறு கடைப்பிடிக் கப்படவில்லையோ, அதே போன்று என் னிடமும் இதற்கான பட்டியல் எதுவும் கிடையாது. நினைவில் வரும்போது ஒவ் வொருவராகச் சேர்த்துக் கொள்ளலாம்.

தவறவிடும் சம்பவங்களையும் பெயர்க ளையும் அன்பர்கள் தவறாமல் எம்முடன் தொடர்பு கொண்டு சுட்டிக்காட்ட வேண்டு கிறேன்.

செனட்டராகவிருந்த திரு.மு.மாணிக் கம் (அப்போது அரசபணியில் இருந்தவர்) அவர் தனது குடும்பத்தாருடன் தமிழரசுக் கட்சியின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்தார்.

ஆரையம்பதி கிராம சங்கத் தலைவ ராக விளங்கிய திரு.அமரசிங்கம் (ஆரையூர் அமரன்) அதே இடத்தைச் சேர்ந்த ஆசிரியர் திரு.ஆறுமுகம் (நவம்), மாஸ்டர் சிவலிங்கம், திரு.அல்போன்ஸ்மேரி, காலஞ்சென்ற திரு.ஆனந்தராஜா, திரு.இ.எல்.தம்பிமுத்து, ஜனாப் இப்ராகீம் போன்றாரெல்லாம் முன்வரிசையில் இடம் பிடிக்க வேண்டிய வர்களே.

மட்டக்களப்பில் ஏற்கனவே தொடங்கப் பட்டு பல முற்போக்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு பல சாதனைகளைப் புரிந்த பகுத்தறிவு இயக்கம் நல்ல பல இளைஞர் களை உள்ளடக்கியிருந்தது. தமிழ் நாட்டில் மிக வேகமாகப் பரவிய திராவிட இயக்கத் தையும்-குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழக முன்னோடிகளையும் தங்கள் இலட்சிய வழிகாட்டிகளாகக் கருதிய இளைஞர்கள் மட்டக்களப்புப் பிரதேசத்தில் பல முற்போக் கான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடு பட்டிருந்தனர். இருப்பினும் திராவிட இயக் கக் கோட்பாடுகளில் முக்கியமாக விளங்கிய நாஸ்தீகக் கொள்கை மட்டக்களப்பில் வாழ்ந்த பல பெரியோர்களின் வசை மொழிக ளுக்கு ஆளாக நேர்ந்தது. இதனால் ஏற்பட்ட எதிர்ப்புகளையும் முறியடித்துக் கொண்டு பகுத்தறிவு இயக்கம் இளைஞர்கள் மத்தியில் தனிச் செல்வாக்குப் பெற்று வளர்ந்தது.

சாதிப் பாகுபாடுகள் யாழ்ப்பாணத் தைப்போல் மிக மோசமானதாக இல்லா விட்டாலும்கூட, மட்டக்களப்பில் ஒரு சிறிதள வாவது இருந்தது என்பது மறுக்கமுடியாத உண்மை. இந்தச் சாதிப் பாகுபாடுகளும் பகுத்தறிவு இயக்கத்தின் வளர்ச்சியைக்கண்டு மட்டக்களப்பிலிருந்து வேரோடு களையப் பட்டு விட்டது என்பதை எவரும் மறக்க முடியாது.

1950ம் ஆண்டுகளின் முற்பகுதில் திரு.எஸ்.டி சிவநாயகம், திரு இராஜதுரை ஆகியோரின் துணையுடன் தொடங்கப்பட்ட தமிழரசுக் கட்சியில் பகுத்தறிவு இயக்கம் இணைந்து விட்டமையினால் கட்சிக் கொள்கை கனவேகமாகப் பரவியது.

கல்லூரிகளின் உயர் வகுப்புக்களில் படித்த மாணவர்கள் மத்தியில் தமிழரசுக் கட்சியின் கொள்கைகள் வேரூன்ற ஆரம்பித் தமை ஒரு நல்ல வாய்ப்பாகப் போய்விட்டது. திராவிட முன்னேற்றக்கழக முன்னணித்

கா. பத்மநாதன்

தலைவர்களான அறிஞர் அண்ணா, கலை ஞர் கருணாநிதி போன்றோரின் அழகு தமிழ் நூல்கள் மாணவர் சமுதாயத்தின் தமிழாற்றலுக்கு உரமூட்டி வளர்த்தன. எனவே தமிழ் மாணவர்களெல்லாம் சிறந்த பேச்சாளர்களாக உருவானார்கள். தமிழர சுக் கட்சியினுடைய வளர்ச்சிக்கு இந்த மாணவர்களின் துணை பெரும் பங்கினை அளித்தது.

கட்சியின் முன்னோடித் தலைவர்களுள் ஒருவராக அன்று விளங்கிய காலஞ் சென்ற திரு.வைத்தீஸ்வரன் அவர்கள் கட்சியின் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றும் போதெல்லாம், "திராவிடக் குஞ்சுகளின் பேருதவி தமிழரசுக் கட்சியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கிவருகிறது." என்று எப்போதும் குறிப்பிடுவார். **(வளரும்)**

# வாரம் ஒரு வார்த்தை!

## 30. ஆடுகளின் அறிவுரை

ராமாயணத்துலே கடைசியிலே ராம ருக்குப் பட்டாபிஷேகம் நடந்தது இல்லே? அதுக்குப்பிறகு நடந்த ஒரு நிகழ்ச்சி இது!

ராமர் ஆட்சி பண்ணிக்கிட்டிருக்கார்.

அப்போ கைகேயி அம்மா அவரை ஒருநாள் பார்த்து கேட்டாங்களாம்–

"பிறவிப் பெருங்கடலிலே வீழ்ந்து நான் தவிச்சிக்கிட்டிருக்கேன். உன்னுடைய உப தேச மொழிகளைக் கேட்டுத்தான் நான் கரைசேரணும்!" அப்படின்னாங்களாம்.

அதுக்கு ராமர்,

"அம்மா! கவலைப்படாதீங்க! நாளைக்கு லட்சுமணன் உங்களை அழைச்சிக்கிட்டுப் போய் உபதேசம் பண்ணி வைப்பான்!" அப் படின்னார்.

"தம்பி! நீ நாளைக்குக் காலையிலே ஒரு காரியம் செய். நம்ம கைகேயி அன் னையைப் பல்லக்குலே ஏற்றி சரயு நதிக் கரைக்கு அழைச்சிக்கிட்டுப் போ! அங்கே ஆட்டு மந்தைகள் இருக்கும். ஒரு முகூர்த்த நேரம் நம்ம அம்மா, அந்த ஆடுகள் போடுற சத்தத்தைக் கேக்கற மாதிரி செய்!" அப் படின்னார்.

சரி-ன்னு சொல்லிட்டார் லட்சுமணன்.

அடுத்த நாள் காலையிலே-அம்மாவை ஒரு பல்லக்கிலே ஏற்றினார். சரயு நதிக் கரைக்கு அழைச்சிக்கிட்டுப் போனார்.

அங்கே ஒரு ஆட்டு மந்தைக்குப் பக்கத்திலே பல்லக்கை இறக்கினார். அம்மா இறங்கி வெளியே வந்தாங்க.

"அம்மா! இந்த ஆடுகள் ஒலிக்கிற ஒலியை தாங்கள் ஒரு முகூர்த்த நேரம் கேட்கணும்-ன்னு ராமர் சொன்னார்!" அப்படின்னார்.

கைகேயி அந்த ஆடுகள் போடுகிற சத்தத்தை கூர்ந்து கவனிக்க ஆரம்பிச் சாங்க. அதெல்லாம் மே! மே!-ன்னு கத்திக் கிட்டிருந்தது.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் கைகேயி முகத்திலே ஒரு ஒளி தோன் றிச்சி! அஞ்ஞானம் நீங்கி ஞானம் வந்தது மாதிரி ஆயிடுச்சு!

உடனே லட்சுமணனைப் பார்த்து, "குழந்தாய்! மெய்ஞானத்தை அடையற துக்கு ராமன் எனக்கு உதவி செஞ்சுட் டான். இனிமே நாம அரண்மனைக்குத் திரும்பலாம்!" அப்படின்னாங்க.

மறுபடியும் பல்லக்குலே ஏறி அர ண்மனைக்கு வந்து சேர்ந்தாங்க.

வந்ததும் ராமர் அவங்க ளைப் பார்த்து, "அம்மா! அந்த ஆடுகளின் ஒலி யிலிருந்து நீங்க என்ன கத்துக்கிட்டீங்க?"ன்னு கேட்டார்.

அதுக்கு அவங்க பதில் சொன்னாங்க.

"நான் ஆடுகளின் ஒலியைக் கூர்ந்து கவனிச்சேன்! அதெல்லாம் மே! மே!-ன்னு கத்திக்கிட்டிருந்தது!



தென்கச்சி – கோ. சுவாமிநாதன்

"மே!" ன்னா "எனது"ன்னு அர்த்தம்! 'நாங்களெல்லாம் 'எனது' 'எனது'-ன்னு சொன்னதுனாலேதான் இப்படி ஆடுகளாப் பிறந்து தவிக்கிறோம்'ன்னு அந்த ஆடுகள் போதிச்சது மாதிரி நான் உணர்ந்தேன்!

இனிமே 'எனது'ன்னு எதையும் சொல்லமாட்டேன்!" அப்படின்னாங்க.

ராமர் சொன்னார்:

"அம்மா! 'நான்' என்கிற அகங்கார மும் 'எனது' என்கிற மமகாரமும்தான் நம்மைப் படுகுழியில் தள்ளுகின்றன.

தங்களுக்கு ஞானம் வந்து விட்டது.

நான் தங்களுடைய மகன் என்கிறது னாலே உபதேசம் செய்யற உரிமை எனக் குக் கிடையாது. அதனாலேதான் இப்படி செய்தேன்!"-அப்படின்னார் ராமர்.

பார்த்தீர்களா? ஆடுகள் போடுற சத் தத்துலேயிருந்துகூட நாம எவ்வளவ அர்த்தத்தைப் புரிஞ்சிக்க முடியுது பாருங்க!

சிலபேர் குழந்தைகள் போடற சத்தத்து லேயிருந்து கூட சில அர்த்தத்தைப் புரிஞ் சிக்கறது உண்டு.

ஒருத்தர் தன்னுடைய நண்பர் வீட்டுக் குப் போனார். அங்கே ஒரு சின்னக் குழந்தை சத்தம் போட்டு கத்திக்கிட்டி ருந்தது. உடனே இவர் அதைக் கூர்ந்து கவனிச்சார்-கைகேயி மாதிரி!

அப்புறம் சொன்னார்: "சார்! உங்க பையன் வருங்காலத்துலே சண்டை போடுற ஒரு பெரிய வீரனா ஆயிடுவான்-ங்கற தை இப்பவே என்னால புரிஞ்சிக்க முடியுது! அப்படின்னார்.

"எப்படி சொல்றீங்க?"ன்னு கேட்டார் அவர்.

"கூர்ந்து கவனிங்க சார். எப்படி கத்த றான்னு.. வருங்காலத்துலே அவனுக்கு என்ன தேவைங்கறதை இப்பவே சொல் றான். வாள்! வாள்!-ன்ன கத்தறான் பாருங்க!" அப்படின்னார் இவர்.

**(வார்த்தைகள் தொடரும்)**

# ஸ்போர்ட்ஸ்

## முதல் டெஸ்டில் இலங்கை வெற்றி



இலங்கை-இந்தியாவுக்கிடையே காலியில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில், இலங்கை 10 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது. இதன் மூலம் 15 வருடங்களுக்குப் பின்னர் இந்திய அணியைத் தனது சொந்த மண்ணில் வென்றுள்ளது இலங்கை.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா தனது முதல் இன்னிங்ஸில் 187 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. சடகோபன் ரமேஷ் மட்டும் அதிகபட்சமாக 42 ஓட்டங்களைக் குவித்தார். டில்கார பெர்னாண்டோ 42 ஓட்டங்கள் கொடுத்து 5 இந்திய விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை முதல் இன்னிங்ஸில் 362 ஓட்டங்களைப் பெற்றது. ஜயசூரிய சங்கக்கார இருவரும் சதமடித்தனர். ஸ்ரீநாத் 114 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.



இலங்கையை விட 180 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய இந்தியா, மளமளவென்று விக்கெட்டுக்களை இழந்து, இன்னிங்ஸ் தோல்வியை எதிர்நோக்கியது.

ஒரு கட்டத்தில் 8 விக்கெட்டுக்களை இழந்து 120 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இருந்த இந்திய அணி ராகுல் ட்ராவிட், வெங்கடேஷ் பிரசாத் உதவியால் இன்னிங்ஸ் தோல்வியில் இருந்து மீண்டது. இலங்கை அணியின் ஓட்ட எண்ணிக்கையை விட 5 ஓட்டங்களை மேலதிகமாகப் பெற்று ஆட்டமிழந்தது இந்திய அணி. ட்ராவிட் ஆட்டமிழக்காமல் 61 ஓட்டங்களையும் பிரசாத் 20 ஓட்டங்களையும் எடுத்தனர். முரளீதரன் 49 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

வெற்றி பெற 6 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நிலையில் இரண்டாவது இன்னிங்ஸில் விளையாடிய இலங்கை, விக்கெட் இழப்பின்றி இலக்கை எட்டி, 10 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

சனத் ஜயசூரிய ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார். இலங்கை-இந்திய அணிகளுக்கிடையிலான 2வது டெஸ்ட் போட்டி ஆகஸ்ட் 22 முதல் 26 வரை கண்டி அஸ்கிரிய மைதானத்தில் நடைபெறுகிறது.

இப்போட்டியில் விளையாடிய இந்திய வேகப்பந்து வீச்சாளர் காயம் காரணமாக அடுத்து நடை பெறவிருக்கும் 2 டெஸ்ட் போட்டிகளிலும் விளையாட மாட்டார். இலங்கை அணியுடன் நடந்த முதல் டெஸ்ட் போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் 3 பந்துகளுக்கு மட்டுமே முகம் கொடுத்த ஸ்ரீநாத், காயம் காரணமாகத் தொடர்ந்து விளையாட வில்லை. கையில் ஏற்பட்ட தசைப்பிடிப்புக்கு சிகிச்சை பெறுவதற்காக நாடு திரும்பியுள்ளார் ஸ்ரீநாத்.

இதேவேளை காலி டெஸ்டில் இலங்கையின் சகலதுறை ஆட்டக்காரரான சுரேஷ் பெரேரா பந்து வீச்சில் சந்தேகம் இருப்பதாக அம்பயர் ஸ்டீவ் பக்னரால் சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலுக்கு முறையிடப்பட்டுள்ளார்.

## தென்னாபிரிக்கா செல்லும் டெண்டுல்கர்

கணுக்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக இலங்கைக்கு வந்த இந்திய அணியில் இடம்பெறாதிருக்கும் சச்சின் டெண்டுல்கர் மேலதிக சிகிச்சைக்காக தென்னாபிரிக்காவுக்குச் செல்கிறார்.

வலது கணுக்காலில் ஏற்பட்ட காயத்திற்குச் சிகிச்சை பெறுவதற்காக தென்னாபிரிக்காவில் உள்ள பிரபல நிபுணரான மார்க் பெர்குஸனை அணுகவுள்ளார் டெண்டுல்கர். இந்த மருத்துவச் செலவுகளை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையே ஏற்கிறது.

ஆகஸ்ட் 23ம் திகதி தென்னாபிரிக்கா புறப்படும் டெண்டுல்கருக்கு 24ம் திகதியில் இருந்து சிகிச்சை அளிக்கப்படவுள்ளது.

இந்தியாவில் இருந்து டெண்டுல்கர் போன்று வேறு சில கிரிக்கெட் வீரர்களும் வெளிநாடுகளுக்குச் சென்று சிகிச்சை பெறுகின்றனர்.

வி.வி.எஸ்.லக்ஸ்மன் அவுஸ்திரேலியாவுக்கும் அஷிஷ் நேஹ்ரா இலண்டனுக்கும் சென்றுள்ளார்கள். இதையடுத்து டெண்டுல்கர் தென்னாபிரிக்கா செல்கிறார்.

இதே வேளை 10 மாத ஓய்வுக்குப் பின் அணிக்குத் திரும்பியுள்ளார் சுழற்பந்து வீச்சாளர் அணில் கும்ப்ளே. இவர் அடுத்த மாதம் இடம்பெறும் தென்னாபிரிக்க சுற்றுப்பயணத்தில் இந்திய அணியில் இடம்பெறுவார் என்று தெரிகிறது.

## முன்னணி வீரர்கள் நீக்கம்

நியூஸிலாந்து அணியுடனான டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டித் தொடர்களில் விளையாடவுள்ள பாகிஸ்தான் அணியிலிருந்து அனுபவம் வாய்ந்த முன்னணி வீரர்களான வாஸிம் அக்ரம், மொய்ன் கான், முஷ்டாக் அஹமட் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

நியூஸிலாந்துடனான போட்டித் தொடரில் விளையாடும் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் பட்டியல் அண்மையில் வெளியானது. அதில் இந்த வீரர்களின் பெயர்கள் இடம்பெறவில்லை.

இந்தப் பட்டியலில் தனது பெயர் இடம்பெறாதது தனக்கு ஏமாற்றத்தையும் கவலையையும் அளிப்பதாக வாஸிம் அக்ரம் தெரிவித்துள்ளார். எனினும் மறுபடி அணியில் இடம்பிடிக்க முயற்சி எடுப்பதைத் தொடர்வதாகவும் அக்ரம் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஐ.சி.சி. அம்பயர்கள் குழு

திறமை அடிப்படையில் மிகச் சிறந்த அம்பயர்கள் குழு ஒன்றை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) தேர்வு செய்துள்ளது. ஏப்ரல் மாதம் முதல் சர்வதேச அளவில் நடைபெறும் எந்தவொரு டெஸ்ட் போட்டியிலும் ஐ.சி.சி. குழு அங்கீகரித்த அம்பயர்கள் மட்டும் தான் பங்கேற்க முடியும்.

சம்பந்தப்பட்ட நாட்டைச் சேர்ந்த அம்பயர்கள் இனிப் பங்கேற்ற முடியாது. ஒருநாள் போட்டிகளில் இந்த விதி கொஞ்சம் தளர்த்தப்பட்டிருக்கிறது.

ஒருநாள் போட்டிகளில் ஒரு அம்பயர் உள்ளூர்க்காரராகவும், மற்றொரு அம்பயர் ஐ.சி.சியால் அங்கீகரிக்கப்பட்ட அம்பயராகவும் இருக்க வேண்டும் என்றும் ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

"அந்த நாட்டு அம்பயரின் பிழையான தீர்ப்புக்களால் தான் தோற்றோம்" என்று இனி எந்த அணியும் சாக்குச் சொல்ல முடியாது.

# இலக்கிய நயம்

## மாறியதோ நெஞ்சம்?

வரதன் காத்திருந்தான்.

இன்றைக்கு எப்படியாவது அவளை மடக்கிவிடவேண்டும் என்ற ஆவேசத்திலிருந்தனான்.

எவ்வளவு நேரமானாலும் அவளை நின்று பார்த்துவிட்டே போவது என்று உறுதியுடன் காத்திருந்தான்.

'இன்றைக்கும் அவள் வராமலிருந்துவிட்டால்...' என்கிற நினைப்பும் ஒரு மூலையில் தோன்றி உறுத்தியது.

கால்கள் கடுத்தன.

சற்றுத் தூரத்திலிருந்த பனங்கொட்டு ஒன்றைக் கண்டு சென்று அதன்மீது அமர்ந்து கொண்டான்.

தூரத்தே அவர்கள் தெரிந்தார்கள்.

வகுப்பு முடிந்து அந்தப் புறாக்கூட்டம் வந்து கொண்டிருந்தது.

அருகே நெருங்க-

அவர்களின் 'கிலுமுலு' பேச்சுக்களும் புறாக்களின் ஓசைகளையே ஒத்திருந்தன.

அழகுப் பறவைகளின் வருகை.

வரதன் குற்றியை விட்டு எழுந்து கொண்டான்.

தன் விழித்திரைக்குள் அவள் முகம் விழுகிறதா எனத் தேடினான்.

அந்த அழகுக் கும்பலினிடையே அழியாப் புன்னகை ஒட்டிய அவள் முகத்தைக் காணோம்!

ஏமாற்றம் தாக்கியது,

தீர்மானத்தோடு அவர்களை நோக்கி நடந்தான்.

அவர்கள் நடையை மிதமாக்கி, 'கிலுமுலு'வை மெல்லிய 'கிசுகிசுப்'பாக்கிக் கொண்டனர்.

இவன் அவர்கள் எதிரில் போய் நின்றான். அவளது நெருங்கிய தோழியான கமலியை மட்டும் நேராகப் பார்த்து, "உங்களோட கொஞ்சம் தனியே பேச வேண்டும்" என்றான்.

அவளை விட்டுப் புறாக்கூட்டம் கிலுமுலுவெனப் பறந்தது.

கமலி தலையைக் குனிந்தபடி அவன் முன்னால் நின்றாள்.

"எங்கே உங்கள் உயிர்ச் சிநேகிதி?" என்றான் வரதன் எடுத்த எடுப்பில்.

"நிம்மியா?" என்றாள் தலையை நிமிர்த்தி.

"ம்.."

இப்போது தயக்கங்களெல்லாம் நீங்கியவளாக அவனையே உறுத்துப் பார்த்தாள் கமலி. ஏளனச் சிரிப்பொன்றும் அவள் இதழ்களினுள் ஒடி ஒளிந்தது.

"எப்போ வந்தது இந்தத் திடீர்க் கரிசனை?" என்றாள் இகழ்ச்சி குரலில் தொனிக்க.

"ஏன்... ஏன்.. நான் சில காலம் சந்திக்காமலிருந்ததில் அவளுக்குக் கோபமா?"

"உங்களுக்கு ஆசை இருக்கிறபோதெல்லாம்... 'ஒரு நொடி பிரிந்தாலும் உயிர் வாழேன்...' என்று வசனம் பேசி வழிந்து கொண்டிருப்பீர்கள். அதுவே கொஞ்சம் சலிக்கத் தொடங்கிவிட்டால் வேறெங்காவது போய் ஒளிந்து கொள்வீர்கள்... உங்களுக்கு இதெல்லாம் சும்மா ஒரு விளையாட்டுத் தானே...?" கமலியின் குரல் மெல்லச் சூடேற ஆரம்பித்திருந்தது.

"அவளைப் பார்க்க வரமுடியவில்லை என்றால் அவளை வெறுத்துவிட்டேன் என்று அர்த்தமா? என் நிலைமை அறியாமல் அவளும் நீயும் இப்படிக் கோபப்படுகிறீர்கள்... சொல் கமலி, அவள் இப்போது வகுப்புக்கு வருவதில்லையா?"

"சொல்கிறேன்.. சொல்கிறேன்... ஆனால், உண்மையில் உங்கள் மனதில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களையும் நீங்கள் உணர்ந்து கொள்வது நல்லது..."

"என் மனதில் மாற்றங்களா? என்ன சொல்கிறாய்?"

"நிம்மியிடம் நீங்கள் உருகி உருகி வழிந்த அந்த நாட்கள் எனக்கு ஞாபகமிருக்கிறது. இப்போது அப்படியில்லை. நீங்கள் அவளை ஏமாற்றுவது போல என்னையும் ஏமாற்றிவிடலாம் என்றெண்ணாதீர்கள். உங்கள் மனம் மாறிவிட்டது."

"அபாண்டமாய்ப் பழி சொல்லாதே கமலி. என் மனம் ஒன்றும் மாறவில்லை.



தருவது முழடில்யன்

"வகுப்புக்கு மட்டுமில்லை. வேறு எங்கும் அவள் வெளிக்கிடுவதில்லை. அவள் பாவம் பேதை! ஆரைத்தான் நம்புவது? உங்களுக்கெல்லாம் கொஞ்ச கொஞ்சக் காலம் நேரம் கடத்துவதற்குத்தானே காதல் கத்தரிக்காய் என்று ஏமாற்றித் திரிவீர்கள்... சலித்துவிட்டால் அடுத்த கொப்புத் தாவி விடுவீர்கள். பெண்கள் பாவம் அழுதுகொண்டு வீட்டில் கிடந்து துடிக்க வேண்டியதுதான்..."

"ஏய்.. கமலி! ஏன் இப்படி வார்த்தைகளைத் தணலாய்க் கொட்டுகிறாய்? உன் தோழியின் கவலையை மட்டும்தான் நீ அறிவாய், என் சூழ்நிலை என்னவென்று தெரியாமலே கடுஞ்சொற்களை வீசி என்னைக் காயப்படுத்துகிறாய்..?"

"அடடா! உங்களுக்கு இன்சொற்கள் வேறு தேவையாயிருக்கிறதா? அதுதான் பேசிப் பேசி அவளை மயக்கிவிட்டு மாயமாய்த் தொலைந்தீர்களே. 'கனியிருக்கக் காய் கவர்வது நான் அல்ல, நீங்கள்தான் கனியை விட்டு வேறு காய் பிடிக்க அலைகிறீர்களோ என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது..."

"என்ன நீ... ஏதேதோ பேசிக் கொண்டே போகிறாய்? என் நிலைமை அறியாமல் உன் தோழிக்குப் பரிந்து பேசுவதாய் நினைத்துக் கொண்டு விஷ அம்புகளாய்ச் சொல்லெறிகிறாய். அன்றைக்கு என் நிலைமை வேறு. இப்போதிருக்கும் என் நிலைமை வேறு, நேரமின்மை தான் காரணம், அவளைப் பிடிக்காமலா நான் பார்க்காமலிருந்தேன்? இல்லை. கமலி, நீதான் அவளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்..."

நான் வராமலிருந்ததுக்கு நீயாக எதையோ காரணமாக்கப் பார்க்கிறாய்..."

"பொய் சொல்லாதீர்கள் வரதன். நானாக ஒன்றும் இயற்றவில்லை. உங்கள் மனதையே கேட்டுப் பாருங்கள். முன்பெல்லாம் நிம்மி ஒரு வேப்பங்காயைக் கொடுத்தாலும் ஆர்வத்தோடு வாங்கி 'ஆஹா! என்னமாய் இனிக்கிறது... இதுவேப்பங்காய் அல்ல வெல்லக்கட்டி!' என்று மெச்சிக் கொண்டாடும் மனநிலையில் இருந்தீர்கள். இப்போதோ குளிர்ந்த இனிய தண்ணீரைக் கொடுத்தாலும் 'அது.. இது சூடானது... உப்புக் கரிக்கிறது..' என்று சலித்துக் கொள்ளுமளவுக்கு உங்கள் மனநிலை மாறி விட்டது. ஆண் வர்க்கத்தின் இயல்பே இதுதானே.. ஆரம்பத்தில் கொஞ்ச நாட்களுக்கு எல்லாமே உங்களுக்கு உவப்பாயும் அற்புதமாயும் தெரியும். ஆனால் சில நாட்களிலேயே அது உங்களுக்குச் சலித்து விடும். அடுத்த மலருக்குத் தாவும் வண்டாகி விடுவீர்கள். வேறொன்றில் உங்கள் மனம் லயிப்புக் கொண்டு விடும். வரதன், என் நிம்மியை வந்து பாருங்கள்! அவள் எவ்வளவு நொந்து போயிருக்கிறாள் என்று..."

**வேம்பின் பைங்காய் என் தோழி தரினே,**
**'தேம் பூங்கட்டி' என்றனிர்; இனியே,**
**பாரி பறம்பில் பனிச்சுனைத் தெண்ணீர்**
**தை இத் திங்கள் தண்ணிய தரினும்,**
**'வெய்ய உவர்க்கும், என்றனிர்;**
**ஐய! அற்றால் அன்பின் பாலே,**

*(குறுந்தொகை: 196)*

## சிந்தியா பதில்கள்

★ **சிந்தியா! நல்ல நண்பர்களை தேர்ந்தெடுப்பது எப்படி?**

எஸ். கதிர்காமநாதன், பெரிய நீலாவணை.

*நாம் நன்றாக நடந்து*

★ **மரணத்தின் விளிம்பில் மனிதர்களுக்கு என்ன தோன்றும்?**

கே. குமரகுருபரன், வவுனியா.

*பக்குவப்பட்டவர்களுக்கு மெல்லிய புன்முறுவல் இருக்கும்.*

*சிலருக்குச் சொந்த பந்தங்களைப் பார்க்கத் தோன்றும். வேறு சிலருக்கு 'சில கடமைகளை செய்து முடிக்காமல் போகிறோமே' என்ற கவலை தோன்றும். இதெல்லாம் சாதாரணம். இதையெல்லாம் விட அசாதாரணமானது இது:*

*ஒரு நோயாளி நிலைமை கவலைக்கிடமாக இருந்தது. மருத்துவர் எவ்வளவோ போராடியும் அந்த நோயாளியின் நிலைமை மோசமாகிக் கொண்டே வந்தது.*

*இனியும் நோயாளியிடம் உண்மையை மறைக்க முடியாது என நினைத்த மருத்துவர் அந்த நோயாளியிடம்,*

*"இனி எனனால் எதுவும் செய்ய முடியாது. யாரையாவது பார்க்க விரும்பினால், அழைத்து வர ஏற்பாடு செய்கிறேன். யாரைப் பார்க்கப் போகிறீர்கள்?" என்று கேட்டார்.*

*நோயாளி, மருத்துவரை அருகில் அழைத்து, அவர் காதில், "வேறு ஒரு மருத்துவரைப் பார்க்க வேண்டும்!" என்றார்.*

★ **சிந்தியா! 'கடி'த்து ரொம்ப நாளாகிறதே?**

ஆர். சியாமளா, கிராண்ட்பாஸ்.

*எந்த மரத்தில் கதை படிக்கலாம்?*
*'நாவல்' மரத்தில்.*
*(உபயம்: உறவுக்காரச் சிறுமி)*

★ **கடவுளிடம் கேட்க முடியாத கேள்வி என்ன?**

கி.அருள்ராஜ், கொக்காகலை.

*நீர் இருப்பது உண்மைதானா என்று!*

★ **'பொம்பளை சிரிச்சாப் போச்சு புகையிலை விரிச்சாப் போச்சு' என்கிறார்கள். 'வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்' என்றும் சொல்கிறார்கள். எந்தப் பழமொழியைப் பயன்படுத்துவது சரி?**

ஜெ.லக்கி, பெரியகல்லாறு.

*பொதுவாகப் பழமொழிகளைப் பயன்படுத்தாதிருப்பது நல்லது.*



★ **சிந்தியா, நான் ஒருத்தியைக் காதலிக்கிறேன். அவளும் என்னைக் காதலிக்கிறாள் என்று தெரியும். ஆனால், நான் எவ்வளவுதான் அவளையே பார்த்துக் கொண்டிருந்தாலும் அவள் ஒரு கணமேனும் என்னைத் திரும்பிப் பார்க்கிறாளில்லையே.. ஏன்?**

எஸ்.திவ்யநாதன், திருகோணமலை.

*உங்களைப் பார்த்துத்தான் நீங்கள் தன்னைப் பார்க்கிறீர்கள் என்று அறிந்து கொள்ள வேண்டிய அவசியம் காதலிக்கப்படும் பெண்ணுக்குக் கிடையாது. காதலிக்கப்படுகிறவர்கள் எல்லோருமே தேவதைகள்தான். தேவதைகளுக்கு உடம்பெல்லாமே கண்களும் காதுகளும் தான்.*

★ **லைலா, பூமிகா, ராணி முகர்ஜி ஒப்பிட முடியுமா?**

ம.இதயசேகரன், அட்டன்.

*ராணி தமிழை விரும்பப் போவதில்லை. பூமிகாவை "நடியாதே" என்கிறாராம் சூர்யா. ஆக, லைலாவை ஒப்பிடுவதற்கு நீங்கள் சிம்ரனையும், ஜோதிகாவையும் தான் இழுத்திருக்க வேண்டும். போகட்டும். தோற்றத்தில் பார்த்தால் நீங்கள் குறிப்பிட்ட மூவருமே புன்னகையும் மெழுகும் கலந்து செய்த பொம்மைகள். கூடவே, மூவரும் தமிழர்களில்லை. ஆனாலும் இளைய தமிழரின் தூக்கத்தைக் கெடுப்பவர்கள்.*

★ **என் அபிமானப் பாடகர் உன்னி கிருஷ்ணன் முகவரி?**

எம்.ஏ.எஸ்.எச்., காத்தான்குடி-06.

*ராம்ஸ் ப்ளாட், இரண்டாவது மாடி, வெஸ்ட் கோர்ட்ரோடு,சென்னை 600 002.*

★ **சிந்தியாவுக்குப் பிடித்த அறிவிப்பாளர் யார்?**

ஆர்.பத்மினி, கொழும்பு-13.

*அனுமன்தான். அவன்தானே, கேட்போன் மனநிலை புரிந்து 'கண்டனன் கற்பினுக்கு அணியை' என்று மூன்று சொற்களிலேயே முழுதும் உணர்த்தியவன்.*

★ **'நரசிம்மா' எப்படி?**

எஸ்.யு.ஜீவராணி, கொழும்பு-10.

Mission Impossible, Charlie's Angels *போன்று நம்ப முடியாத காட்சிகளுடன் வந்த ஆங்கிலப் படங்களைத் தூக்கிச் சாப்பிடும் விதத்தில் ரீல் விடுகிறார்கள் விஜயகாந்த், திருப்பதி சாமி கூட்டணியினர். இதற்கு மேல் என்ன சொல்ல? பாவம் அகால மரணமடைந்து விட்ட இயக்குனர் பற்றி அவதூறுகள் வேண்டாம்.*

★ **'வெற்றிக்கொடி கட்டு'வுக்குப் பிறகு சேரனை எங்கே காணோம்?**

பீற்றர் ஜோன்ஸ், மன்னார்.

*அவரது 'பாண்டவர் பூமி' வருகிறது. இதிலும் வழக்கம்போல ஓர் அறிவுரையோடு வருகிறார். அதாவது கிராமத்தையும், வயிற்றுக்குச் சோறிடும் விவசாயத்தையும் விட்டு நகரம் நோக்கிப் படையெடுக்கும் இளைஞர்களுக்கு எச்சரிக்கையாக அமைந்திருக்கிறதாம் 'பாண்டவர் பூமி' கதை.*

★ **உமக்குப் பிடித்த குறள் எது?**

அஜந்தகுமார், அக்கரைப்பற்று.

*"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின்.பரந்து கெடுக உலகியற்றி யான்" என்னும் வள்ளுவச் சீற்றம்.*

# மன்னாதி மன்னன் 72

## மன்னனை விட்டகன்ற சனி பகவான்

இராஜகுமாரன்

தன்னுடைய அரண்மனையிலே தளபதியாக வந்து சேர்ந்த ஆதித்தன் என்ற பெயருடைய விக்கிரமாதித்தனுடைய உண்மை அடையாளம் தெரியாத மன்னன் மகேந்திரனும் அவன் மந்திரியும் எப்படியாவது ஆதித்தனை ஒழித்து விட்டு, அவனுடன் வாழ்ந்து வந்த ஏழு பெண்களையும் மன்னனின் இச்சைக்குரியவர்களாக ஆக்கிவிடுவதற்குத் துடித்தனர். ஆனால் ஆதித்தனோ மன்னனும் மந்திரியும் போட்ட திட்டங்களையெல்லாம் தவிடு பொடியாக்கிவிட்டு வெற்றி வீரனாகவே திரும்பி வந்தான்.

மதுராபுரியிலுள்ள நச்சுவாயுக்கள் சூழ்ந்த ரஸக் கிணற்றினுள் ஆதித்தனை மூழ்கடித்துவிட இறுதியாகத் திட்டமிட்டனர். அந்தக் கிணற்றைத் தான் போய்ப் பார்த்து விட்டு வர விரும்புவதாகக் கூறிய மன்னன், ஆதித்தனையும் அழைத்துக்கொண்டு அந்த ரஸக் கிணற்றடிக்குச் சென்றான். கிணற்றைச் சுற்றிக் கொண்டு வரும்போது மன்னன் தன்னுடைய முத்திரை மோதிரத்தை கிணற்றினுள் நழுவவிட்டான்.

விக்கிரமாதித்தன் வேதாளத்தின் மூலம் நடக்கப்போவதை முன்னதாகவே தெரிந்திருந்தமையினால், ஏற்கனவே செய்திருந்த ஏற்பாட்டின்படி அந்த மோதிரத்தை பாம்புருவில் இருந்த அனந்தன் தன் வாயினுள் அடக்கிக் கொண்டான்.

மன்னன் மகேந்திரன் தன்னுடைய முத்திரை மோதிரம் ரஸக் கிணற்றுக்குள் விழுந்து விட்டதைக்கண்டு படபடப்புடன் பதறினான். "அந்த முத்திரை மோதிரம் இல்லாமல் நான் ராஜ்ஜிய பரிபாலனம் செய்ய முடியாதே" என்று போலித்தனமாகப் பிரலாபித்தான். அந்த மோதிரத்தை கிணற்றினுள் இறங்கி எப்படியாவது வெளியில் எடுத்து தன்னிடம் தந்து விடுமாறு ஆதித்தனிடம் மன்னன் கெஞ்சினான்.

தான் முயற்சி செய்து மோதிரத்தை மீண்டும் எடுத்துவரப் பார்ப்பதாக ஆதித்தன் மன்னனிடம் வாக்களித்தான்.

ஆதித்தன் கிணற்றினுள் இறங்குவதற்கு முதற் படிக்கட்டுகளில் கால் வைப்பதைப் பார்த்துவிட்டு தன் குதிரையில் ஏறி மன்னன் மகேந்திரன் அரண்மனை நோக்கி வேகமாகச் சென்றான்.

தன்னுடைய ஆசைகளுக்கு இடை



யூறாக இருநத 'ஆதிததன இனி பிழைத்து வரப் போவதேயில்லை; என் இஷ்டப்படி ஆதித்தனுடைய பேரழகிகள் ஏழு பேரும் இனிமேல் என் அந்தப்புரத்தை அலங்கரிக்கப் போகிறார்கள்' என்று பெரும் எக்களிப்புடன் அரியாசனத்தில் ஏறி அமர்ந்து, காவலனைப் பார்த்து மந்திரியை உடனே அழைத்து வரும்படி கட்டளையிட்டான். அரசனின் கட்டளையை ஏற்று மந்திரியை அழைத்து வர ஒரு புறத்து வாயில் வழியாக காவலன் சென்ற அதே வேளை, அரசவையின் பிரதான வாயிலினூடாக உள்ளே வந்த காவலன் ஒருவன் "மகாராஜா தளபதி ஆதித்தன் அவர்கள் தங்களைக் காண வந்து கொண்டிருக்கிறார்." என்று கூவினான்.

காவலனின் இந்த அறிவித்தலைக்கேட்ட மன்னன் மகேந்திரன் பேயறைந்தவன் போல் சிம்மாசனத்தில் கற்சிலைபோல் அமர்ந்திருந்தான்.

மன்னன் அருகில் வந்த ஆதித்தன் எனும் விக்கிரமாதித்தன் தனது வலது கையை மன்னன் முன் நீட்டி "அரசே தாங்கள் ரஸக் கிணற்றுக்குள் நழுவ விட்ட முத்திரை மோதிரம் இது தானா என்பதைப் பாருங்கள்" என்று மன்னரிடம் மோதிரத்தைக் கொடுத்தான்.

நடுநடுங்கும் கரங்களால் அந்த மோதிரத்தை வாங்கிய மன்னன் என்ன சொல்வது என்ன செய்வது என்று தெரியாமல் பல கோணங்களில் மோதிரத்தை திரும்பித் திரும்பி பார்த்துவிட்டு அம்மோதிரம் தன்னுடையது தான் என்பதை மௌனமாகவே ஒத்துக் கொண்டான்.

இதே கால கட்டத்தில் ஆதித்தனை ஒழித்துக்கட்ட ரஸக்கிணறு திட்டத்தை வகுத்துக் கொடுத்த மந்திரியும் இங்கு வந்து சேர்ந்தார். தன்னுடைய திட்டம் இந்தத் தடவையும் பொய்த்துவிட்டதை உணர்ந்து கொண்ட மந்திரி "தளபதியாரே நீர் உண்மையில் அசகாய சூரன்தான்!" என்று கூறினான்.

முத்திரை மோதிரம் கிடைத்தமையினால் தான் பெரு மகிழ்ச்சியடைவதாகக் காட்டிக் கொண்ட அரசன், தளபதி ஆதித்தனை அவர் இல்லத்துக்குச் சென்றுவிட்டு அடுத்த நாள் வருமாறு கேட்டுக் கொண்டார். அரசவையை விட்டு விக்கிரமாதித்தன் வெளியேறு முன்னர் வெளியே இருந்து உள்ளே ஒரு வயோதிபர் நுழைந்தார். விக்கிரமாதித்தனை மரித்து மெதுவாக, "விக்கிரமாதித்தா என்னைத் தெரியவில்லையா?" என்று கேட்டார். அந்த வயோதிபரை ஏறிட்டுப் பார்த்த விக்கிரமாதித்தனுக்குச் சுலபமாக அவரை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. இருப்பினும் அவரைப் பார்த்து கை கூப்பி வணங்கினார்.

அந்த வயோதிபரின் உருவத்தைக் கண்ட மன்னன் மகேந்திரனும், மந்திரியும் திகைப்புற்றனர். அவருடைய உருவத்தில் ஒரு தெய்வீகக் கலை இருப்பதைக் கண்டு அதிசயித்தனர். அந்தக் கிழவருக்கும் தளபதி ஆதித்தனுக்கும் எத்தகைய நெருக்கம் இருக்கிறது என்பதனை அறிந்து கொள்ள மன்னனும் மந்திரியும் ஆசைப்பட்டனர். விக்கிரமாதித்தனும் வயோதிபரும் அரசவையிலிருந்து வெளியேறிச் சென்று கொண்டிருந்தபோது, அவர்கள் கண்களில் தென்படாமல் மன்னனும் மந்திரியும் அவர்கள் பின்னே நடந்து சென்றனர்.

அந்த வயோதிப உருவம் விக்கிரமாதித்தனைப் பார்த்து, "விக்கிரமாதித்தா என்னை நன்றாகப் பார். கடந்த ஏழரையாண்டுகள் உன்னைப் பிடித்திருந்த சனி பகவானே நான். இன்றுடன் நான் உன்னை விட்டு விலகுகிறேன். அடுத்த ஏழரையாண்டுகளும் மன்னன் மகேந்திரனிடம் நான் ஒட்டிக் கொள்ளப் போகிறேன். இத்தனை வருடங்களும் என்னுடைய ஆணையை ஏற்று பய பக்தியுடனும் கட்டுப்பாட்டுடனும் ஒழுகி வந்த உனக்கு, இனிமேல் எத்தகைய துன்பமும் வந்து அணுகாது. இனிமேல் உஜ்ஜைனின் மாகாளிப் பட்டனத்துக்குச் சென்று மகிழ்ச்சியாக வாழக் கடவாய்" என்று சனி பகவான் ஆசி கூறினார்.

சனி பகவானின் பாதங்களைத் தொட்டு வணங்கிய விக்கிரமாதித்தன் "மகாபிரபு இத்தனை காலமும் மன்னன் மகேந்திரன் எனக்குத் தினமும் ஆயிரம் பொன் வேதனம் அளித்து வாழ்க்கை வசதிகளையும் செய்து கொடுத்தான். ஆகவே அறியாமையால் ஆசைகளை வளர்த்துக் கொண்ட அவனுக்கு தாங்கள் அதிகம் பழுவைச் சுமத்தாமல் அருள் புரிய வேண்டுகிறேன்!" என்று கேட்டுக் கொண்டார்.

சனி பகவானுக்கும் விக்கிரமாதித்த மாமன்னனுக்குமிடையயல் இடம் பெற்ற உரையாடல்களைக் கேட்ட மன்னன் மகேந்திரனும் மந்திரியும் வியப்புற்றனர். மாமன்னன் விக்கரமாதித்தன் எம்மிடம் சேவகம் புரிய வந்து சேர்ந்திருக்கிறாரே. அவருடைய பெருமைகளை நன்றாக அறிந்தும், அப்பெருமகன் எம்மத்தியில் வாழ்ந்த போதும் அன்னாரை உணராமல் அவரை அழித்தொழித்துவிட பெரும் முயற்சிகள் எடுத்த பாவிகளாகிவிட்டோமே நாம் என்று மன்னமும் மந்திரியும் பதற்றமுற்றனர்.

சனி பகவான் மறையுமுன்னரே மகேந்திரனும் மந்திரியும் ஓடிச் சென்று இருவரின் பாதங்களையும் தொட்டு வணங்கி "எங்கள் அறியாமையை மாமன்னர் விக்கிரமாதித்தன் மன்னித்தருள வேண்டுகிறோம்" என்று பிராபித்தனர். அவர்கள் மூவரையும் ஆசிர்வதித்து விட்டு சனி பகவான் மறைந்தருளினார்.

மன்னன் மகேந்திரன் மந்திரியை அரண்மனைக்கு அனுப்பி பட்டத்து யானையையும் மேளதாளங்களையும் தருவித்து விக்கிரமாதித்தனுக்கு மாபெரும் வரவேற்பளித்து அரசவைக்கு அழைத்துச் சென்று பலதரப்பட்ட மரியாதைகளையும் செய்வித்தார். மகேந்திரனுடைய அரியாசனத்தில் அமர்ந்திருந்த விக்கிரமாதித்தன் மகேந்திரனைப் பார்த்து,

"மகேந்திரா! என்னுடைய மனைவியர்களான ஏழு பெண்களையும் நீ விரும்பினாய். அவர்களில் இரத்தினமாலையை மட்டும் தவிர்த்து ஏனைய ஆறு பெண்களையும் நீ மணம் புரிந்து வாழ்வாயாக. இரத்தின மாலை தேவலோக மங்கை. என்பதனால் அவளை நீ மணப்பது முறையல்ல" என்று கூறினார்.

மன்னன் மகேந்திரன் "மாமன்னர் விக்கிரமாதித்தன் அவர்களே தங்களை இன்னார் என்று அறிந்து கொள்ளாமல் பல துன்பங்களைத் தங்களுக்குத் தந்துவிட்டோம். தயவு செய்து அவற்றைப் பொருட்படுத்தாமல் என்னை மன்னித்தருள வேண்டுகிறேன்" என்று பணிந்து கேட்டுக் கொண்டார்.

விக்கிரமாதித்தன் "மன்னா இந்த ஏழரை வருடங்களும் நான் இங்கு வாழ்வதற்கு போதுமான பொன்னும் பொருளும் தந்து எனக்கு எக்குறையுமில்லாமல் நானும் எனது மனைவியரும் சுகமாக வாழ்வதற்கு வசதி செய்து கொடுத்த உம்மை நான் நன்றி பாராட்டக் கடமைப்பட்டவன். நீர் செய்த உதவிகளுக்காக எனது மனைவியர் என்ற அந்தஸ்த்திலிருந்த ஆறு பெண்களையும் உனக்கே அளிக்கிறேன். அவர்களை ஏற்று பல்லாண்டு காலம் மகிழ்ச்சியாக வாழ ஆசி கூறுகிறேன்" என்று கூறிவிட்டு அமைச்சரை அழைத்து தனது அரண்மனையிலுள்ள பொன், முத்து, இரத்தினம் ஆகிய அனைத்துச் செல்வங்களையும் எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். இதன் பிறகு எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டு இரத்தினமாலையையும் அழைத்துக் கொண்டு வேதாளத்தின் தோள் மீதேறி உஜ்ஜைனின் மாகாளிபுரம் நோக்கிப் புறப்பட்டார். போகும் வழியில் முன்னர் தான் கண்டி குளத்தடியில் ஜந்திரனையும், அனந்தனையும் இறக்கி விட்டார்.

அவர்கள் இருவரும் தங்கள் சாபம் நீங்கி சுய உருவம் பெற்றனர். உஜ்ஜயினி மாகாளிப்பட்டணத்தை அடைந்ததும் நகரில் எல்லைப் புரத்தில் அமைந்த தனது குல தெய்வமான காளிகாம்பாள் கோவிலில் வணங்கி அம்மாளின் தரிசனம் பெற்றார்.

விக்கிரமாதித்த மாமன்னனுடைய வருகையை முன்கூட்டியே அறிந்த மந்திரி பட்டி அங்கு அவர்களுக்காகக் காத்திருந்தான்.

(மன்னன் வருவான்..)


# காதில பூ கந்தசாமி

கீழுள்ள சத்தியக் கடதாசியில் கண்ணை மூடிக் கொண்டு கையெழுத்திட்ட பின்னர்தான் நீங்கள் மேற்கொண்டு வாசிக்க அனுமதி பெற்றவர்களாவீர்கள். அதனை வெட்டி, அல்லது போட்டோ பிரதி செய்து 'காதில பூ கந்தசாமி' என்ற தலைப்பில் தினமுரசுக்கு அனுப்புவோர் அபிமான வாசகர் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெறுவீர்கள். விபரம் கீழே.

**சத்தியக் கடதாசி:**

நோட்டீஸ் பலகையிலுள்ள காதில பூ கந்தசாமியின் சத்திய வாக்கியத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டு, எனக்குச் சுயமாகச் சிந்திக்கும் உரிமை இல்லையென ஏற்றுக்கொண்டு, அவர் கூறுகின்ற அத்தனை பொய்களையும் எள்ளளவு சந்தேகமுமின்றி நம்புவேன், அதைத் தவிர வேறொன்றையும் நம்பமாட்டேன், இப்படி நம்புவதன் விளைவுகளுக்கு நானே பொறுப்பாளியென சுய நினைவுடன் இத்தால் நான் உறுதியளிக்கிறேன்.

திகதி:............... பெயர்:..................... ஒப்பம்:...................




*அபிமான வாசகர் போட்டியில் ஏழாவது: தமிழ் அரசியல்வாதிகளில் புளுகர் மன்னரென்று முடிசூடக்கூடிய புளுகரொருவரையும் அவர் கூறிய அதி பெரும் புளுகையும் எழுதுக. முடிவுத் திகதி ஆகஸ்ட் 31.*

ஏனப்பா இப்பிடி நாட்டை அல்லோலகல்லோலப் படுத்திறாங்கள். பாராளுமன்றத்தக் கூட்டவேணுமெண்டு குதியாக் குதிக்கிறாங்கள். அதக் கூட்டுறதில என்ன பெரிய கஷ்டமோ தெரியாது. எங்கட பக்கத்து வீட்டு ஆச்சிய விட்டால் நல்ல வடிவாக் கூட்டிக் குப்பையையும் அள்ளிக் குப்பைத் தொட்டிலுக்க போட்டுட்டுப் போயிடுவா. மனிசி, எந்தப் பெரிய முத்தத்த நாளுக்கு மூண்டுதரம் கூட்டுறவ வெண்டு தெரியுமே! ஆக, என்ன பாராளுமன்றம் கொஞ்சம் பளிங்குக்கல்லு பதிச்சிருக்கிறதால வீழுந்தாக் கிழுந்தால் பல்லுத் தெறிச்சுப் போடுமெண்டதுதான் பயம். அதவிடுங்கோ, இவங்கள் கூட்டினாலென்ன கழிச்சாலென்ன, ஆக மிஞ்சி என்ன கணக்கேறப்போகுது? எங்கட கடன் கணக்குத்தான் தீர்ந்தபாடில்ல. கடனை அடைக்கக் கடன்படவேண்டிய காலமாப் போட்டுது. அந்தக்காலத்தில என்னட்ட இத்தனை லட்சம் சொத்திருக்குதெண்டால் பெருமை. இப்ப எனக்கு இவ்வளவு கடனிருக்குதெண்டு சொல்லுறதுதான் பெரிய பெருமையாக் கிடக்குது. அவருக்கு பாங்கில இத்தன மில்லியன் ஓ.டி. எண்டு சொன்னால் ஆள் பெருங் காய். "ஓ.டி. எடுக்காத யாபாரமும் ஒரு யாபாரமே" எண்டு கேக்கிற காலம் கண்டியலோ. ஓடியோடி உழைச்ச காலம்போய் ஓ.டி. எடுத்து உழைக்கிறகாலம் வந்திருக்குது. எது எப்பிடியும் இருக்கட்டும். நாங்கள் எங்கட அலுவலப் பாப்பம். அதாவது கண்டியலோ நாட்டு நடப்பப்பற்றி நான் அறிஞ்ச நாலு விசயத்தக் கதைப்பமெண்டுறன்.

ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டமா, கூத்தாடிகள் இரண்டு பட்டால் ஊருக்குக் கொண்டாட்டமா எண்டு சொல்லத் தெரியாத கணக்கா இப்ப தலைமைச் சண்டைகள் வலுத்துப் போட்டுதுகண்டியலோ. நானே தலைவன், நானே மந்திரியெண்டு நாளுக்கொருத்தர் பிரகடனப் படுத்திறதும், இங்கையொரு மாநாடு அங்கையொரு மாநாடென்று ஆளுக்கொரு மாநாடுகள் ஏட்டிக்குப் போட்டியா நடத்திக் காட்டுறதும், ஆளுக்கொரு டீ.வியை இழுத்துப் பிடிச்சுவைச்சு மாறி மாறிப் பேச்சும் பேட்டியுமா வெழுத்து வாங்கிறதுமாக் கழியுது காலம். ஒற்றுமையைப்பற்றி மற்றையவைக்குப் போதிச்சவையெல்லாம் இப்ப ஒற்றுமை என்ன விலையெண்டு கேக்கிற நிலைக்குப் போய் நிக்கினம். நாங்களென்ன செய்ய?

தலையிருக்க வாலாடக்கூடாதெண்டு சொல்லுறவையல், உண்மைதான். ஆனால் தலையெது வாலெதெண்டு கண்டுபிடிக்க ஏலாத ஒரு வீந்தையான விலங்கொண்டு எங்கட அரசியல் பண்ணையில வளருதுங்கோ. அதுக்கு அடிக்கடி ஒரு தலை முளைக்கும். பிறகு அது இருந்த இடம் தெரியாமல் அமுங்கிப்போக அடுத்த பக்கத்தால மற்ற ஒரு தலை கிழம்பும். ஒரு தலை கதைச்சதை மற்றத் தலை மறந்து போகும். போறது மட்டுமில்ல ஒண்டுக்கு ஒண்டு எதிர்மாறாய் நடக்கும். கிழக்கில கொஞ்சக்காலம் ஒரு தலை, தலை தெறிக்கப் பேசிக் கொண்டிருந்துது. அறிக்கை அறிக்கையா அடுக்கிக்கொண்டு போச்சுது. அடுத்த தேர்தலோட அதிண்ட கதை முடிஞ்சுது. வடக்கில இருந்து மற்றொண்டு வெளிக்கிட்டிருக்கு. அது இப்ப அவுட் ஓப் கொண்றோலா ஓடிப்போய் எதிர்க்கட்சியிண்ட முதுகில சவாரிவிடப் பாக்குது. இத்தனைக்கும், செயலாளர் எண்டு சொல்லிறவர் செயலிழந்தவராப் போய்க் கிடக்கிறார். யாரிட்டச் சொல்லியழ? கூட்டாய் அணிசேரச் சொன்னவை இப்பிடிக் கூறுகெட்டுப் போகலாமோ?

எக்கேடும் யார்கெட்டுப் போகட்டும், எமக்கென்ன எண்டிட்டு இருக்கலாமோ நான்? இருந்தால், நான் காதில பூ வைச்சதில என்ன புண்ணியம்பாருங்கோ? இப்பிடியொரு நிலை ஏதேனும் ஒரு காலத்தில வருமெண்டுதான் நான் அப்பவே ஐடியாப் பண்ணி ஒரு ஏற்பாட்டச் செய்து வைச்சனான். அதால பாருங்கோ இப்ப இந்தக் கட்சிகளெல்லாம் தலைமையிழந்து திசையறியாமல் தலைதெறிக்க ஓடுற நேரத்தில ஒரு சடன் பிறேக்கப் போட்டுத் தங்களத் தாங்களே திரும்பிப் பாக்க வைக்க ட்ரைபண்ணிப் பாக்கப் போறன். எப்பிடியெண்டு கேப்பியல். அது எப்பிடியெண்டு நான் சொல்லிறதக் கேட்டு அதிசயிக்கப் போறியல். அது கண்டியலோ, இப்ப விஞ்ஞானத்தில கண்டு பிடிச்சிருக்கினமே 'குளோனிங்', அதே வித்தையப் பாவிச்சுத்தான். குளோனிங்கால ஒரே ஆளப்போல இன்னொருத்தரச் செய்யலாமெல்லே. எங்கட செத்துப் போன தலைவர்களைக் குளோனிங் முறையால திரும்ப உருவாக்கி இப்பத்தயத் தலைவர்களோட பேச விடப் போறன். இதுக்காக நான் அமிர்தலிங்கத்தைக் கடிச்ச அட்டை, அஷ்ரப்பைக் கடிச்ச நுளம்பு, சிறீசபாரத்தினத்தைக் கடிச்ச தெள்ளு, பத்மநாபாவைக் கடிச்ச பேன் எண்டு எல்லாத்தையும் பத்திரமாப் பிடிச்சு பிசினுக்குள்ள பொதுக்கி வைச்சிருக்கிறன். இந்தப் பூச்சிகள் குடிச்ச தலைவர் மாரிண்ட ரத்த அனுவில இருந்து யுரசிஸ் பார்க்கில டைனோசரச் செய்ததுமாதிரித் திரும்பவும் தலைவர்களை உருவாக்கச்சொல்லி, குளோனிங்கக் கண்டுபிடிச்ச விஞ்ஞானிகளிட்ட உடனேயே அனுப்பிப் போட்டன். இப்ப கேள்விப் பட்டிருப்பியல் இத்தாலியில மனிசக் குளோனிங் செய்யப்போறதாய். அது வேற ஒண்டுமில்ல. நான் அனுப்பின விசயந்தான். கெதியில மறைந்த தலைவர்மார் வருவினம். இப்பத்தத் தலைவர்மாரிட்ட கேள்வி கேக்கப் போயினம். அடுத்த முரசில ஆனந்த சங்கரியை அமிர்தலிங்கம் சந்திப்பாரெண்டு நினைக்கிறன். பொறுத்திருந்து பாருங்கோவன்.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

Regd. as a News Paper at the G.P.O. (QD/38/NEWS/2001)



3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு



SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணழகுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657




அமெரிக்காவிற்கு உட்பட்ட பஹாமஸ் தீவுகள் உல்லாசப் பிரயாணிகள் அதிகம் வந்து செல்லும் ஒரு நாடாகும். உலகப் பணக்காரர்களில் பெரும்பாலானோர் தமது விடுமுறையைக் கழிக்க இங்கு ஆஜராகி விடுவார்கள்.

உலகப் பணக்காரர்கள் உல்லாசமாகப் பொழுதைப் போக்க இங்கு வசதிகள் ஏராளம். இங்குள்ள உல்லாச விடுதி ஒன்றின் பெயர் 'கலெக்ரிக் ஃபென்டஸி' உலகிலேயே அதிகக் கட்டணம் அறவிடப்படும் விலையுயர்ந்த விடுதிகளில் இதுவும் ஒன்று.

இந்த உல்லாச விடுதியில் விசேட அம்சம் யாதெனில், ஹொட்டல் பணியாளர்களாக ரோபோக்கள் எனப்படும் இயந்திர மனிதர் பணியாற்றுவது தான். உலகிலேயே முதன் முதலில் ஹொட்டல் ஒன்றில் ரோபோ பணியாளர் பயன்படுத்தப்பட்டது இந்த ஹொட்டலில்தான்.

இந்த ஹொட்டலில் தங்கியுள்ள உல்லாச அழகி ஒருத்தியை ரோபோ ஒன்று கவனிக்கும் காட்சியைத்தான் படத்தில் பார்க்கிறீர்கள். தனக்குத் தேவையானவற்றை அந்த ரோபோ மூலம் பெற்றுக் கொள்கிறாள் அந்த அழகி.




முன்பெல்லாம் மேற்குலக நாடுகளில்தான் நவீன மயமான கட்டடங்களும் அமைப்புக்களும் உருவாவதுண்டு. ஆனால் எதிர்காலத்தை மனதில் கொண்டு காலத்திற்கேற்ற சகல வசதிகளையும் உள்ளடக்கிய கட்டடங்கள் இப்போதெல்லாம் தூரகிழக்கு நாடுகளில் மும்முரமாக முளைத்து வருகின்றன. படத்தில் காணப்படுவது ஹொங்கொங்கில் நிறுவப்பட்டுவரும் முற்றிலும் நவீனமயமான விமான நிலையத்தின் மாதிரித் தோற்றமாகும்.

விமான நிலையங்கள் வெறுமனே விமானப் பயணிகளை ஏற்றியிறக்கும் பணியுடன் மட்டும் நின்று விடாமல், ஒரு மனிதனுக்குத் தேவையான சகலவிதமான வசதிகளையும் கொண்டதாக இனிமேல் வரும் காலங்களில் அமைக்கப்படவிருக்கின்றன. தங்குமிட வசதிகள், சந்தைகள், விளையாட்டுத் திடல்கள், நீச்சல் தடாகங்கள் ஆகிய பொழுதுபோக்கு அம்சங்களுடன் எதிர்கால விமான நிலையங்கள் அமைக்கப்பட்டுவருகின்றன. இந்த நவீன விமான நிலையத்தின் மேற்புறத் தோற்றம்தான் இது.

---

நன்மை கருதி ஒரு காரியத்தைச் செய்யப்போய், அதனால் எதிர்மாறான விளைவுகள் ஏற்படுவதுண்டு. இப்படியான ஒரு சம்பவம் சில காலத்துக்கு முன்னர் நியூஸிலாந்து நாட்டில் நடைபெற்றிருக்கிறது. அவுஸ்திரேலியாவில், மிக அடர்த்தியான மிக மென்மையான வால்களைக் கொண்ட அணில் போன்று படத்தில் காணப்படும் ஒரு பிராணி மிக அதிகமாகக் காணப்பட்டது.

'ஒப்போஸம்' என்பது அதன் பெயர்.

'ஒப்போஸம்' என்ற பிராணியின் வால் ரோமங்களைக் கொண்டு ஆடைகள் தயாரித்தால் கடும் குளிர் காலத்தில் நல்ல பலனளிக்கும் என்று கருதிய சிலர் அப்பிராணிகள் சிலவற்றை நியூஸிலாந்தில் 1853ம் ஆண்டு கொண்டு போய் வளர்க்கத் தொடங்கினர்.

நாளாவட்டத்தில் இந்தப் பிராணிகள் மளமளவென்று பெருகி இன்று அந்த நாட்டு மக்களின் தொகையைவிட 19 மடங்கு அதிகரித்து விட்டன. இவை நாளொன்றுக்கு 20 ஆயிரம் தொன் பச்சைப் பயிர்களை உரித்துத் தின்று விடுகின்றன. எனவே இப்போது இந்தப் பிராணிகளின் தொகையை குறைக்க நியூஸிலாந்து அரசாங்கம் பெரும் பாடுபட்டு வருகிறது.




வித்தியாசமான மோஸ்தரில் இந்த மொடல் அழகி அணிந்திருக்கும் காதணி சுத்தத் தங்கத்தினால் செய்யப்பட்டு, பட்டை தீட்டப்பட்ட வைரக்கற்கள் பதிக்கப்பட்டது.


642 ஜொலிக்கும் வைரக்கற்கள் கொண்டு செய்யப்பட்ட இந்தக் காதணி, இந்தியாவில் நடைபெற்ற நவீன ஆபரணத் தயாரிப்பாளர் போட்டியில் முதல் பரிசைத் தட்டிச் சென்றது.





---

உலகின் பல நாடுகளுக்குச் சென்று, எலிப்பொறிகளைச் சேகரிப்பது ரெய்ன்ஹார்ட் ஹெல்விக் என்ற ஜேர்மனியரின் பொழுதுபோக்கு. 1964ம் ஆண்டில் இருந்து 66 நாடுகளுக்குப் பயணம் செய்து, இதுவரை இவர் 2 ஆயிரத்து 334 வகையான எலிப்பொறிகளைச் சேகரித்து கின்னஸில் தனது பெயரைப் பொறித்துள்ளார்.

படத்தில் காணப்படும் இந்த எலிப்பொறியும் இவரது சேகரிப்புக்களில் ஒன்றுதான். மிகப்பழமை வாய்ந்த இந்தப் பொறி எகிப்து நாட்டில் இருந்து கொண்டுவரப்பட்டது. இதில் ஒரே சமயத்தில் 10 எலிகள் சிக்கிக்கொள்ளும்.




வடக்கு கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களின்
முன்னணி அரசியல் சக்தியான ஈ.பி.டி.பி.யின் இணையத்தளம்




சமாதானம் — ஜனநாயகம் — சமூகமுன்னேற்றம்



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 8A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் ஆக.26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.